# வடவை மாதா குரலொலி


வடவை மாதா குரலொலி
ஆசிரியர்: மு.சேவியர் சந்திரகுமார்
ஆகஸ்ட் 2012, குரல்–16, ஒலி–1



# வடவை மாதா குரலோலி-2012

*ஆசிரியர்:*
**எம்.சேவியர் சந்திரகுமார்**

*ஆசிரியர் குழு உறுப்பினர்:*
**டி.எம். ஜேம்ஸ் மார்ட்டின்** மற்றும் பலர்

*வடிவமைப்பு:* **ஓவியர் மணி**

*அச்சகம்:*
**ஜே.எம்.பிராசஸ்,** சென்னை

*வெளியிடுபவர் மற்றும் ஆசிரியர்:*
**எம்.சேவியர் சந்திரகுமார்**
1/448, பிள்ளையார் கோவில் தெரு,
கேளம்பாக்கம் - 603 103.
காஞ்சிபுரம் மாவட்டம்.

*தொலைபேசி:*
9884538281 / 044-32212846

*மின்னஞ்சல்:*
icdsxavier@gmail.com


## உள்ளே....


சிதையாத கை, அழியாத உடல் சாத்தியமா...
சேதமே இல்லாத 250 புனிதர்கள்... 02

இயேசுவின் காட்சி... நடந்தது என்ன?
- சொந்த அனுபவங்களின் தொகுப்பு 14

இயேசுவை சித்தரவதை செய்தது எப்படி..? 26

இயேசு நம்பத்தகுந்தவரா?
இயேசுவுக்கு நாம் நம்பத்தகுந்தவரா? 30

இயேசுவின் சீடர்களின் கடைசி தருணங்கள்... 32

வாசகர் கடிதம், விவாத மேடை 33

இப்போதுள்ள போப்பாண்டவர் உலகின் கடைசி
போப்பாண்டவரா..? 38

மாதாவின் வாழ்க்கை 46

அரபு நாடுகளின் இப்போதைய கலவரங்கள்...
உலக முடிவையா காட்டுகிறது..? - ஆய்வுக் கட்டுரை 48


### ஓராயிரத்தில் ஒரு தகவல்...

கிறிஸ்தவ மதத்தின் சிறப்பை சொல்ல புகுந்தால், ஒன்றல்ல இரண்டல்ல, ஓராயிரம் தகவல்களைக் கூறலாம். ஓராயிரத்தில் ஒரு தகவலைச் சொன்னாலே ஒரு தனி புத்தகம் போட வேண்டிவரும்.

அத்துணை சிறப்புமிக்க தகவல்களில் ஐந்து மட்டும் இவ்வருட இதழில்... மீதமுள்ள 995 தகவல்கள் எப்போதோ?

- **ஆசிரியர்**

### வாசகர்களுக்கு ஒரு வேண்டுகோள்

கருத்துச் சுரங்கமாக, விஷயங்களின் கருவூலமாக, படிக்கவும், பாதுகாக்கவும் உகந்த புத்தகமாக தயாரிக்கப்பட்டிருக்கிறது இவ்வருட வடவை மாதா குரலொலி!

புத்தகத்தை வாங்கி மூலையில் போடாமல், முழுக்க வாசியுங்கள்; கருத்துக்களை ஆசிரியருக்கு எழுதியனுப்புங்கள். அதுதான் உங்களின் ஆதரவின் அடையாளம்.

- **ஆசிரியர்**

அருட்திரு. நெல்சன் பால்ராஜ், வடக்கன்குளம் பங்குத்தந்தையாக, வட்டார முதன்மைக் குருவாக, பணியேற்று நான்கு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன!

விசுவாச வாழ்க்கையை மக்களிடையே பரவச்செய்ய இவர் மேற்கொள்ளும் செயல்கள், சுத்த இருதயத்துடன் செய்யப்படுவதாகும் என்பதில் சந்தேகமில்லை.

இவரது பணி சிறக்க வாழ்த்துக்கள்!!



சமீபத்தில், அதாவது சென்னை உட்பட இந்தியாவெங்கும் புனித தொன்போஸ்கோவின் உடல் எடுத்துச் செல்லப்பட்டு மரியாதை செய்யப்பட்டது.

தமிழ்நாட்டின் பல பகுதிகளில், குறிப்பாக சென்னை ஆர்மீனியன் தெருவிலுள்ள புனித அந்தோனியார் கோவில் என்று பிரபலமாக பேசப்படும் செயின்ட் மேரிஸ் தேவாலயத்தில் அவரது உடல் வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அப்படிஎன்ன விசேஷம் இந்த யாத்திரைக்கு என்று விசாரித்த போது கிடைத்த தகவல் சுவாரசியமானவை!

புனிதரின் நாமத்திலே வேண்டுபவருக்கு, இயேசுவின் அருளால் பலவிதமான அற்புதங்கள் உலகமெங்கும் நடந்து வந்ததையொட்டி புனிதர் பட்டம் வழங்கும் முடிவை போப்பாண்டவர் 1929ல் அறிவித்தார்.

அதனையொட்டி, அடக்கம் செய்யப்பட்ட அவரது உடலை தோண்டியெடுக்கும் பொழுதுதான், அந்த அற்புதத்தைப் பார்த்தார்கள்.

# சிதையாத கை, அழியாத உடல் – சாத்தியமா?







*அவரது வலது கை அழுகாமல், சிறிதும் சிதையாமல் அப்படியே இருந்தது!*

*குருவானவராக ஆரம்பித்த புனித தொன்போஸ்கோ ஆன்மிக வாழ்க்கையின் பலன் பதினேழாயிரம் ஆண் துறவிகள் பதினாறாயிரம் அருட்சகோதரிகள் என்று உலகமெங்கும் மிகப்பெரிய சபையாக விரிந்திருக்கிறது!*

# – உலகம் முழுவதும் எடுத்து செல்லப்படும் புனித தொன் போஸ்கோவின் உடல்...!

*புனித தொன்போஸ்கோ, சிறந்த பேச்சாளர்; இளைஞர்களை ஈர்க்கும் புத்தங்களை எழுதுவது அவரது தனிச்சிறப்பு.*

*இவரது ஏராளமான சபைகள் மூலம் இளைஞர்கள் ஆயிரக்கணக்கில் ஈர்க்கப்பட்டது இவரது சேவைக்கும், ஆற்றலுக்கும், பக்திக்கும் கிடைத்த பரிசாகும்!*

*இவரது ஒவ்வொருஅசைவிலுமே ஜெபசிந்தனையோடு செயலாற்றியதன் விளைவு, ஏராளமான அற்புதங்கள் நிகழ்ந்தன.*

# ஒன்றல்ல... இரண்டல்ல... சேதமே இல்லாத 250 புனிதர்களின் உடல்கள்...

பொதுவாக, கத்தோலிக்கத் திருச்சபையைப் பொறுத்த மட்டில், யாராவது அவர்களின் கோவிலிலோ அல்லது அது சம்பந்தப்பட்ட இடங்களிலோ ஏதோ ஒரு அற்புதம் நடைபெற்றது என்று பக்தர்கள் பலர் கூறினாலுங்கூட, திருச்சபையின் தலைமை, ஒருபோதும் அதனை அப்படியே ஏற்றுக்கொள்ளுவதில்லை.

ஏனென்றால், பக்தர்கள் தங்களது ஆர்வ மிகுதியில், மூடப்பழக்க வழக்கங்களைக் கூட, அற்புதம் என்று கதை கட்டக்கூடும் என்பதால் திருச்சபை தலையிட்டே அதனை உண்மையா இல்லையா என்று முடிவு செய்யும்!

இதுபோன்று கதை விடுவது நமது நோக்கமல்ல!

உள்ளதை உள்ளவாறு, இருப்பதைச் சொல்லுவதே நமது நோக்கம்!

ஒன்றல்ல... இரண்டல்ல... சேதமேயில்லாத 250 புனிதர்களின் உடல்கள்.

இப்பொழுதும், ''இரசாயனம் கலந்து பாதுகாப்பார்களாக்கும்...!'' என்று கூறுவதற்கு நம் ஆட்களுக்கு எவ்வளவு நேரம் ஆகும்?

இயற்கையான சம்பவங்களின் தொகுப்பே இது; இனி... உங்கள் சிந்தனைக்கும் முடிவுக்கும்''!



புனித கேதரின் லெபோரேவின் அழியாத உடல்



*நாட்பட்ட வியாதிகளை சுகமாக்கினார், நொண்டிகளை நடக்கச் செய்தார், ஏன் இறந்தவரைக் கூட ஒருமுறை உயிரோடெழுப்பினார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்...!*

*அபரிமிதமான தீர்க்கதரிசன வரம் பெற்ற இப்புனிதர், நடக்கும் காரியங்களை முன்னறிவித்தவர். இவருடைய அழியாத வலது கையோடு கூடிய உடல்தான் இப்பொழுது இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டது. கைதவிர பிற பாகங்கள் மெழுகினால் செய்யப்பட்டது என்பது ஒரு விசேஷம்.*

ஜெப சிந்தனையோடு படியுங்கள்! படித்து முடிக்கு முன், உங்கள் உள்ளத்தில் ஏற்படும் அமைதியே இது உண்மை என உனர்த்தட்டும்...

இறைவன் இயேசுவை மறுதலிக்க மறுத்த 'குற்றத்திற்காக', மார்பு அறுக்கப்பட்டு, பின்னர் உயிரோடு எரிக்கப்பட்ட புனித அகதாவின் உடலின் கருகிய பாகங்கள்தவிர மீதி பாகங்கள், பாரிஸ் நகர தேவாலயத்தில் இன்றுவரை வைக்கப்பட்டுள்ளது.

பிரான்சு நாட்டில் பிறந்த புனிதையாகிய பெர்னதத், 1909 ஆம் ஆண்டு இறந்தவர்; அவரது உடலை 30 ஆண்டுகளுக்குப் பின்னர் தோண்டியெடுக்க, இன்றுவரை அவரது கைகளும் முகமும், ஒரு சிறிதும் சிதையாமல் இருக்கின்றன. அவரது உடல் செயின்ட் பெர்னதத் இல்லம் என்ற

## - உலக மகா அதிசயங்களின் சிறு தொகுப்பு...

எந்தவித சேதமுமில்லாது இன்று வரை அப்படியே இருக்கிறது என்றால் யாருக்கு மகிமை! அவர் யாரை மறுதலிக்க மறுத்தாரோ, அந்த இயேசுவுக்கு தானே? மார்பு கேன்சர் நோயாளிகள் இவரிடம் ஜெபித்தால், இயேசுவிடமிருந்து அற்புதத்தைப் பெற்றுத் தருவதில் இவர் வல்லவர்!

1876 ஆம் ஆண்டு இறந்த புனித கேத்தரின் உடல், நேற்றுதான் இறந்தாரோ என்பது போன்ற அதே தோற்றத்துடன் தேவாலயத்தில் வைக்கப்பட்டிருப்பதை, இன்றுவரை காணலாம்.

புனித மரிய கொரட்றியின் உடல், இத்தாலி நாட்டிலுள்ள 'இரக்கத்தின் அன்னை' ஆலயத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது. இன்றுவரை அழகிய தோற்றத்துடன் அப்படியே இருக்கும் இவரது உடலைக்கண்டு வியப்புறுகின்றனர் மக்கள்.

புனித எத்லரிடா, இங்கிலாந்து நாட்டிலுள்ள கிழக்கு அங்கோலியாவின்





தூங்கும் தோற்றத்தில் புனித மரிய கொற்றியின் உடல்

*அவரது 200 வது ஆண்டு விழா டூரின் நகரில் 2015 ஆம் ஆண்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*அந்த குறிப்பிட்ட நாள் வரை உலகெங்கும் இந்த யாத்திரை தொடரும் என்று அமைப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.*

*அழியாத கை இறைவனின் மாபெரும் அற்புதமே என்பதை, யாத்திரை நடக்கும் போது பல இடங்களில் அற்புதங்கள் நடைபெறுவதன் மூலம் இறைவன் இயேசு நிறுபிக்க, அருள் புரிகின்றார்.*

*ஏராளமானோர், உடல் நலம் பெற்றார்கள்; குறிப்பாக, நாகாலாந்தில் யாத்திரை மேற்கொண்டபோது, 15 வருட நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர் சடுதியின் நோய் நீங்கப் பெற்றார்.*

*அவரது திரு உருவத்தை செல்போனில் படம் எடுத்தவர்கள் பல்வேறு வடிவங்களை அவரது உடலருகில் பார்த்தார்கள். மாதாவின் உருவம்; இயேசுவின் உருவம், ஆசிர்வதிக்கும் நோக்கிலான உயர்த்தப்பட்ட அவரது கை என்று அனைத்துமே அந்த செல்போன் பதிவிலிருந்த போதும், அவற்றை அச்சு செய்யும்போது அதன் பதிவு அதிலில்லை*



புனித செசிலியாவின் உடல்

இரளவரசரான அன்னாவின் மகளாகும். அவர் இறந்து 17 வருடம் கழித்து, உடலை மண்ணிலிருந்து தோண்டி எடுக்கும் பொழுது, அவரைச் சுற்றியிருந்த லினன் துணி முதற்கொண்டு அவருடைய முழு உடலும் புத்தம் புதியதாகவே இருந்தது! அதன் பின்னர் வந்த கலவரத்தில், புனிதையாகிய அவரது தேவாலயங்கள்

**இறந்த இரண்டு வாரம் கழித்து அவரைப் புதைத்த இடத்தை சுற்றிலும் ஒரு விதமான 'சென்ட்'டின் நறுமணம் வீசவே அவரது உடல் தோண்டி எடுக்கப்பட்டது!**



சேதப்படுத்தப்பட்ட பொழுது அவருடைய உடலும் சேதப்படுத்தப்பட்டது. சேதப்படுத்திய உடலின் பாகங்கள் போக, மீதமிருந்த, சிதையாத

மார்பு கேன்சர் நோயாளிகள் இவரிடம் ஜெபித்தால், இயேசுவிடமிருந்து அற்புதத்தைப் பெற்றுத் தருவதில் இவர் வல்லவர்!


சிறிதும் அழியாத புனித மரியா வியான்னியின் உடல்


புனித க்ளாராவின் அழியாத உடல்

அவரது கைகள் காண்போரை வியக்க வைக்கின்றன!

புனித மரிய வியான்னி 1815ல் பிரான்ஸ் நாட்டிலுள்ள ஒரு கிராமத்தில் குருவானவராக பணியாற்றியவர். புனிதராக உயர்த்தப் பட்ட இவரது உடலுங்கூட அர்ஸ் தேவாலயத்தின் நடுப்புற பீடத்தில் ஒரு சிறிதும் அழியாத நிலையில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இவருக்கு, 1627-ல் புனிதர் பட்டம் கொடுக்கப்பட்டது. 'கைவிடப்பட்டோரின் பாதுகாவலி, யாகப் போற்றப்படுபவர் தாம், புனித ரீட்டா. 1457 ல் இறந்த இத்தாலியிலுள்ள சேகியா நகரத்திலுள்ள புனித ரீட்டா தேவாலயத்தில் கண்ணாடி பேழையில் வைக்கப்பட்டுள்ள இவரது உடல், சில நேரங்களில் கண்கள் மூடிய நிலையிலும், சில நேரங்களில் திறந்த நிலையிலும் காணப்படுவதாகக் கூறி அதிசயிக்கின்றனர், இங்கு சென்று திரும்பியவர்கள்...!!

செயின்ட் கேத்தரின் பலோக்னா வின் சரிதை சுவாரசியமானது. ''ஓவியர்களின் பாதுகாவலி'' யாகக் கருதப்படும் இவர், இறந்தபின் சவப்பெட்டி இல்லாது, அப்படியே மண்ணில் அடக்கம் செய்யப்பட்டவர். இறந்த இரண்டு வாரம் கழித்து அவரைப் புதைத்த இடத்தை சுற்றிலும் ஒரு விதமான 'சென்ட்'டின் நறுமணம் வீசவே அவரது உடல் தோண்டி எடுக்கப்பட்டது! பார்வைக்கு தேவாலயத்தில் வைக்கப்பட்டிருந்த போது, ஒரு அருட்சகோதரிக்கு காட்சியளித்த புனிதை தனது உடலை உட்கார்ந்த நிலையில் வைக்கக் கோரியதன் பேரில், இப்போது அதுபோன்றே வைக்கப்பட்டிருக்கிறது!

தூர கிழக்கு நாடுகளின் புனிதர்தாம் புனித

*என்பதும் ஒரு ஆராய்ச்சியாகும்!*

*இந்த தொன்போஸ்கோ மட்டுமா புனிதர்! இதுவரை போப்பாண்டவரால் 'புனிதர்' என்று அறிவிக்கப்பட்டவர்கள் மூவாயிரத்திற்கும் மேலானோர்,*

*புனித தொன்போஸ்கோவின் கை மட்டும் தான் அழியாமல் இருக்கிறதா! இன்றைய கணக்கெடுப்பின்படி உலகம் முழுவதும் சுமார் **250**க்கு மேற்பட்ட புனிதர்களின் உடல் அழுகாமல் அப்படியே உள்ளது என்றால், நம்பமுடிகிறதா?*

*பாருங்கள் இணைப்புச் செய்தியை!* ■

பிரான்சிஸ் சேவியர், ஸ்பெயின் நாட்டில் பிறந்த இவரது விருப்பம், சீன நாட்டை மனந்திருப்புவது ஆகும். ஆனால், திடீரென்று காய்ச்சலால் பீடிக்கப்படவே, சீனாவை அடையுமுன்னரே இறக்க நேரிட்டது. அவரது உடலை புதைக்கும் பொழுது சீன முறைப்படி மரப்பெட்டியில் வைத்து அடக்கம் செய்தார்கள். இறந்த சில வாரங்களில் அவரது உடல் இந்தியாவிலுள்ள கோவா நகருக்கு அனுப்பப்பட்டு புதைக்கப்பட்டது; இரண்டரை மாதங்கழித்து அவரது உடல் தோண்டி எடுக்கப்பட்டது, ஒரு சிறிதும் மாறாமல், நேற்று இறந்தது போன்று அப்படியே இருந்தது அவரது உடல்''!



**புனித காத்ரீன் அழியாத உடல் அவர் கனவில் கேட்டுக் கொண்டபடி உட்கார்ந்த நிலையில் வைக்கப்பட்டுள்ளது**

உடல் முழுவதும் நறுமணம் வீசியது! மீண்டும் அவரது உடலை சீக்கிரம் அழுகும் விதமாக சவப்பெட்டியில்லாமல் மண்ணில் புதைக்கப்பட்டது. அதன் பின்னருங்கூட அவரது உடல் ஒரு சிறிதும் சேதப்படாமலிருக்கவே, தற்சமயம் வரை கோவாவிலுள்ள 'பாம் ஜீசஸ்' தேவாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது! இவரது உடலை சென்று பார்க்க, இந்தியராகிய நமக்கு அதிக வாய்ப்பு உள்ளதல்லவா?

**பு**னித அவிலா தெரசம்மாள் 1582 ல் இறந்தபின் பலமுறை புதைக்கப்படுவதும், தோண்டப்படுவதுமாக இருக்க ஒவ்வொரு முறையும் அவரின் உடல் நறுமணம் வீசிய நிலையில் உயிரோடிருப்பது போன்று தோற்றமளிக்கவே அவரது உடலின் பல்வேறு பாகங்களான இருதயம், கைகள், வலது கால், இடது கண், தாடை போன்றவை உலகின் பல்வேறு இடங்களில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது.

டாப் 10 என்று கூறுவது போன்று, ஒரு சாம்பிளுக்காக 10 புனிதர்கள் பற்றி எடுத்துக் கூறுவதற்குள் 'கண்ணைக்' கட்டுகிறதல்லவா?

இன்னும் இருக்கிறது 240 புனிதர்களது அழியா உடல் பற்றிய அற்புதச் செய்திகள்!

''ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்'' அல்லவா?

***இதுபோன்ற புனிதர்களை உலகுக்கு அளித்த இறைவன் இயேசுவுக்கு நன்றி செலுத்துவதோடு இப்போதைக்கு விடைபெறலாமா?*** ●

# புனிதர் பட்டம்

"அபரிமிதமான பரிசுத்தமுள்ளவரா என்பது தொடங்கி, அவரது வாழ்வு முறை, மரித்த விதம், வேதசாட்சியாகவா அல்லது வேறுவிதமாகவா என்றும், அவரை நாடி வந்தோருக்கு ஏதேனும் அற்புதங்கள் நடந்துள்ளனவா என்பது வரை இவர்கள் ஆராய்வதற்குள் போதும்போதும் என்று ஆகிவிடும்!"

புனிதர் பட்டம் என்பது முதலில் உயிரோடு இருப்பவருக்கா, இறந்தவருக்கா என்றால், இறந்து, குறைந்த பட்சம் 5 வருடம் கழிந்த பின்னர்தான். பொதுவாக வழங்கப்படுகிறது! ஒருசில தவிர்க்க முடியாத காரணங்களுக்காக, ஒரு சிலருக்கு போப்பாண்டவர் இந்த காலத்தை சிறிது தளர்த்தலாம்...!!

முதலில், யாருக்கு புனிதர் பட்டம் கொடுக்க வேண்டுமோ, அவர் வாழ்ந்த பகுதியிலுள்ள ஆயர் தலைமையில் வழக்கறிஞர் உட்பட பலர் கொண்ட குழு, முதலில் இவர் பற்றி ஆராயும்!

அபரிமிதமான பரிசுத்தமுள்ளவரா என்பது தொடங்கி, அவரது வாழ்வு முறை, மரித்த விதம், வேதசாட்சியாகவா அல்லது வேறுவிதமாகவா என்றும், அவரை நாடி வந்தோருக்கு ஏதேனும் அற்புதங்கள் நடந்துள்ளனவா என்பது வரை இவர்கள் ஆராய்வதற்குள் போதும்போதும் என்று ஆகிவிடும்!

திருப்தியான அளவுக்கு தகவல் கிடைத்ததும், இது உரிய முறையில் போப்பாண்டவருக்கு தெரியப்படுத்தப்படும்!

இதுதான் முதல் படி!!

முதல்படி அடையும் நேரத்தில், இவரை, 'மதிப்புக்குறியவர்' என்று அழைக்கும் உரிமை மட்டும், அப்போதைக்கு தரப்படுகிறது!

அடுத்தபடியாக, விஞ்ஞானிகள் உட்பட பலர் கொண்ட குழுவை அமைக்கிறார் போப்பாண்டவர்!



# எவ்வாறு கொடுக்கப் படுகிறது?

*இந்த குழு தனது ஆராய்ச்சியை தொடங்கி, குறிப்பாக புனிதராக அறிவிக்கப்படப் போகிறவர் மூலம் இயேசுவிடமிருந்து பெற்ற அதிசயங்களை,*


புனித தோமையார்

*துல்லியமாக அலசுகிறது! விஞ் ஞான ரீதியில் சோதிக்கிறார்கள். இயற்கைக்கு மேலாக, நடை பெற்ற அற்புதந்தானா என்று குறைந்த பட்சம் இரண்டு அற்புதங்கள் நிரூபிக்கப்படுமாயின்,*

# புனிதர் வணக்கம் தேவைதானா..?

புனிதர்கள் என்பவர்கள் சாதாரண மனிதர்களே! இயேசுவின் தாயான கன்னிமரியாள் தவிர உலகில் பிறந்த அத்தனை மனிதர்களும் ஜென்மப்பாவத்தோடுதான் பிறக்கிறார்கள்.

அப்படியிருக்க, புனிதர் என்று சொல்லப்படுபவருக்கு அப்படி என்ன விசேஷம்?

மனிதர்களுக்கு சாதாரணமாகவே ஏற்படும் சோதனைகள், பலவிதமான பலவீனங்கள் ஆகியவற்றிலிருந்து விடுபட, அவர்கள் அனுதினமும் போராட வேண்டியுள்ளது!

ஆன்மிக பலம் மூலம் மட்டுமே மனிதர்கள் சோதனைகளையும், பலவீனங்களையும் வேதனைகளையும் வெல்ல முடிகிறது என்றாலும் சாதாரண மனிதனால் அவர் சாகும் காலம் வரையில் கூட இந்த முயற்சியில் முழுமையாக வெற்றியடைய முடிவதில்லை!

''என்னுடைய பலம் உனக்குப் போதும்'' என்றார் இயேசு!

ஆனால், எத்தனை பேர் முற்றிலுமாக இயேசுவை பற்றிப் பிடித்துக் கொள்ளுகிறார்கள்?

தேவைக்குத் தகுந்தபடி ஊறுகாய் போன்று, இறைவனைத் 'தொட்டுக்' கொள்வதே போதுமானது என்பதே சாதாரண மனிதனது எண்ணமாக இருக்கிறது!

இளைஞனாக இருக்கும்போது அவனுக்கு இறைவனது பலம் தேவையில்லை!

இன்னும் கொஞ்ச காலம் உலகை அனுபவித்துக் கொள்ளலாமே என்ற நோக்கில் கால்ந்தாழ்த்தி, தாழ்த்தி, கடைசியில் அவன் இறுதிக்காலம் வரும்வரை நாட்கள் கடந்தே போய்விடுகின்றன!


இப்படிப்பட்ட மனிதனால் புனிதனாக எவ்வாறு மாற முடியும்?

ஆனால், முழுமையாக இறைவனிடத்தில் தன்னை அர்ப்பணித்து, அவரது பலத்தை மட்டுமே நம்பும் நம்பிக்கையை ஒரு கையிலும், கடுமையான அறிவு சார்ந்த உழைப்பை மறு கையிலும் வைத்துக்கொண்டு வாழபவன், காலப்போக்கில் இறைவனது சித்தப்படி வாழப் பழகிக்கொள்ளுகிறான்.

அவனது பரிசுத்தம், சுத்த மனது, கள்ளங்கபடமற்ற எண்ணம், இறைவன் மீது கொண்ட வாஞ்சை, பக்தி முயற்சிகள், இறைவனுக்காக பாடுகள் அனுபவிக்கும் பாங்கு போன்றவற்றை ஒரு சேர பார்க்கும்

*இவர்கள் போப்பாண்டவருக்கு பரிந்துரைக்கலாம்.*

*உடனே இவருக்கு 'ஆசிர்வதிக்கப்பட்டவர்' என்ற பட்டத்தை லட்சக்கணக்கான மக்கள் முன்னிலையில் அறிவிக்கிறார், போப்பாண்டவர்!*



புனித சவேரியார்

*ஆக, இந்த நிலையை அடைய ஒரு சிலருக்கு 50 முதல் 100 வருடங்கள் கூட ஆகிறது!*

*இப்போது, மீண்டுமொரு கமிட்டி அமைக்கப்பட்டு, முன்னர் செய்தது போன்று மீண்டும் வேறு*

இறைவன் அத்தகைய மனிதனை அங்கீகரிக்க விரும்புகிறார் என்பதையே புனிதர்களின் வாழ்க்கை மூலம் நமக்குத் தெரிய வருகிறது.

உலகில் வாழுகின்ற காலத்திலேயே புனிதர்கள் பலர் அற்புதம் செய்கின்றார்கள் என்றால் அது அவர்களது சக்தியல்ல! அது இறைவனது கருணையாகும்.



கோடி அற்புதர் புனித அந்தோனியார்

புனித அந்தோணியார் சாதாரண துறவிதான்! அவரது உள்ளங்கைகளிலே இறைவன் இயேசுவே, வானிலிருந்து இறங்கி வந்து, தவழ்ந்தார் என்பது சரித்திரம்!

அதனால் தான் அவரை, கோடி அற்புதர் என்று அழைக்கிறார்கள்!

முடவர்களை நடக்கவும், குருடர்களை பார்க்கவும், வைக்கும் சக்தியை, உலகில் வாழும் காலத்தில் மட்டுமல்லாது, அவர்கள் இறந்த பின்னரும் இறைவன் இப்புனிதர்களுக்கு வழங்குவதன் நோக்கமே, இறைவன் அவர்களது நல்வாழ்வுக்கு அதன் மூலம் 'சான்றிதழ்' வழங்க விரும்புகிறார் என்பதே பொருளாகும்!

'புனிதர்கள் ஆராதனைக்கு உரியவர்கள்' என்று ஒருபோதும் திருச்சபை அறிவுறுத்தவில்லை!

சாதாரண பிரசங்கியார் ஒருவர், ஆயிரத்தில் ஒன்றாகக் கூட இறைவன் பார்வையில் மதிக்கப்படாத நிலையிலுங்கூட அவரிடம் 'எனக்காக ஜெபியுங்கள்' என்று சொல்ல முடிகிறது. ஆனால், இறைவனால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு புனிதரிடம் 'எனக்காக ஜெபியுங்கள்' என்று சொல்லுவது எவ்வாறு தவறாகப்படுகிறது?


***இத்தகைய புனிதர்களை தனது வழிகாட்டியாக, பாதுகாவலராகக் கொள்ளும் பொழுது, பெருமை இவர்களுக்கல்ல; இவர்களை இந்த அளவுக்கு உயர்த்திய இறைவன் இயேசுவுக்கே!***

•



சிறுமிக்கு காட்சி கொடுத்த நிலையில் புனித லூர்து மாதா

# எல்லா கிறிஸ்தவ சபைகளையும்



‘‘மெய்யான தேவனை வணங்குவதற்காகக் கூறுகிறீர்கள்! ஆனால் உங்களுக்குள்ளேயே எத்தனை பிரிவுகள்!’’ என்று கிறிஸ்தவர்களைப் பார்த்து, பிறமதத்தவர் கூறுமளவுக்கு இன்று தெருவுக்குத் தெரு சர்ச்கள், பிரிவினைகள்!




‘‘எல்லா சபைகளிலும் பரிசுத்த ஆவியினால் ஜனங்களை இறைவன் நிரப்புகிறாரே!’’ என நாம் எண்ணக் கூடும்!

இறைவன் என்பவர் எல்லோருக்கும் பொதுவானவர்!

‘‘எங்கே எனது நாமத்தில் இருவரோ, அதற்கு மேலானோரோ கூடுகிறார்களோ, அங்கு நான் பிரசன்னமாகுவேன்!’’ என்று கூறியவர் தேவாதி தேவன்!! ‘‘வானமும் பூமியும் ஒழிந்து போம் எனது வார்த்தைகளோ ஒருபோதும் ஒழிவதில்லை’’ என்று மேலும் உறுதியளித்திருக்கிறார் அவர்!

ஆக, இறைவன் பிரசன்னமாகுவதற்கு பூஜையோ, புனஸ்காரங்களோ, ஆடுமாடு பலிகளோ, யாகமோ, தேவையேயில்லை.



தேவைப்படுவதெல்லாம், அவரே வாக்களித்தபடி ‘ஒன்றுக்கும் மேற்பட்டோர், கூடி ஜெபிப்பதே!

இவ்வாறு கூடி ஜெபிக்கும் இடங்களுக்கு இறைவன் மாட்சியோடு பிரசன்னமாவதாலேயே, அங்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகம் நடைபெறுகிறது; ஆழ்ந்த மனசமாதானம் இறங்குகிறது; அற்புதங்கள் நிகழ்கின்றன; அவ்வளவுதான்!!

இந்த நிகழ்வு குறிப்பிட்ட சபைகளில்தான் நடைபெறுகின்றன என்றால் இல்லை; எல்லா கிறிஸ்தவ சபைகளிலும் நிகழ்கின்றன.

இவ்வாறு எல்லா சபைகளிலும் அதிசயம் நிகழ வரம் அருளுவது இறைவனின் தவறல்ல!

தவறெல்லாம், மனித பலவீனத்தாலேயே! அவனே ஒருசில கற்பனை எண்ணங்களாலும், மேட்டிமை குணத்தாலும், இறைவனின் இந்த மாபெரும் இரக்கத்தை, தவறாக எடைபோடுகின்றான்.

---

*அற்புதங்கள் உள்ளனவா என்று ஆராய்கிறது. இந்தக் கமிட்டியுடன் கூடவே ‘பேய் வழக்கறிஞர்’ குழுவும் அமைக்கப்படுகிறது. இந்த பேய் வழக்கறிஞர் குழு, மேற்படி புனிதராகப் போகிறவரைப் பற்றி குற்றங்குறைகள் ஏதேனும் உள்ளனவா என்று தேடி, விதண்டாவாதம் பேசி, அடுத்துக் கெடுக்கும் வேலையைச் செய்யும்!*



புனித அருளானந்தர்

*இந்த தடைகளையெல்லாம் தாண்டி, மீண்டும் இரண்டு அற்புதங்கள் நிருபிக்கப்பட்டு விட்டால், புனிதர் பட்டத்துக்கு இந்த குழு பரிந்துரைக்கிறது!*

*இதன் பின்னர்தான், போப் பாண்டவர் புனிதர் பட்டம் வழங்குகிறார்.*

*இனி, உலகமெங்குமுள்ள கத்தோலிக்க தேவாலயத்திலும்*

# வழிநடத்துவது யார்?

சாத்தானின் சூழ்ச்சி இதில் அதிகம் உள்ளது!

பொது எதிரியான சாத்தானை விட்டுவிட்டு எத்தனை பிரிந்த சபை பிரசங்கிகள், தமது சபைக்கு கூட்டம் சேர்ப்பதிலேயே குறியாயிருகிறார்கள்; இதன் மூலம் பிறமதத்தவர் மத்தியில் எவ்வளவு இடறலாக செயல்படுகின்றார்கள்; இதன் மூலம் ஒட்டுமொத்த கிறிஸ்தவர்களையே தாழ்த்தும்செயல்களை தன்னையறியாமலேயே சாத்தானின் கைப்பாவையாக தன்னை மாற்றிக் கொண்டு, செயல்படுகிறார்கள் என்பதை சிந்திக்க வேண்டும்!


எந்த சபையில் ''குறை கூறும் ஆவி''யாகிய சாத்தான் புகுகிறானோ, அந்த சபையை சிறிது நாள் கழித்துப் பாருங்கள்; அவர்களுக்குள்ளேயே சண்டையும் சச்சரவும் ஏற்பட்டு அந்த குறிப்பிட்ட சபை இரண்டாக உடைகிறது; அனைத்தும் சாத்தானின் வேலையே!

எங்காவது கத்தோலிக்கக் கிறிஸ்தவம் இரண்டாக உடைவதைக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? இல்லையே!

அவ்வாறெனில் கத்தோலிக்கத்தில் குறையில்லையா...?

இல்லையென்பது இல்லை; பிரிந்த சபை கிறிஸ்தவர்களிடம் காணப்படும் ஒன்றை, ஏன் கத்தோலிக்கத்தில் காண முடியவில்லை.

அதுதான், இறைவனை பிறமதத்தவருக்கு அறிவிக்க வேண்டுமென்ற வேகம்! இது கத்தோலிக்கரிடம் ஏன் அவ்வளவாக இல்லை?




***ஆகவே, கத்தோலிக்கர்களும் தம்மை திருத்திக் கொண்டு, இறைவன் இயேசுவை மட்டுமே பிரதானமாகக் கொண்டு பரிசுத்த ஆவியினால் இன்னும் அதிக அளவில் நிரம்பப்பெற்று, நற்செய்தியை பிறருக்கு அதிக ஆர்வமுடன் அறிவிக்கும் விதமாக தன்னை மாற்றிக் கொள்ளும் வரத்தைப் பெற, இறைவனிடம் இறைஞ்ச வேண்டுவது காலத்தின் கட்டாயம் ஆகும்!***

•

*ஜெப நேரத்தில் இப்புனிதரை நோக்கி மன்றாட்டு ஏறெடுக்கும் உரிமை வழங்கப்படுகிறது.*

*புனிதர் பேரில் தேவாலயம் அமைக்கலாம்; திருவிழா கொண்டாடலாம.*

***அப்பாடா! இயேசுவிடம் தனது சக்திமிக்க ஜெபத்தால், மனிதர்கள் வேண்டும் பிரார்த்தனைக்கு பதிலை பெற்றுத்தர உலகுக்கு ஒரு புனிதர் ரெடி!***


ஆசிர்வதிக்கப்பட்ட அன்னை தெரசா

*போதுமா? இன்னும் தகவல் வேண்டுமா?*

***ஒரேயொரு தகவல்! இதுவரை உலகமெங்குமுள்ள 10,000 பேருக்கு 'ஆசிர்வதிக்கப்பட்டவர்' பட்டம் போப்பாண்டவர்களால் வழங்கப்பட்டுள்ளது என்றாலும், 3000 பேருக்கு மட்டுமே புனிதர்பட்டம் வழங்கப்பட்டுள்ளது என்பது கூடுதல் தகவல்.!!***

■

கீழே கண்டவை 2008 இதழ் தொடங்கி ஒவ்வொரு வருடமும் பிரசுரிக்கப்பட்டு வருகிறது.

அன்றிலிருந்து இன்று வரை... (2006 முதல்...) நிகழ்வுகளின் சுருக்கம்...

இயேசுவின் காட்சியை *2006*ம் ஆண்டு நான் கண்டபோது, இதனை பகிரங்கமாக வெளிப்படுத்தும் எண்ணம், அப்போது எனக்கில்லை.

ஆதலால்தான் *2007*ம் ஆண்டு இதழில், காட்சி, தரிசனம், கனவு மற்றும் முகமுகமாய் பார்த்தால், என்பது போன்ற வகைகளில் காட்சி என்பது அமையுமென்று பொதுவான

# இயேசுவின் காட்சி (தரிசனம் - Vision) எனக்கு நடக்கப் போவதைக் காட்டியது...

*2006*-ம் வருடம் ஆகஸ்டு மாதம், வடவை மாதா குரலொலி - *2012*யை விநியோகிக்கவும், மாதா திருவிழாவில் கலந்து கொள்ளவும் நான் வடக்கன்குளம் வந்திருந்த நேரம்!

வடவை பரலோக மாதாவின் விண்ணேற்பு தினமான ஆகஸ்டு *15*ம் தேதி இரவு வடக்கன் குளத்திலுள்ள என்னுடைய வீட்டின் மாடியில் உறங்கிக் கொண்டிருந்தேன். என்னைத் தவிர யாரும் அங்கில்லை.

அன்றிரவு... அதாவது, *16*ம் தேதி அதிகாலை *1* மணியளவில் இறைவன் இயேசுவின் காட்சியை, அந்த அறையில் நான் காண நேரிட்டது. (கனவு போன்றில்லாமல் தத்ரூபமாக பார்த்ததால், இதனை காட்சி என்பதைவிட தரிசனம் என்றே கூறலாம்!)



ஒரு சராசரி மனிதனின் உயரத்தைவிட *3* மடங்கு உயரமாக காட்சியளித்தது இயேசுவின் திரு உருவம்! அவரது விலாவிலிருந்து, பம்பு செட்டில் எவ்வாறு தண்ணீர் பீச்சி அடிக்கிறதோ அதே பருமனில், வேகமாக இரத்தம் பீச்சி அடித்ததைப் பார்த்தேன்.

ஒரு சினிமா படம் பார்த்தது போன்று அந்தக் காட்சி இருந்தது.

காட்சியின் அடுத்த கட்டம் எனக்கு நடக்கப் போவதை தரிசனத்தில் பார்த்தேன். அதாவது: அவருக்கு முதுகைக் காட்டிய படி எதிர்திசையில் ஒரு உருவம் புழு போன்று சுருண்டு கிடந்தது. அது வேறு யாருமில்லை. நான் தான்!

அடுத்த கட்டமாக, இறைவன் இயேசுவின் கை மட்டும் நீளமாக வளர்ந்து,சுருண்டு கிடந்த என்உருவத்தின் கைகளைப் பிடித்து என்னை மேலே தூக்கியது.

'உலகமே உன்னைக் கைவிட்டாலும், நான் ஒரு போதும் உன்னைக் கைவிடவே மாட்டேன்'' என்று இயேசுவின் வாயிலிருந்து வார்த்தைகள் புறப்பட்டன. இந்த வார்த்தைகள் மிகத் தெளிவாக எனக்குக் கேட்டன!

இந்த தரிசனத்தைக் காணுகின்ற நாள் வரையில் நான் எப்படியிருக்கின்றேனென்று யோசித்தபோது ஒரு சராசரி மனிதனுக்குள்ள சகல சௌகரியங்களுடன் தானே நான் இருந்து வருகிறேன் என்று எண்ணிப்பார்த்தேன். பிரச்சினைகள் அவ்வப்போது வருகிறது! தீருகிறது. இரவு பகல் போலத்தானே இவையும் என்று நினைத்தேன்.

ஆனால், சுருண்டு கிடப்பது போன்ற கைவிடப்பட்ட நிலை என்றால் அது எப்படியிருக்கும் என்று எனக்கு அதுவரை தெரியாது. இந்தக்காட்சி காண்பிக்கப்பட்ட தினத்திலிருந்து , இன்றைய தேதிவரை குறைந்த பட்சம் *6* முறை, பல வழிகளில் கைவிடப்பட்டுள்ளேன்.

# நடந்தது என்ன?

முறையில் அலசப்பட்டதான சிறிய கட்டுரை ஒன்று வெளியிடப்பட்டது.

**கா**ட்சி கண்ட இரண்டே மாதத்தில், மிகப்பெரிய விபத்தில் நான் மாட்டிக்கொண்ட பொழுது, அதாவது எனது இரு சக்கர வாகனம் வேகமாக சென்ற காரின் மீது மோதி, சுமார் *30* அடி தூரத்தில் நான் வீசப்பட்ட அந்த கண நேரத்தில், நான் நினைத்ததை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்!. 'நிச்சயம் என்னுடைய உடலின் ஏதோ ஒரு உறுப்பு துண்டாகிவிடும்' என்று நினைத்தேன். ஆனால், முற்றிலுமாக காப்பாற்றப்பட்டேன். (பார்க்க பெட்டி செய்தி)

அந்த குறிப்பிட்ட ஒரு நிமிட நேரம், நிச்சயமாக கைவிடப்பட்ட நேரம்தான் இறைவனல்லாது, என்னை யார் காப்பாற்றியிருக்க முடியும்?

**இது கைவிடப்பட்டு, நொடிப் பொழுதில் காப்பாற்றப்பட்ட எனது முதல் அனுபவம்.**

**இ**ந்த சம்பவம் போன்று நடந்த, பிற சம்பவங்களின் தொடர்ச்சி, கைவிடப்பட்ட சூழ் நிலையை நோக்கி செல்லுவதை

இந்த நிகழ்வுகளுள், ஒன்றில் கைவிடப் பட்டிரு நான் நொறுங்கியிருப்பேன், அதாவது உயிர் கூட பே அப்படிப்பட்ட கடுமையான சம்பவங்கள், பிரச்சி

ஆனால், மேற்கொண்ட கைவிடப்பட்ட சந்தர்ப்பங்களில் நான் மிகச்சாதாரணமாக, இவற்றை சமாளித்திருக்கிறேன். எந்தக் கவலையும் நான் பட்டதில்லை! அந்த சந்தர்ப்பங்களில் மரணக் குழியின் மேலே நான் நின்றேனென்றாலும், அது பற்றிப் பயம் என்னிடமில்லை! மகா நிம்மதி அன்றிலிருந்து இன்று வரை உள்ளது. இது இறைவன் இயேசு எனது கை தூக்கி பிடித்திருப்பதையே உணர்த்துகிறது.

இவற்றுள் நான்கு சம்பவங்களில் கைதூக்கப்பட எதிர் நோக்கியிருக்கிறேன்.

தேவாதி தேவன் வாக்கு மாறாத தேவன், இதிலும் அவர் கைவிடப்போவதில்லை!

ஆக, இந்த ஆறு நிகழ்வுகளிலுமாக கைவிடப்படாமல் காப்பாற்றப்பட்ட சம்பவங்களை விரிவாக அடுத்த இதழான *2009* ஆகஸ்டு இதழில், இறைவனின் நாம மகிமைக்காக விவரிக்கவிருக்கிறேன்

யோசித்துப் பார்க்கும் பொழுது, புழுவைப் போன்ற மனிதனாகிய எனக்கு இறைவன் காட்டிய இந்த தரிசனம், அவர் சாதாரண மனிதனையும் நேசிக்கிறார் என்பதையேக் காட்டுகிறது. இதனைப் பகிரங்கப்படுத்துவதன் நோக்கம் நான் சாட்சியாக நிற்க வேண்டும் என்பதற்காகத் தான், இயேசுவே கை தூக்கினால் கை தூக்கப்பட்டவன், எல்லோருக்கும் தெரியும் வகையில் தான் கைதூக்கி உயர்த்தப் படுவான்.

நிச்சயம்! இந்த சம்பவங்களை இனிவரும் இதழில் விவரிக்கும் காலகட்டத்தில் இறைவனின் மாபெரும் அங்கீகாரம் எனக்குக் கிடைத்திருப்பதை, எனது பணிகள் எங்கெங்கு சம்பந்தப்பட்டிருக்கிறதோ, அந்தந்த இடங்களில், ஊர்களில் தெரியவரும் என்பதை விசுவாசத்தால் நான் இப்போதே காண்கிறேன்.

தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் தன்னை உயர்த்துபவனோ தாழ்த்தப்படுவான் என்ற இயேசுவின் மொழிப்படி என்னைத் தாழ்த்தி, மேற்கண்ட என்னுடைய சொந்த விஷயங்களை எழுதத்துணிந்தேன்.





**- மு.சேவியர் சந்திரகுமார்**




*உணர்ந்ததால்தான் 2008 மலரில், எனது மேற்படி காட்சியை முதன்முறையாக வெளியிட்டேன்.*

*ஆனால், அதற்கான நீண்ட விளக்கங்கள் அந்த மலரில் இல்லை. அதன்பின்னர் 2010, 2011 இதழ்களில் கொஞ்சம் விரிவாக அவை அலசப்பட்டன.*

*குறிப்பாக 2011 மலரில், இயேசுவின் கரம் என்னைத் தூக்கியதை குறிப்பிட்டிருந்தேன்.*

*எவ்வாறு இன்றுவரை காப்பாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறேன் என்று கூறும்பொழுது, அதன் சான்றுகளோடு, வெளியிட்டால்தான், அது ஒரு நிருபிக்கப்பட்ட சாட்சியாகும் என்பது பொதுவான ஒரு விதி!*

*அதிலுங்கூட அந்த குறிப்பிட்ட, ஒரே வகையான பிரச்சினைகளின் அடிவேர், துளிர்விட்ட ஆண்டு 1990 ஆம் ஆண்டு! அது, 2002ல், ஒரு மோசமான நிலைக்கு கொண்டு சென்றாலுங்கூட, அதுவும் ஒரு ஆரம்பம்தான்!*

*அந்த சூழ்நிலை, 2002ல் ஆரம்பித்து,*

## பெரிய விபத்தில் மாட்டி கைவிடப்பட்டேன்..! காப்பாற்றப்பட்டு, கை தூக்கப்பட்டேன்...!

*- காட்சி கண்டபின் முதல் அனுபவம்*

சென்னையிலிருந்து 10-10-2006-ம் தேதி நான் வசிக்கும் கேளம்பாக்கத்திற்கு இ.சி.ஆர். என்ற கிழக்குக் கடற்கரைச்சாலை வழியாக வந்து கொண்டிருந்தென்.

அன்றைய தினம் வழக்கத்திற்கு மாறாக, அதிக வேகத்துடன் நான் வர, மின்னல் வேக நேரத்திலே, எதிர்பாராமல் ஒரு கார் என்னுடைய இரு சக்கர வாகனத்தில் மோத, அந்த வினாடி என் முன்பு பயங்கரமான எண்ணம் என் மனக்கண்ணுக்குத் தெரிந்தது!

அதாவது, என்னை தூங்கி எறிந்த வேகத்தில், நிச்சயம் உடம்பிலுள்ள ஏதோ ஒரு உறுப்பு துண்டாகி விடும் என்பதாகும்.

சுமார் 35அடி தூரத்தில் போய் விழுந்தேன்! சுய நினைவு முழுதுமாக இருந்தது!

“அவ்வளவுதான், முடிந்து விட்டது” என்று எண்ணிய எனது வாயிலிருந்து வந்த சப்தம் ஜீசஸ் என்பதாகும்!

வலது கையில் மணிக்கட்டு தொடங்கி ஐந்து விரல்களும் சிதைந்தது போன்ற தோற்றம்!

தோள்பட்டை, முகம்,இரண்டுகால்கள் ஆகிய இடங்களிலிருந்து இரத்தம் பாய, நான் விழுந்துகிடந்தேன்!


கூடிய கூட்டத்தினர் என்னைத்தூக்கி நிறுத்தியபின். அருகிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது!

முதலுதவி செய்யப்பட்டு, அடுத்த ஒரு மணி நேரத்தில் காரில் வீட்டுக்கு வர, காயங்களனைத்தும் ஒரே வாரத்தில் சுகமாக, வலது கையின் சுண்டு விரல் எலும்பு மூன்று துண்டாக முறிய, அது கூடுவதற்கும், பயிற்சி மூலம் சரியாவதற்கும் ஆறு மாதங்கள் ஆகின!

மற்றபடி, சுமார் ஒரு மாதத்தில் ஏறக்குறைய நார்மல் தான்!

மரணத்துக்கேதுவான இந்த சூழலிலருந்து அற்புதமாக அன்று காப்பாற்றியது இறைவனே

இப்பொழுதுங்கூட இருசக்கர வாகனத்தில் பயணிப்பதில் எனக்கு எந்தவித பயமுமில்லை.ஏனென்றால் “உன்னைக் கைவிடுவதில்லை என்று சொன்னவர் உண்மையுள்ளவர்!”என்பது எனக்கு தெரியும்.



*வருடம் நகர நகர, பெரிதாகிக் கொண்டே, எதை நோக்கியோ செல்லுவதை நான் உணர்ந்தேனென்றாலும், என்னால் அதை கட்டுப்படுத்த முடியவில்லை!*

*ஆக, 2011 இதழில் அதைத்தான் ஒன்பது வகையான ஈட்டிகள் என்று குறிப்பிட்டிருந்தேன். சரியாகச் சொன்னால், பெரிய ஈட்டிகள் 15 எனலாம்! சிறியவை தனி!*

*ஒரே நேரத்தில் இவற்றை சாதாரணமாக யாராலும் சமாளித்திருக்கவே முடியாது!*

*சொல்லப்போனால், இந்த எனது சூழ்நிலைதான் உண்மையிலேயே கைவிடப்பட்டதன் உச்சக் கட்டம்!*

**பழைய நினைவுகள்....**

# ஒரே விநாடியில் ஐந்து வருட உயிர்க்கொல்லி நோய் மறைந்தது...

*- அனுபவப்பாடங்களின் சிறு தொகுப்பு-1*

சுமார் 25 வருடங்கட்கு முன்னர்...!

கேளம்பாக்கத்தில் எனது செயல்பாடுகளை ஆரம்பித்த புதிது...!

இருமல் வியாதியின் ஆரம்பம்...! எப்படி வந்தது....!

இரு வருட முன்பு. சென்னையில் பணியிலிருந்தபோது, அலுவலக நண்பரின் சகோதரர் ஒருவரை மனிதாபிமான அடிப்படையில், தாம்பரம் சானிட்டோரியம் டி.பி. மருத்துவமனையில் சேர்க்கும்படி, அவரை ஆட்டோவில் அருகில் அமரவைத்து கூட்டிச் சென்றபோது, இந்த வியாதி தொற்றியிருக்க வேண்டும் என்ற உண்மை. எனக்கு இருமல் வந்தபோதுதான் தெரிந்தது.

தினமும் 'ஸ்ட்ரெப்டோமைசின்' ஊசிதான், அப்போதைய சிகிச்சை.!

தொடர்ந்து, இந்த ஊசிமருந்தை போடாதபடி, அவ்வப்போது மருந்து மாத்திரைகளை நிறுத்தியதன் விளைவு...?

வியாதி முற்றியது...!

ஒரு கட்டத்தில், மேற்படி ஊசியின் எண்ணிக்கை 300ஐத் தாண்ட, மருத்துவர் கேட்ட கேள்வி ஏன் உங்களுக்கு இன்னும் காது செவிடாகவில்லை? என்பதாகும்.

அளவுக்கு மீறி ஊசி போட்டும், காது செவிடாகவில்லையென்றாலும் விட்டுவிட்டு சிகிச்சை செய்தபடியால் வியாதி சுகமான பாடில்லை.!

இதற்குள் வியாதியின் காலம் 3 வருடங்கள் ஆகிவிட்டது.

எமது நிறுவன முன்னோடிகளுள் ஒருவர் அவரது நண்பரான டாக்டர் க்ளமென்ட்ரெட்டியிடம், பரிந்துரைக்க, அவர் மீண்டும் பலவித பரிசோதனைகள் செய்து சிகிச்சை கொடுத்தார். எனது சூழ்நிலைகளின் காரணமாக, ஒரு சில நாட்களே மருந்து மாத்திரைகளை நிறுத்திய ஒரே காரணத்திற்காக -

மீண்டும் சிகிச்சையின் பலன் செயலிழக்க மீண்டும் முற்றியது நோய்.

நெஞ்சில் அகோரவலி. இருமலோ இருமல். சில சமயம் இரத்த வாந்தி.

இதனைக் கேள்விப்பட்ட எனது அண்ணன் டாக்டர் லாரன்ஸ் என்னை கேரள மாநிலத்துக்கு வரவழைத்து ஒரு பெரிய டாக்டரிடம் பரிந்துரைக்க, அவர் பல டெஸ்ட்களின் அடிப்படையில் இரண்டாம் கட்ட உயர்சிகிச்சையான 'ஈத்தாதம்பியூட்டால்' மாத்திரைகள் சாப்பிடச்சொன்னார்.

திடீரென்று கண் பார்வை மங்க ஆரம்பிக்கவே மீண்டும் ஓடினேன் டாக்டர் க்ளமெண்ட்டிரெட்டியிடம்.

அதற்குள் கிட்டதட்ட 5 வருடங்கள் ஆகிவிட்டது.

'ஈத்தாம்பியூட்டால்' அதிக அளவுக்கு உபயோகித்த படியால் அது Optic

*இந்த ஈட்டிகள் என்னை நாலாபுறத்திலும் சூழ்ந்து நின்றபோதிலும், ஒன்று கூட என் மேல் படவில்லை! அதன்மூலம் எனது சூழலில் பெரும்பாதிப்பு ஏற்பட்டது. ஆனால் இவற்றை நான் பொருட்படுத்தாத சக்தியை இறைவன் எனக்கு கொடுத்ததால்தான் நான் தப்ப முடிந்தது; இயல்பான சூழ்நிலையிலேயே இருக்க முடிந்தது!*

*2011ல் இறைவன் என்னை கைதூக்கிய போது மேற்படி சூழ்நிலையின் உச்சம் என்ற கடலில், மூழ்கிய நேரம்! இனி, 'காப்பாற்ற முடியாது' என்ற சூழலில்தான் அந்த அற்புதக் கரம் என்னைத் தாங்கி பிடித்தது.*

*இந்த இதழில் கூட அந்த ஈட்டிகள் என்ன என்பதை வெளிப்படையாக எழுத முடியாத நிலையில் உள்ளேன்.*

*தொண்ணூற்றைந்து சதவீதம், சூழ்நிலை மாறிவிட்டாலும், அதன் முழுமையான நிறைவேற்றம் பூர்த்தியாகி, தாமாகவே வெளியே தெரியவரும் நேரம் நெருங்கி வருகிறபடியால்,*

Nerve-ஐ பாதிக்க ஆரம்பித்த விபரத்தை அவர் கூறி. உடனே அந்த சிகிச்சையை நிறுத்தச் செய்தார்!

இனி, மூன்றாவது கட்ட சிகிச்சையான 'ரிபேம்பைசில்' மாத்திரைகள்தான்!

ஏற்கனவே அளவுக்கு மீறி ஸ்டெப்டோமைசின் 300 ஊசிகள், மற்றும் 20க்கு மேற்பட்ட 'எக்ஸ்ரே'க்கள், அளவுக்கு மீறி 'ஈத்தாம்பியூட்டால்' மாத்திரைகள், இனி 'ரிபேம்பைசில்' மாத்திரைகள் எடுக்கப்போகும் சூழ்நிலை.

ஆக, இந்த சிகிச்சையை எடுத்தால் மட்டுமே உயிர் காப்பாற்றப்படும். ஆனால் மேற்கண்ட அனைத்து மாத்திரை மருந்துகளின் பலனாக, இரத்த ஓட்ட மண்டலம் கடுமையாக பாதிக்கப்படும். அதைத் தொடர்ந்து பல்வேறு வியாதிகள் பக்கவிளைவுகளாக வரும்.

ரிபேம்பைசிலுக்கு ஆகும் மருத்துவச்செலவும் அதனை ஈடுகட்டுமளவுக்கு தினமும் கறிச்சாப்பாடு. இவைதான் உயிரையாவது காப்பாற்றுமாம்.

சோர்ந்துபோனேன்.

மருத்துவரின் வீட்டிலிருந்து வெளியே வர எனக்கு உதவுவதற்கு ஆலோசனை கூறுவதற்கு யாருமில்லையே என்ற எண்ணம். (அப்போது வரை நான் திருமணமாகாதவன்)

இப்படி ஒரு வாழ்வு தேவைதானா?

மேற்படியான ஒரு நிமிட அளவிலான எண்ணம் நீடிக்க, எங்கேயிருந்தோ அப்படி வந்தது. ஒரு விதமான வைராக்கியம்.

டெஸ்டுகள் எடுப்பதற்காக எழுதிக்கொடுக்கப்பட்ட டாக்டரின் சீட்டை கிழித்து அவருடைய வீட்டின் மதில் சுவரருகில் எறிந்தேன் நான்.

அடுத்த விநாடி என் கண்கள். என்னையுமறியமல் வானத்தை நோக்கிப் பார்த்தது.

இயேசுவிடம் எனது மனது முறையிட்டது.

'ஆண்டவரே, நீர் உண்மையானவரென்றால், இந்த வியாதியை நீக்கிப்போடும். உமக்கு விருப்பமானால், எனது உயிர் போகட்டும், ஆனால் இனிமேல் இந்த மருந்து மாத்திரையைத் தொடவே மாட்டேன்' என்று ஒரு சிறிய ஜெபம்.

முட்டி நின்ற கண்ணீரைத் துடைத்துக்கொண்டேன். கேளம்பாக்கம் சென்றேன்.

மறுநாள் காலையில், நெஞ்சிலிருந்த வலியைக் காணோம், அவ்வப்போது வாயில் ஊறும் சளிளைக் காணோம்.

அன்று காணாமல் போன அந்த இருமல், சளி, நெஞ்சுவலி இன்று வரை தேடினாலும் காணவில்லை. பக்க விளைவு நோய்கள் மருந்துக்குகூட இன்று வரை என்னிடம் இல்லை.

மாபெரும் அற்புதத்தைச் செய்தவர் யார்? இ-யே-சு...!! ●

### பழைய நினைவுகள்....

# மலைபோல் வந்த எதிர்ப்பு வெள்ளம்; ஒரு நொடியில் மனம் மாறிய கூட்டம்...

அனுபவப்பாடங்களின் சிறு தொகுப்பு-2

1987 ம் வருடம் என்று நினைக்கிறேன். திருமணமான புதிது. அப்பொழுதுதான் ஐ.சி.டி.எஸ் தொண்டு நிறுவனம் களைகட்ட ஆரம்பித்திருந்தது.

கேளம்பாக்கத்துக்கும், நான் பணிபுரிந்த திருப்போரூர் ஒன்றியத்திற்கும் எனது பணிகள் புதியது.

ஏனென்றால், மக்களின் அறியாமையை, ஒடுக்கப்பட்ட மனநிலையை மாற்றி புது நம்பிக்கையுடன் அதிகார வர்க்கத்தை எதிர்க்கும் வேகம் பெறும் விழிப்புணர்ச்சிக்கான தலைமைத்துவ பயிற்சி அளிப்பதே ஆரம்பத்தில் எமது நிறுவன பணிகள்.

எதிர்ப்புக்கு கேட்கவா வேண்டும்?

பயிற்சி, கருத்தரங்கு, மாநாடு என்று ஆயிரக்கணக்கில் மக்கள் கூடுவது அன்றாட நிகழ்ச்சியாக இருந்தது!

இதற்கிடையில், திருணமான ஆரம்பித்திலேயே சில ஆயிரங்கள் எனக்கு கடன் இருந்தது. இந்தக் கடன் மட்டும் தீர்ந்தபாடில்லாமலிருந்தது.

எனது நண்பர் இஸ்ரேல் என்பவர்தாம் சகோதரர் தினகரன் பற்றி எனக்கு கூறியிருந்தார். அவருக்கு ஒரு கடிதம் எழுதலாமேயென நினைத்தேன்.

கடன் பிரச்சினைக்காக ஜெபம் செய்யக் கோரினேன். அவரிடமிருந்தும் பதில் கடிதம் வந்திருந்தது. இந்த வசனத்தின்படி இறைவன் உன்னை ஆசீர்வதிக்கிறார். சங்கீதம் 41:1 ன் படி என்றது கடிதம்.

அந்த வசனம். "சிறுமைப்பட்டவன் மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான். தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார். அவனை பாதுகாப்பார் நெடுங்காலம் வாழவைப்பார். பூமியில் அவனுக்கு நற்பெயர் அளிப்பார். எதிரிகளின் கையில் ஒரு போதும் ஒப்புக்கொடுக்கமாட்டார்."

மனைவியிடம் கூறினேன். "கடன் தொல்லை பற்றி ஜெபிக்கக்கேட்டால் எதிரிகள் பற்றி எழுதியிருக்கிறாரே" என்றேன்.

ஏனென்றால் எதிரி என்றால் யார் என்று கேட்குமளவுக்கு அப்போது யாரும் எனக்கு எந்த தொந்தரவும் செய்ததில்லை.

நாட்கள் நகர்த்தன. இரண்டு வருடங்கள் கடந்தன. திடீரென்று ஒரு கூட்டம் எதிர்ப்பாளர்கள் கிளம்பினர்.

எல்லாம் ஜாதியினால் தூண்டப்பட்டது. ஒரு கத்தோலிக்க குருவானவரின் தூண்டுதல், அதிலிருந்தது.

*அடுத்த இதழில்தான் இதைப்பற்றி சான்றுகளோடு எழுத இயலுமென்பதால், இந்த ஈட்டிகள் பிரச்சினையை இந்த இதழில் கூட எழுதாமல் நிறுத்திக் கொள்ளுகிறேன்.*

*இந்தப் பிரச்சினையின் (ஈட்டிகள்) அடுத்த இதழில் விவரிக்கப்படும் போது, இறைவனின் அற்புதம் தெரிய வரும் என்பதில் சந்தேகமேயில்லை.*

**இது கைவிடப்பட்டு காப்பாற்றப்பட்ட எனது இரண்டாவது அனுபவமாகும்.**

*இதற்கிடையில்......*

*வேறு விஷயத்தை இங்கு சொல்ல விரும்புகிறேன்.*

*காட்சிக்கு முன்னா கூட இறைவனது பிரசன்னத்தை, அற்புதத்தை குறைந்தபட்சம்*

சரியான சமயம் பார்த்துக் கொண்டிருந்து இந்த சிறு கூட்டம்.

நான் இந்த தொண்டு நிறுவனத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர். சென்னை பல்லாவரத்திலிருந்த போது ஒரு சிறிய ப்ளாஸ்டிக் தொழில் பட்டறை வைத்திருந்தேன்.

அந்த சாதனங்கள் சும்மா கிடக்கிறதேயென்று, கேளம்பாக்கத்தில் நான் குடியிருந்த வீட்டின் ஒருபுறம் சுமார் 5 பேருக்கு வேலை கொடுத்து நடத்திக் கொண்டிருந்தேன்.

அந்த தொழில் மையத்தில், ஒரு சிறிய திருட்டு, அருகிலிருந்த காவல்நிலையத்தில் புகார் கொடுக்காமல். வாயால் சொல்லி முறையிட்டேன். அவர்கள் அந்த ஐந்து பேரையும் விசாரித்தார்கள்.

சுமார் 2 மணி நேரம் ஆகிவிட்டிருந்தது. இந்த விஷயம் அந்த எதிர் கூட்டத்திற்கு சென்று சேர்ந்தது.

நான், போலிசில் புகார் செய்து, தலித் இனத்தவரை அடித்து விட்டேன் என்ற பொய்ச் செய்தி பரப்பப்பட்டது.


ஏற்கனவே ஒரு மாதம் முன்பு, சுமார் 100 பேர் கொண்ட கூட்டம் 5 மணி நேரம்வரை வாதம் செய்துவிட்டு, மிரட்டிய காலகட்டம்.

ஆக, இந்த சம்பவம் அவர்களுக்கு தேனாய் இனித்தது.

ஆனால், 5 மணி நேர மிரட்டலையே சமாளித்தவன், இதனையா சமாளிக்க மாட்டான் என்று பலவாறாக ஆராய்ந்தது.

என்னை எதிர்க்க எனது அலுவலக பணியாளர்களையே பயன்படுத்தும் திட்டம் தயாரானது. 60 பேர் பகுதி நேரமாகவும் சுமார் 20 பேர் முழு நேர பணியாளர்களாகவும் பணி செய்து கொண்டிருந்தார்கள். அனைவரும் தலித் இனத்தைச் சேர்ந்த அன்பர்கள்.

மறுநாள், அலுவலகம் சென்றேன். அலுவலக மாதாந்திர கூட்டம்! 80 பேரும் வந்திருந்தனர். ஒருவர் இந்தப் பிரச்சினையை கிளப்பவே. நான் விளக்கம் கொடுத்தேன். யாரும் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. 80 பேரும் ஒரு சேர எதிர்த்தனர்.


சகோ. **தினகரன்**

ஒட்டுமொத்த எதிர்ப்பு எனக்கு புதிது. அதுவும், கூடவே இருந்தவர்கள் எதிர்க்கும்போது..?

அவ்வளவுதான். “கேளம்பாக்கத்தை காலி செய்ய வேண்டியதுதான்” என்று நினைத்தேன்.

அப்பொழுது -

கோமா நகர் என்ற கிராமத்தில் பகுதி நேர பணியாளராக பணிபுரிந்த ஒருவர் (பெயர் மறந்துவிட்டது); அவர் கையில் ஒரு பெரிய வேதாகமம் இருந்தது. எனக்கு நேராக இறுதி வரிசையில் அமர்ந்திருந்தார்; அவரும் எதிர்த்தார்.

என்னால் தாங்கிக்கொள்ள இயலவில்லை. ஆனால், அவர் கையிலிருந்த வேதாகமம், எனக்கு எதையோ ஞாபகப்படுத்தியது.

ஒரு நிமிஷம் இருங்கள்... என்று

*4 முறை நான் அனுபவித்துள்ளேன். அவற்றுள் இரண்டை மட்டும் இந்த இதழில் பார்க்கலாம். மீதி அடுத்த இதழில்... (பார்க்க அனுபவங்களின் சிறு தொகுப்பு 1 மற்றும் 2.*

***அ**து தவிர, கைவிடப்பட்ட என்னை எவ்வாறு இயேசு காப்பாற்றினாரோ, அதே போன்று எனது சகோதரனையும், மரணத்திலிருந்து மாதாவின் வேண்டுதலால், இயேசு காப்பாற்றிய நிகழ்ச்சியையும் இங்கே காணலாம்.*

***அ**டுத்தபடியாக, வழக்குகளுக்கு மேல் வழக்குகள் பற்றியது!!*

*கோர்ட்! இது பெரிய மனிதர்கள் வாய்தா போட்டு, வாய்தா போட்டு தப்பித்துக்கொள்ளும் இடம். எளியவனாலும், ஞாயவாதிகளாலும் ஆரம்பத்தில் தப்ப முடியாத இடம் எது என்றால் அதுவும் இதுதான்!*

*எதற்காக இந்த வழக்குகள்?*

அவர்களிடம் கூறிவிட்டு, விடுவிடுவென, பக்கத்துத் தெருவிலிருந்த எனது வீட்டுக்குச் சென்றேன்.

சகோதரர் தினகரனின் கடிதத்தை தேடினேன். அதை எங்கோ ஒரு மூலையில் போட்டு விட்டது ஞாபகம் வந்தது.

மனைவி கேட்டாள் 'என்ன' என்று. 'பிறகு சொல்கிறேன்' என்று கூறினேன். அவ்வளவு அவசரம்.

கடிதம் கிடைத்தது. அதிலிருந்த வசனத்தை ஒருமுறை பைபிளைத் திறந்து சரிபார்த்துக் கொண்டேன்.

அந்த வசனத்தின் இறுதி வார்த்தையான 'எதிரிகளின் கையில் ஒருபோதும் ஒப்புக்கொடுக்க மாட்டார்.' என்ற வசனம் அப்படியொரு நம்பிக்கையை எனக்குக் கொடுத்தது!

நேராக அலுவலகம் வந்தேன். அந்தக் கடிதம் கையில் இருந்தது. பைபிளை கையில் வைத்திருந்த அந்த பணியாளரை அழைத்தேன்.

"என் கையிலிருப்பது என்ன?"

"பைபிள்"

"அதை நம்புகிறாயா"

"நம்புகிறேன்"

"சரி.... வா... சங்கீதம் 41:1 என்ற வசனத்தை உரக்க வாசி..."

வாசித்தார்.

"நானும், நீயும் நம்பும் தெய்வம் உண்மையானவரென்றால், இந்த வசனத்தின்படி அவர் என்னைக் காப்பார். ஒரு வேளை நான் நீங்கள் கூறுகின்றபடியே, மோசமானவனாக இருந்தால் அவர் என்னைக் காப்பாற்றமாட்டார்." இதுதான் அடையாளம் என்றேன்.

இப்படியாக. இந்த வார்த்தைகள் தானாக என் வாயிலிருந்து வெளிவந்தது!

அப்போதைக்கு அவர்கள் கலைந்தார்கள்.

அவர்கள் கண் முன்பே அலுவலகத்தை இழுத்துப்பூட்டினேன்.

"நாளை திறப்பேன்.. ஒருவர் எதிர்த்தால் கூட நான் குற்றம் செய்தவனாகி விடுவேன். நீங்கள் 80 பேரும் ஒருவர் பாக்கியில்லாமல் வந்தால் மட்டுமே இந்தக் கதவு திறக்கும். இதுதான் அடையாளம் என்றேன்.

வீட்டுக்கு வந்து, நடந்த சம்பவங்களை விவரித்தேன். 'அநேகமாக, ஊரைக் காலி செய்ய வேண்டிவரும்' என்று சொல்லி வைத்தேன்.

மறுநாள், அலுவலகம் சென்றேன்! 80 பேரும் ஆஜர்! ஒருவர் கூட வாய் திறக்கவில்லை! சார்.. எனக்கு எங்களது ஊரில் என்ன வேலை... என்று வேலைகளை ஆளாளுக்கு கேட்க, களை கட்டியது அலுவலகம்.

அன்று என்னைக் காப்பாற்றியது "எதிரிகளின் கையில் ஒருபோதும் ஒப்புக்கொடுக்க மாட்டார்" என்ற பைபிள் வசனத்தை கெட்டியாகப் பிடித்ததுதான். ●


*கடந்த இதழில் கூறப்பட்ட அந்த விஷயம் சுருக்கமாக - கீழே கண்டபடி!!*

*ருசி கண்ட பூனை சும்மா இருக்குமா? வலியவன் அவன் வேலையைக் காட்டாமல் இருப்பானா? என்னுடைய இருபது சென்ட் நிலத்தை 3 பேருக்கு பட்டா போட்டு கொடுத்து, ஏமாற்றிய சம்பவத்தில் போராடி, அந்த பட்டாக்களை கேன்சல் செய்து, கோர்ட் தீர்ப்பின்படி நிலம் முற்றிலும் மீட்கப்பட்டு 'அப்பாடா' என்றிருக்கும் போதுதான், இறங்கினார்கள் வலியவர்கள்!*

*அவர்கள் நான்கைந்து பேர், நான் தனியாள்!*

*ஜெயித்த நிலம் மீது முதன்முறையாக எனக்கெதிராக வழக்கு!*

*அது எனக்கு சாதகமாக முடியும் நிலையில் அதே போன்று, சிறிது மாற்றத்துடன் இன்னொரு*




*வழக்கு! இப்போது, ஒரே நேரத்தில் நான்கு இடங்களிலிருந்து அம்பு பாய்வது போன்று 4 கோர்ட்டுகளிலிருந்து ஆறு வழக்குகள் சேர்ந்து கொண்டன.*

*நான் நொந்து நூலாகு வதற்கான ஏற்பாடாம் இது! சரியான நாளில், சரியான நேரத்தில் கோர்ட்டுக்கு நாம் அழைக்கப்படும் நாளில் சென்று ஆஜராகவில்லையெனில், தீர்ப்பு, எதிராளிக்கு சாதகமாகிவிடுமென்பது வழக்கம்.*

*ஆனால், நான் ஒன்றல்ல, இத்தனை வழக்குகளை ஒரே நேரத்தில் சந்திப்பது அவ்வளது சாதாரண விஷயமா?*

*இப்போதைய நிலையில், மொத்தத்தில் சுமார் 16 வழக்குகள் போடப்பட்ட நிலையில் இன்னுமிருப்பது 2 வழக்குகள் மட்டுமே! மீதி 14 வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்டு அல்லது தீர்ப்பின் மூலம் எனக்கு சாதகமாகி விட்டன!*

*இந்த இரண்டு வழக்குகளையுங்கூட தாக்கல் செய்த அதே நபர்கள்தான் அதன் விசாரணையை வாய்தா வாங்கி வாங்கி, கால தாமதப்படுத்தும் நிலைதான் தற்சமயம் உள்ளது.*

*ஆக இறைவன், கைவிடப்பட்ட சூழ்நிலையில், என்னை காப்பாற்றுகிறான் என்றே கூறலாம்.*

**இது கைவிடப்பட்டு, காப்பாற்றிக் கொண்டிருக்கும் மூன்றாவது அனுபவம்.**

**நா***ன்காவது அனுபவம், பல கோடிகள் பெறுமான எனது அலுவலகம், ஒரு சிறிய தொகைக்காக ஏலம் விடும் சூழ்நிலையில், கடைசி நாளில் காப்பாற்றப்பட்டது ஆகும்! இந்த நிலத்தைக் காப்பாற்றப் புகுந்த வேளையில்தான், சுமார் 2 கோடி பெறுமான என் சொந்த நிலங்களை முற்றிலுமாக இழந்தே விட்டேன். அதன்பின், அதே அளவு மதிப்புள்ள இன்னொரு நிலத்தையும் மேலே விவரித்தபடி இழந்துவிட்டு, பின்னர் மீட்டு, அதன்பின்னர் தொடர்ந்து வழக்காடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. இதன் விபரம் கடந்த இதழில் விவரிக்கப்பட்டிருந்தது.*

*ஆக, இவ்வாறாக இந்த 4 விதமான கைவிடப்பட்ட நிலையிலிருச்து காப்பாற்றப்பட இறைவன் இயேசு அருள்புரிகின்றார் என்றே கூறவேண்டும்.*

**அடுத்த இதழில்**

- **ஆசிர்வாத மழை – இறைவன் தந்த ஆசீர்வாதங்கள் – படங்களுடன்!**
- **பழைய அனுபவம்: வேளாங்கண்ணி மாதா பாத யாத்திரை – தடங்கல்கள் ஒழிந்து, நிறுவனம் ஆரம்பித்தது.**
- **'என்னை அம்பலப்படுத்துகிறாய் ஆனால், உன்னை ஒன்றும் செய்ய முடியாவில்லை' – கழுத்தை நெரித்துவிட்டு ஓட்டமாய் ஓடிய தேவதை!!**

# சகோதரனை மரணத்திலிருந்து விடுவித்த வடவை மாதாவின் அதிசயம்! - உண்மை சம்பவம்

*(இங்கு நான் விவரிக்கப் போகும் சம்பவம் நூறு சதவீதம் உண்மை! சில குடும்ப உறுப்பினர்கள் சம்பந்தப்பட்டிருப்பதால், நான் மிகுந்த எச்சரிக்கையுடனேயே எழுதுகிறேன். எனது பேனா இறைவன் சித்தப்படியே எழுதுகிறது. இறைவன் நாமம் மகிமைப்பட வேண்டுமென்பதே நோக்கம்)*

எனதுகூடப்பிறந்த சகோதரர்! வடக்கன் குளத்திலுள்ள எங்கள் வீட்டிலிருக்கிறார்; சில காரணங்களால் திருமணமாக வில்லை! எனது ஒத்த வயது! ஏற்கெனவே சில பழக்க வழக்கங்களால் உடம்பு கெட்டிருந்தது, இருதயம் மிகவும் பலவீனம்! 3,4 முறை காப்பாற்றப்பட்டிருந்தாலும், பழைய பழக்க வழக்கம் ஒரு நாள் ஏற்பட்டாலும் அவ்வளவுதான் என்பதால், மருத்துவர் அறிவுரைப்படி இப்போது, முற்றிலும் மாறிய நிலை.....!

ஆனாலும், உணவுப்பழக்க வழக்கத்தில் மிகுந்த கட்டுப்பாட்டு டன் இருக்க வேண்டுமென்பதே மருத்துவர் ஆலோசனை! ஒரு நாள் முழுவதும் ஒரு லிட்டர் நீர்தான்! கொழுப்பு, எண்ணெய்ப் பொருட்கள் கூடவே கூடாது போன்றவை!

ஏறத்தாழ 20 வருடங்கள் குடும்ப உறுப்பினரை நம்பியே வாழ்க்கை.

2012ம் வருடம். பெப்ரவரி மாத இறுதி. திடீரென ஏதோ குளிர்பானம் ஒன்று 'ஆசைக்கு' சாப்பிட, அவ்வளவுதான், அதன் பின் தொண்டைக்குள் ஏதும் இறங்கவில்லை, சொட்டு தண்ணீர் கூட இறங்காதபோது, எவ்வாறு சாதம் இறங்கும்? எப்படி உயிர் வாழ்வது? நாகர் கோவில் ஜெயசேகரன் ஆஸ்பத்திரியில... அனுமதி! நாள் முழுக்க "குளுக் கோஸ்" ஏற்றப்பட்ட நிலையில் அதுவே உணவு!

எங்களது குடும்ப மூத்த உறுப்பினரின் ஆலோசனையின் பேரில் இவை நடைபெற்றதையும் இங்கு கூறியே ஆக வேண்டும். அவ்வப்போது, சென்னையி லிருப்பவருக்கு தகவல்கள், சொல்லப்பட்டன. அவரும் மருத்துவர் என்பதால், அவருடைய அனுபவத்தின் கருத்தாலும், ஒரு சொட்டு நீர் இறங்காததாலும் 'கேன்சர்' என்று முடிவு செய்யப்பட்டது. 'என்டோஸ்கோப்பி' மூலம் தொண்டைக் குழிக்குள் மருத்துவ சாதனத்தை உள்ளே இறக்கினால் உண்மை நிலை கண்டறிய முடியும். ஆனால், அதற்கான உடல் நிலை ஒரு சிறிதும் இல்லை! ஏனென்றால்



வடவை பரலோக மாதா

இருதயத்துடிப்பு 80க்கும் குறைவு!

குடும்ப உறுப்பினர் யாராவது கையெழுத்திட்டு அறுவை சிகிச்சைக்கு மற்றும் எண்டோஸ்கோபிற்கு சம்மதித்தால் மட்டுமே, மருத்துவமனை, அந்த விஷப்பரிட்சையில் இறங்கும். இருமுறை முயன்றும் மூத்த உறுப்பினருக்கு, சூழ்நிலை காரணமாக அங்கு வருவது தள்ளிப் போகவே, நோய் வாய்ப் பட்டிருப்பவர் என்னை அழைத்தார். கையெழுத்திட்டு, மேற்கொண்டு சிகிச்சை மேற்கொள்ள!

சென்னையை அடுத்த கேளம்பாக்கத்திலிருந்து நானும் அங்கு வருவதற்கு தயாரானேன்! இதற்கிடையில், இறைவனை மட்டுமே நம்பச் சொல்லியும், அதே நேரத்தில் மூன்றே நாளில் 'முடிவுக்கு' தயாராக இருக்கும் படியும் 'மேலிடமான' மூத்த உறுப்பினரிடமிருந்து போன் மூலம் அறிவுறுத்தப்பட்டது!

அகில உலகையை படைத்த இயேசுபிரானே கூட, தன்னை இறப்புக்கு கையளிக்கும் நிலையிலே, அவர் மனித சுபாவத்திலிருந்தபடியால், 'கூடுமானால், இப்பாத்திரம் என்னை விட்டு அகலக்கடவது' என்று பிதாவிடம் ஜெயித்தார் என்பது, வேதாகமம்!

அப்படியிருக்க, ஒருவனது முடிவை முன்னறிவிக்கும்போது எப்படியிருக்கும்? எனது அக்காள் ஜோசபின் எனக்கு போன் செய்து 'அவனது அடக்க முடியாத அழுகையைப் பற்றி கூற, என்னாலும்' அந்த 'கைவிப்பட்ட நிலையை' நினைந்து, தாங்க வருத்தப்படாமல் இருக்க முடியவில்லை!

அப்பொழுதுதான் -

ஜெபமாலையைக் கையிலெடுத்தேன்! சென்னையிலிருந்து பேருந்து, வடக்கன்குளம் வரும் வரையில் ஜெபிப்பதாக தீர்மானித்தேன்.

நேராக, நாகர்கோவில் ஜெயசேகரன் ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். அறுவை சிகிச்சைக்கு தயார் படுத்த, கையெழுத்திடுவது எனது நோக்கம்.

ஆனால் -

நோய்வாய்ப்பட்டிருந்த சகோதரனோ சொன்னது வேறு! 'மேலிடத்திலிருந்து, கையெழுத்து யாரும் போட வேண்டாம் என்று தகவல் வந்ததாகவும், இன்னுமொரு மூன்று நாளில் அவரே வந்து கையோப்பமிட்டு, ஆவன செய்வதாகவும்..!

அப்பாடா, அதிகப்படியான நம்பிக்கை பிறந்தது!

ஜெபமாலை தொடர்ந்தது! நாகர் கோவிலிலிருந்து புறப்பட்டு நான் பிறந்த ஊராகிய வடக்கன்குளம் நெருங்கும் போது ஒன்பதாவது ஜெபமாலை முடியும் தருவாய்!

நான் ஊருக்கு வருவது தெரிந்து சுந்தர் ஸ்டுடியோ பழனியப்பன் போன் செய்தார்! அவரிடம் மாதா கோயில் வளாகத்துக்கு வரச்சொல்லியிருந்தேன்!

கோயில் வளாகத்துக்கு வந்த என்னை நெருங்கினார் அவர்; அவரிடம் சிறிது பொறுத்திருக்க கூறிவிட்டு, 9வது ஜெபமாலையை முடித்த பின்னரே, அடுத்த விஷயம்' என்ற உறுதியில், மாதாவின் பீடத்துக்கு மிக அருகில் சென்றேன். ஜெபமாலை முடிந்தது!

இதுவரை எனது விஷயத்துக்காக கூட தொடர்ந்து ஒன்பது ஜெபமாலை நான் ஜெபித்தது இல்லை! அதுவும் மாதா சுருபத்துக்கு நெருங்கும் தூரம் அருகில் வரை சுமார் 20 அடி தொலைவு வரை முன்னேறிச் சென்று வேண்டியதும் இதுவே முதல்முறை!

ஜெபமாலை முடிந்ததும், ஒரு நம்பிக்கை பிறந்தது! வெளியில் காத்திருந்தவரை அனுப்பிவிட்டு நேராக எங்கள் அக்கா வீட்டுக்குச் சென்றேன்.

அங்கிருந்த அக்காவும் மற்றும் குடும்பத்தினரும், மிகவும் வருந்தினார்கள். சாவைப்பற்றி அவன் கவலைப்படுவதை சொல்லி வருத்தப்பட்டார்கள்.

அப்பொழுது, நான் இறைவன் மீது கொண்ட அளப்பரிய




விசுவாசத்தால் "கேன்சர்' இருக்கிறதோ இல்லையோ.... அவன் இறக்க மாட்டான் சுகமாகிவிடும்." என்றேன். மிகவும் ஆணித்தரமாக!

சென்னை திரும்பினேன்!

மூன்று நாளில், மூத்த உறுப்பினர் நாகர்கோவிலுக்கு சொன்னபடி, செல்லவில்லை! குளுக்கோஸ் மூலம் காலாகாலம் எவ்வாறு உயிரைக்காப்பாற்ற இயலும் என்ற நோக்கிலும்,

எண்டோஸ்கோபி' செய்வது ஆபத்து என்பதாலும், மேலிட மூத்தஉறுப்பினர்அறிவுறுத்தலின் பேரில் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேற்றப்பட்டு, மீண்டும் வடக்கன்குளம் இல்லத்திற்கு அனுப்பப்பட்டதாக பிறகு கேள்விப் பட்டேன்.

இந்த நிலையில், கூட இருந்து பார்த்தவர்களும் ஓடி விட்டார்கள், ஒரு நாளுக்கு இவ்வளவு என்று பேசினாலும், வருவதற்கு ஆளில்லை.




பக்கத்து வீட்டு, பிரபாகரின் அண்ணன் பணிபுரியும் ஈரோடு ஆஸ்பத்திரி அல்லது மதுரை மீனாட்சி மிஷன் போன்ற இடங்கட்கு கொண்டு செல்வதாக ஆலோசிக்கப்பட்டது.

இருதயத்துடிப்பு மிகவும் குறைவாக இருந்தபடியால், ஆம்புலன்ஸில் சென்றாலுங்கூட தாங்காது என்று அதுவும் கை விடப்பட்டது! சென்னையிலிருந்த எனக்கோ மகா குழப்பம்!

ஏற்கெனவே மிகவும் விலையுயர்ந்த ஒரு ஊட்டச்சத்து மருந்தை, குளுக்கோஸ் மூலம் ஏற்றுவதற்கு அனுமதி பெற்று, மருத்துவமனையிலிருந்த எமது இன்னுமொரு உறவினர் மருத்துவர் ஐட்சன் ஆலோசனையின் பேரில் ஏற்றப்பட்டிருந்தது இப்போழுது கைகொடுத்திருந்தது,

ஒனறிரண்டு கரண்டியளவு இளநீர் மற்றும் 'காம்ப்ளான்' மட்டும் வாயின் மூலம் மெது மெதுவாக சாப்பிடுவதே உணவு!

வீட்டுக்கு வந்த பின் ஒரு வாரம் ஆகியது! நிலைமை மிகவும் மோசமானது! அந்த ஓரிரு கரண்டி இளநீருங்கூட உள்ளே செல்ல மறுத்தது! மறுபடியும் மேலிடத்திலிருந்த பழைய அறிவுரை!

சென்னையிலிருந்து என் கைகள் 'கட்டப்பட்டிருந்த' விஷயத்தை யாரிடம் சொல்வது?

எமது அலுவலகத்தோடு சம்பந்தப்பட்ட ஒருவரிடம் ஆலோசிக்கப்பட்டது! நானுங்கூட இறைவன் கையில் முடிவை கைவிட்டு விட்டேன்!

இதற்கிடையில் ஊரெல்லாம் பேச்சு, அவ்வளவுதான் என்று! அப்பொழுதுதான் -

மாதாவே களமிறங்கினார்!

எமது அலுவலக நண்பர் எதற்கோ திடீரென்று வள்ளியூர் சென்றிருக்கிறார்! சென்றது எனக்குத் தெரியாது! சென்றவர், என்ன நினைத்தாரோ வடக்கன்குளம் சென்று, எங்களது வீட்டை விசாரித்து நேரில் சென்று பார்த்தார்.

நிலைமையின் மோசம் தெரிந்தது!

அங்கிருந்தே எனக்கு போன் செய்தார்! எனக்கு மிகுந்த ஆச்சரியம்! சந்தோஷம்!

மறுபடியும் ஆலோசனை! நெடுந்தூரம் ஆம்புலன்ஸில் செல்வதோ ஆபத்து. ஏனென்றால் ஏற்கெனவே கூறியபடி, இருதய துடிப்பு மிகவும் குறைவு.

மருத்துவமனையிலிருந்த டாக்டர் ஐட்ஸனிடம் தொலைபேசியில் பேசினேன் கையெழுத்து போட எனது அக்காவிடம் பேசினேன்.

**ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்வதாக அதிரடியாக முடிவெடுக்கப்பட்டது!**

மருத்துவமனை சென்று, எண்டோஸ்கோபி அதன்படி சிறிய அளவில் செய்யப்பட்டது!

கேன்சர் இல்லை!

வித்தியாசமான தொண்டை வியாதி!

நன்றி!! மாதாவுக்கு!!!

**இன்றுங்கூட கேன்சர் சுகமாகி வடக்கன்குளத்தில் பழையபடி நடமாடித்திரிவதாக ஆச்சரிப்படுகின்ற உள்ளூர் மக்களே!**

இப்போழுது தெரிந்து கொள்ளுங்கள்.

**நடந்ததை... மாதா செய்ததை...!!**

நன்றி. இறைவன் இ-யே-சு-வுக்கு....!!

■


# இயேசுவை சித்திரவதை செய்தது எப்படி?

மானிட வரலாற்றில் ஆயிரக்கணக்கான மொழி பேசுபவர்களும். ஆயிரக் கணக்கான ஜாதியினரும். பல்வேறு மதங்களைப் பின்பற்றி வருகின்றனர்.

உலகின் பிரதான மதங்கள் சிலவற்றில் காணப்படாத பெருமை கிறிஸ்துவத்துக்கு உண்டு. ஒரு கிறிஸ்தவன் தாராளமாக பெருமை பாராட்டிக் கொள்ளலாம் என்றால் அது ஒன்றே ஒன்றுதான், அதுதான் கடவுளே மனிதனாக ஏழையின் கோலமாக பூமியில் பிறந்து, தனது விலையேறப்பெற்ற இரத்தத்தைச் சிந்தி, தியாக பலியாக தன்னையே பிதாவிற்கு ஒப்புக்கொடுத்து. இவ்வாறாக உலகத்தை மீட்டார் என்பதாகும்.

இந்த இயேசு யூதர்களால் துன்புறுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார் என்பதாக புதிய ஏற்பாட்டிலுள்ள நான்கு சுவிசேஷப் புத்தகங்களிலும் காணப்படுபவை ஒரு வகையில் பார்த்தால். சுருக்கமாகவே இருக்கின்றன எனலாம்,

ஆனால் தான்பட்ட பாடுகள் என்னென்ன என்று இறைவன் இயேசுவே சாந்தா கிளாரா சபையைச் சேர்ந்த அருட் சகோதரியும். பின்னர் புனிதையாக



**முடிசூட்டப்பட்டவருமான புனித மரிய மக்தலேன் என்பவருக்கு தோன்றி உரைத்த விவரங்களை இங்கே தருகிறோம்:–**

“அவர்கள் என் இரு கால்களையும் ஒரு கயிற்றினால் கட்டி. படிக்கட்டுகள் வழியாக என்னை தரதரவென இழுத்துக்கொண்டு, அசுத்தமான குமட்டல் வரக்கூடிய ஒரு அறைக்குள் சென்றார்கள்.”

“என் ஆடைகளைக் களைந்து. முனையில் இரும்பு குண்டுகள் கோர்க்கப்பட்ட சாட்டையால் என் உடல் முழுவதும் அடித்தார்கள்.”



# புனிதைக்கு காட்சி கொடுத்து இயேசுவே சொன்ன தகவல்கள்..!



"அவர்கள் ஒரு மரத்துண்டின் மீது என்னைக் கட்டித் தொங்கவிட்டு. சித்திரவதை செய்தார்கள், உடலைத் துளைத்தார்கள். கற்களால் அடித்தும். எரியும் தீப்பந்தங்களால் என்னைச் சுட்டெரித்தார்கள்."

"குத்தூசிகளால் உடல் முழுவதும் துளைத்தார்கள், என் தோல். சதை மற்றும் இரத்தக் குழாய்வரை கூரிய ஈட்டிகளால் குத்திக்கிழித்தார்கள்."

"இரும்பு மகுடத்தை என் தலைக்கும் சூட்டி. மிகவும் அசுத்தமான துணியால். என் கண்களைக் கட்டினார்கள்."

"கூர் ஆணிகள் நிறைந்த நாற்காலியில் உட்காரச் செய்து. என் காயங்களில் ஈயத்தையும் பிசினையும் ஊற்றினார்கள்."

"என்னுடைய தாடி மயிர்க் கால்களின் துவாரங்களில் ஊசிகளால் குத்தினார்கள், இரு கைகளையும் கட்டி இழுத்துச் சென்றார்கள்."

"என்னை ஒரு சிலுவையின் மீது தூக்கியெறிந்து மூச்சுவிட திணறும்படி என்னை இறுக்கிச் சிலுவையுடன் சேர்ந்து கட்டினார்கள்."

நான் சிலுவையில். பூமியின் மீது படுத்திருந்த நிலையில். என் மீது ஏறி மிதித்து மார்பைக் காயப்படுத்தினார்கள்.

பின்னர், என் முள்முடியிலிருந்து ஒரு கூரான முள்ளை எடுத்து என் நாக்கின் உள்ளே குத்தினார்கள்.

அவர்கள் மிகவும் அசுத்தமான கழிவுப் பொருட்களை என் வாயில் ஊற்றி, என்னை மிக மிக அருவருப்பான சொற்களால் என்னை தூஷித்தார்கள்.

எனக்கு ஆறுதலளிக்க யாரும் இல்லை.

– என்று இவ்வாறு விவரித்த இயேசு அவர் பட்ட பாடுகளின் எண்ணிக்கையை இவ்வாறு குறிப்பிடுகிறார்:–







| | |
|---|---|
| ஆயுதம் தாங்கிய சேவகர்கள் | 150 |
| கொலையாளிகள் | 83 |
| தலையில் வாங்கிய அடிகள் | 150 |
| கயிற்றால் முடியைக் கட்டி இழுத்தது | 24 முறை |
| முகத்தில் காரி உமிழ்ந்தது | 180 முறை |
| உடலில் பட்ட அடிகள் | 6666 |
| தலையில் பட்ட அடிகள் | 110 |
| முட்களால் குத்தி தாடியை இழுத்தது | 23 தடவை |
| தலையில் பட்ட காயங்கள் | 20 |
| முடியிலுள்ள கூரிய முட்கள் | 72 |
| தலையில் முட்களால் ஏற்பட்ட காயங்கள் | 110 |
| நெற்றியில் மரணவேதனை கொடுத்த முட்கள் | 3 |
| உடலில் ஏற்பட்ட காயங்கள் | 1000 |
| கல்வாரிக்கு நடத்திச் சென்ற சேவகர்கள் | 608 |
| என்னை காவல் காத்தவர்கள் | 3 பேர் |
| என்னை பரிகாசம் செய்தவர்கள் | 1008 |
| நான் இழந்த இரத்தக் துளிகள் | 28430 |

*என்ன.....? இயேசு பட்ட பாடுகளில் இலட்சத்தில் ஒன்று கூட நாம் அனுபவித் திருக்கிறோமா...?*

*சிந்தித்தால் சரி....*

# இயேசு நம்பத்தகுந்தவரா...

– மு.சேவியர் சந்திரகுமார்

இந்த இதழில் காணப்படும் எத்தனையோ செய்திகளை விட்டு விட்டு, இதோ....... இந்தக்கட்டுரையை படித்தே ஆக வேண்டும் என்று எண்ணத்தோன்றுகிறதல்லவா?

இயேசு நம்பத்தகுந்தவர் என்றால் இதென்ன போதனை என்று சலித்துக்கொள்ளும் அதே மனித மனம், கொஞ்சம் வித்தியாசமான தலைப்பை பார்த்ததும், வாசிக்கத் துடிக்கிறதல்லவா?

இந்தத் துடிப்புதான் ஆர்வத்தினால் பிறந்த நம்பிக்கை!

ஒரு காரியத்தை பலமுறை செய்தும் தோல்வியாகிறதே என்ற வேதனையுடனும், களைப்புடனும் வீட்டினுள் நுழைந்தால், நாம் பட்ட அத்தனை துன்பத்தையும் மறந்து குறை கூறும் பாங்கிலேயே, வீட்டிலிருப்பவர் யாரேனும் நடந்து கொண்டால்... எத்தனை வெறுப்பு வருகிறது...

அதே நபர், ஆதரவுடன் நாம் சொல்வதைச் செவி கொடுத்து கேட்டாலேயே போதும் ஜிவ்வென்று....

அது என்ன.... எங்கிருந்து அப்படியொரு சக்தி வருகிறது.....?

“கவலைப்படாதே... நானிருக்கிறேன்...” என்று ஒருவனது முதலாளி முதுகைத் தட்டிக் கொடுத்து விட்டால் அப்படி மனம் துள்ளுகிறதே....! நம்பிக்கை ஒளி பிறக்கிறதே.....!

ஆக, ஒவ்வொரு மனிதனுக்கும் யாராவது ஒருவிதமான நம்பிக்கையை கொடுத்து விட்டால் போதும், வில்லில் இருந்து புறப்படும் அம்பு போலல்லவா, அவன் செயல்பட ஆரம்பிக்கிறான்...?

பூனைக்கு மணிகட்டுவது யார் என்பது போல இந்த நம்பிக்கையைக் கொடுப்பது யார்...?

திக்கற்று ஒருவன் இருக்கிறான், “திக்கற்றவனாக உங்களை விடேன்” என்று சத்தம் கேட்கிறது!

கைவிடப்பட்ட நிலையில் இருக்கும் ஒருவரது தோளில் தட்டி “ஒரு போதும் நான் உன்னைக் கைவிட மாட்டேன்” என்று கூறுகின்றார்.

திரும்பிப் பார்த்தால் இயேசு!

ஆனால், இந்த இயேசுவின் மீது நம்பிக்கை வரவேண்டுமே!

வேலை தருகிறேன் வா.... என்ற முதலாளி கூப்பிட்டால், நம்பி பின்னால் சென்றால் வேலை கிடைத்து விடும்.

ஆனால்... ”கைவிடமாட்டேன்.” என்று கூறும் இயேசுவின் பின்னால் மட்டும் போக மனமில்லாமல்...

“இயேசு எனக்கு எதுவும் செய்யவில்லை என்று குறை மட்டும் கூற நமக்கு என்ன தகுதியிருக்கிறது..?

சாதாரண மனிதனான ஒரு முதலாளியின் பின்னால் சென்றாலேயே, அவர் மூலம் நன்மை கிடைக்கும் பொழுது, அகில உலகையும், நம்மையும் படைத்த தேவாதி தேவனால் கூடாதது ஒன்று உண்டா?

தகப்பனை குழந்தை நம்புவது போன்று அவரை நம்பவேண்டுமென்று அவரை அறிமுகப்படுத்தும் வேதாகமம், தன்னகத்தே முழுக்க முழுக்க நம்பிக்கையின் வார்த்தைகளைக் கொண்டுள்ளது.

ஒரு முழு வேதாகமத்தை எடுத்துக் கொணடு, கண்ணை மூடிக்கொணடு, ஏதாவது ஒரு பக்கத்தை புரட்டி எடுத்து, தொடுவிரலால் ஏதாவது ஒரு பகுதியைத் தொட்டு, அந்தப் பகுதியை வாசித்தால் கூட அங்கு கூட நம்பிக்கையின் வார்த்தைகள் அல்லது சரித்திரங்கள் இருப்பதைக் காணலாம்.

அவரைப் பார்க்கவும் பேசவும் மட்டுமல்ல, ருசிக்கவும் முடியும் என்கிறது வேதாகமம்!

பரிசுத்தம், விசுவாசம் என்ற இரண்டு ஆன்மிக காரியங்களும், ‘விடாமுயற்சி’ என்ற உலக காரியமும் இருந்தால் போதும் அவரது செயல்களை ருசிக்க!

அப்போது, “உங்கள் முன் அவர் செல்லுவார் (யாத்ராகமம் 33-14) செய்ய வேண்டியதை போதிப்பார் (யாத் 4-12) ஆசீர்வதிப்பார் (உபா.2-7) ‘உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்’ (உபா.3-22) விடு விப்பார் (யாத்.6 -7) மேன்மையாக வைப்பார் (உபா. 28-1)

நமக்கு நேரிடும் சம்பவங்கள், ஆச்சரியகரமாக யாரோ ஏற்கெனவே திட்டமிட்டு நடத்தியதைப் போன்று, நாம் யோசிக்கும் போது தெரியவரும்; அதன் மூலம் அவரை ருசிக்கலாம்

“கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள் அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிறவன் பாக்கியவான்” (சங்.34-8)

இறுதியாக - நாம் செய்ய வேண்டியதெல்லாம் துதி பலி.... நன்றி பலி அது போதும், அவரது நடத்துதல் நீடிக்க!

# இயேசுவுக்கு... நாம் நம்பத்தருந்தவர்களா?

“இயேசுவிடம் நம்பிக்கை வைத்தால் அவர் பேசுவார்!”

“என்னிடம் பேசவில்லையே”

“நீ... பேசினாயா....

“பேசவில்லை...”

“ஏன்.......”

“பேச முடியவில்லை”

“ஏன்....?”

“பேச மனமில்லை....”

“ஏன்....?”

“எனது நாட்டமெல்லாம் வேறு...!”

இதிலிருந்து என்ன புரிகிறது? குற்றம் யாருடையது? பேசாதது அவரது குற்றமல்ல என்பது தானே...”

“உங்கள் தீச்செயல்களே உங்களுக்கும், உங்கள் கடவுளுக்குமிடையே பிளவை உண்டாக்கி யுள்ளன, உங்கள் பாவங்களே, அவர் செவி சாய்க்காதவாறு அவரது முகத்தை உங்களுக்கு மறைத்துள்ளன...!” (ஏசாயா.592)

நமது அலுவலகத்திற்கு மிகப்பெரிய மனிதர் வருகின்றாரென்றால் நாம் என்ன செய்வோம்! நன்றாக உடை உடுத்துவோம், எப்படி, என்ன பேசவேண்டும் என்றெல்லாம் யோசனை செய்வோம்!

அவர் கண்முன் தெரிகின்ற இடத்தில் போய் அமர்ந்திருப்போம்...!

இதே நடைமுறையில் இயேசுவை தேடுவதற்கு முன் நம்மிடம் என்னவிதமான தயாரிப்பு உள்ளது?

சேற்றில் புரண்டு விட்டு, வாயைக் கழுவாமல், சட்டையிலெல்லாம் சாத்தானின் முத்திரையைப்பதித்து விட்டு, நாம் பார்க்கப் போவது யாரை?

தொலை தூரத்தில் அமைந்துள்ள கிறிஸ்தவ திருத்தலம் ஒன்றை.....!”

“பலமுறை சென்றேன்.... பயனில்லை! ஒருவேளை, அவர் என்னை பார்க்கவில்லையோ என்னவோ?!”

அதுதான் உண்மை!!

தகுதியில்லாத நமக்காக, தனது தகுதியிலிருந்து இறங்கி, தன்னை தரைமட்டும் தாழ்த்தும் விதமாக, மண்ணுலகில் வந்து, சிலுவையில் மரித்து, தியாகமானது ஒருமுறை போதாதா...?

நாம் அதற்குரிய தகுதியோடு சென்றாலல்லவா, அவருக்கும் பெருமை...? அவரும் நம்மை பார்க்க முடியும்?

சரி..... தகுதியை வரவழைத்தபின், அவரது கொடைகளை, ஆசீர்வாதங்களை பெற்றுக் கொண்டபின், நம் மனது என்ன சொல்கிறது?

“எல்லாம் தானாக நடந்ததுதான்..... எல்லோருக்கும் போல தானே நமக்கும் நடந்தது!”

நம்மை ‘எங்கே’ என்று இயேசு தேடுகின்ற அளவுக்கு வெகு தூரம் சென்று விடுகிறோம்!.

அப்போதும், நம்மைத் தேடி வருகிறார் அவர்!

பிரசங்கங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், சோதனைகள் மூலம் நம்மை தொட முயற்சி செய்கின்றார். ஏனெனில்அவர் நம்மைத் தேர்ந்தெடுத்திருந்த படியால், பலவித யுக்திகளை அவர்தான் கையாள வேண்டியிருக்கிறது!

ஆக...... நாம் அவரது பார்வையில் நம்பத்தகுந்தவர் களாகக் கூட ஆகிறோமோ என்னவோ.... அந்த அளவுக்கு அவர் மனதை உடைக்கிறோம்.

ஒருசிலர், ஜோசியம், குறி கேட்டல், எம்மதமும் சம்மதம் என்று எங்கும் போகத் தயங்குவதில்லை! இயேசு விரும்புவதெல்லாம் அவரையே சார்ந்திருக்க வேண்டுமென்பதே!

‘பூமியில் என்னை மறுதலிப்பவனை பரலோகத்தில் நான் மறுதலிப்பேன் ‘என்று, அவர் சொன்னது, அவரை பிற தெய்வங்களிடம் காட்டிக் கொடுப்போரைப் பற்றி தான்!

இந்த விஷயத்தில் கூட நம்மில் சிலர் நம்பத் தகுந்தவர்களாயில்லை யெனினும் அவர் நல்லவர்!

“கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்” (எசேக்.34-16) என்று கூறியிருப்பதால் நம் கல் மனதை மாற்ற அவரிடமே வேண்டுவோம்.

# இயேசுவின் சீடர்களான அப்போஸ்தலர்கள் என்ன ஆனார்கள்...?

**இ**யேசு கிருஸ்து! இன்று, கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல, உலக முழுவதும் அதிகம் பேர் உச்சரிக்கும் ஒரே வார்த்தை இதுவாகத்தானிருக்கும்!

ஆராதிக்கவாகட்டும், புதிதாகத் தெரிந்து கொள்வதாகட்டும், அல்லது ‘அலசு’வதாகட்டும் எல்லாம் இந்த இயேசு கிறிஸ்துவின் நாமத்தைத்தான்!

ஆனால், அவர் வாழ்ந்த கடைசி காலங்களில், அவரோடு இருந்தார்களே அப்போஸ்தலர் என்ற சீடர்கள், அவர்களைப் பற்றி...?

அவர்கள்தான் என்ன ஆனார்கள்?

அதனை ஆராயுமுன்பு –

அவர்களது சுபாவம் ஆரம்பத்தில் எப்படியிருந்தது?

மகா கோழையாயிருந்தார்கள் என்றே கூறலாம். மிகச் சாதாரண மீனவரான. அவர்களில் எவருமே அடியாட்களுமல்ல, பராக்கிரம சாலிகளுமல்ல; எல்லாம் தெரிந்தவர்களுமல்ல! கிறிஸ்துவுக்குப் பின் இந்த உலகிலே திருச்சபையை ஸ்தாபித்தவரான இராயப்பர் என்ற பேதுரு எவ்வளவு தூரம் ஆரம்பத்தில் கோழை, பொய்காரர் என்பதற்கு விவிலியத்தில் காணப்படும் ஒரு சம்பவமே சான்று! யூதாசைப்பற்றி சொல்லித் தெரியவேண்டியதேயில்லை! இயேசுவைச் கொல்லுவதற்கு யூதர்கள் அவரை நாலாபுறமும் தேடிக் கொண்டிருந்தார்கள்.

அவர்களால் கிருஸ்துவை சரியாக அடையாளம் காண முடியா மலிருந்ததற்கு காரணம், இயேசுவும் அவரோடிருந்த சீடர்களுள் ஒருவரும், ஆக இவர்கள் இருவருமே, ஒரே மாதிரி தோற்றத்திலிருந்ததுதான்! யூதர்கள் ‘உஷாராக’ இருந்ததற்கு அதுவே காரணம்!

இந்தக்கால அரசியல்வாதிகள் போன்றே யூதர்களும், ஒவ்வொருவரையும் தம் வசப்படுத்த திட்டம்போட்டார்கள்.

இவர்கள் வலையில் முதலில் விழுந்தது, முப்பது வெள்ளிக் காசுகளுக்காக



– மு.சேவியர் சந்திரகுமார்

மதிமயங்கின யூதாஸ்; தனது தலைவரான இயேசுவை முத்தமிட்டு, ‘இதோ இவர்தான்... பிடித்துக் கொள்ளுங்கள்!’ என்று எதிரிகளின் கையில் பிடித்துக் கொடுத்த நல்ல காரியத்தைச் செய்தவராக்கும் அவர்!

இயேசு பிடிபட்டபின், அவர்களது சீடர்கள் அனைவருமே, மூலைக்கு ஒருவராக சிதறி ஓடினர். தலைமறைவாகினர்.

பேதுருவும்அவ்வாறுதான் கூட்டத்தோடு

கூட்டமாக மறைந்து கொண்டார்; அவ்வாறு மறைந்திருந்த கூட்டத்தினரிடையே, ஒரு சிலர் அவரை அடையாளங் கண்டு கொண்டு, ''இவரும் அவரோடிருந்தவர்தான்!'' என்று கூற, அவரோ 'எனக்கும் அவருக்கும் சம்பந்தமில்லை' என்று ஒரேயடியாக மறுதலித்துவிட்டு, தப்பித்து ஓடிவிட்டார்.

ஆக, இயேசுவின் மீது தீர்ப்பு சொல்லும் போதாகட்டும், அவரை சித்திரவதை செய்யும் போதாகட்டும், கல்வாரி மலை நோக்கி சிலுவை சுமந்து சென்ற நேரமாகட்டும், மூன்றாணிகளால் ஊடுருவப்பட்ட கோலத்தில் பரதேசி போன்றுஅவலமாக, சிலுவையிலே தொங்கி மரண வேதனைப்பட்ட நேரமாகட்டும், அப்போது வரை, ஏன் அவர் உயிர்விட்டு கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது வரை, அந்த சீடர்களாகிய அப்போஸ்தலர்கள் எங்கே போனார்கள்?

'துண்டைக் காணோம்... துணியைக் காணோம்'! என்று ஓடியவர்கள் ஓடியவர்கள் தான்!

ஆக, அவ்வளவுதான் இயேசுவின் சாம்ராஜ்யம் என்று யூதர்கள் ஏகத்துக்கும் களிப்பாயிருந்தார்கள் என்றே சொல்லலாம்!!

இன்றைக்கு உலகிலேயே அதிகம் பேர் பின்பற்றும் ஒரே மதம் கிறிஸ்தவம்தான்! ஆக, இத்தனை கோடான கோடி மக்களை கிருஸ்துவண்டை கொண்டுவர மூல காரணமாயிருந்தவர்கள்

# தலை வெட்டுண்டு...

# தலைகீழாக சிலுவையில் அறையுண்டு...

# நெருப்பில் சுடப்பட்டு...

# அப்போஸ்தலரின் கடைசி தருணங்கள்!

## - நெஞ்சைப் பிளக்கும் செய்திகள்!


கோழைகளாகவும், பலவீனமாகவுமிருந்த இயேசுவின் சீடர்கள், உலகின் நாலாபுறமும் சென்றார்கள். கிறிஸ்துவைப்பற்றி எடுத்துரைத்தார்கள்.

அவர்களிடமிருந்த பயமெல்லாம் எங்கு போனது என்று தெரியாது! எந்த சீடரையும், யாரும் சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்கவில்லை! இயேசுவே முன்பொருமுறை சொன்னது போன்று, 'ஓநாய்' கூட்டத்திற்குள் அவர்கள் அனுப்பப்பட்டனர்.

அவர்களிடமிருந்த ஒரே ஆயுதம், ''இயேசு உயிர்த்தார்'' என்பதே!

இயேசு வாழ்ந்ததை, அற்புதம் செய்ததை கண்ணால் கண்ட, சீடர்களுள் ஒருவரான யூதாஸ் கூட இயேசுவின் உயிர்ப்பை முதலில் நம்பவில்லை.

உயிர்த்த இயேசுவின் உடலிலுள்ள காயங்களில்



தலைகீழாக சிலுவையில் அறையப்பட்ட பேதுரு!

தனது கை விரல்களை விட்டு, அவரைத் தொட்டுப்பார்த்த பின்னரே அவன் நம்பினான்.

அதனால்தான் இயேசு, ''கண்ணால் காணுகின்ற உங்களைவிட, காணாமல் என்னை விசுவாசிப்பவர்களே பேறு பெற்றோர்'' என்று அன்று கூறினார்!

ஆக, சீடர்களின் ஆணித்தரமான போதனையின் சக்தி எங்கிருந்து வந்தது?

மந்தை மந்தையாக, கூட்டங் கூட்டமாக எவ்வாறு மனிதர்களை மாற்ற முடிந்தது? சத்தியத்துக்காக உயிரையேக் கொடுக்க முடிந்தது? ஆம்... சீடர்களுள் ஒருவர்கூட சாதாரணமாக சாகவில்லை - அனைவருமே, கோரமாக கொல்லப்பட்டார்கள்.

எவ்வாறு என்று பார்ப்போமா?


சித்தரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்ட புனித தோமையார்

அப்போஸ்தலரான ஜேம்ஸ், அதாவது யாக்கோபு கத்தியால் வெட்டப்பட்டு இறந்தார்.

இயேசுவை மறுதலித்த இராயப்பராகிய பேதுரு, மரணத்தைக் கண்டு துளியும் பயப்படவில்லை. ரோமானிய அதிகாரிகள் 'இயேசு கடவுள் இல்லை' என்று மறுதலித்தால் போதும் மரண தண்டனையிலிருந்து தப்புவிக்கலாமென்றும் கூறினார்கள். அவரையும் இயேசுவைப் போலவே சிலுவையில் அறைய போர்ச்சேவகர்கள் நெருங்கினார்கள்!

என்ன செய்தார் பேதுரு? எம்பெருமான் இயேசுவையே சிலுவையில் அறைந்தார்கள்; கடவுளாகிய அவர்களுக்கு முன் நான் எம்மாத்திரம்? அவருக்கு

*யார்?*

*இன்றைக்கு உலகிலே எத்தனையோ தலைவர்கள் உள்ளார்கள். இலட்சக்கணக்கான அனுதாபிகள் ஆதரவாளர்கள் அந்தந்த தலைவர்களோடு இருக்கிறார்கள். ஆனால், அந்தத் தலைவரே இறந்தபின்...?*

*இறந்து ஒரு சில நாட்களிலேயே, அவர்களை மறந்துவிடுகிறார்கள் மக்கள்! ஆரம்ப காலத்தில் வருடத்திற்கொருமுறை, அவர் இறந்த நாளில் அவரது சிலைக்கு மலர் தூவி மரியாதை*

நிகராக நான் சிலுவையில் மரிப்பது தவறு என்று எண்ணி, தன்னை தலைகீழாக சிலுவையில் அறையச் சொல்லி, உயிரை தானமாகக் கொடுத்தார் பேதுரு!



குர் ஈட்டியால் குத்தப்பட்டு, கொலை செய்யப்பட்ட இந்தியாவின் அப்போஸ்தலர் தோமையார்!

**பே**துரு இறந்த ஆறு வருடங்கள் கழித்து, அக்காயா நகரத்திலுள்ள ஆலிவ் மரத்தில் தூக்கு மாட்டப்பட்டு, கொலை செய்யப்பட்டார் அப்போஸ்தலர்ஆண்ட்ரூ!!

**இ**யேசுவை மறுதலித்த தோமையார், இந்தியா உட்பட பல நாடுகளுக்குச் சென்று இயேசுவை அறிவித்தார். அவர் நடமாடிய புனித தோமையார் மலை சென்னையில் தான் உள்ளது.

இயேசுவை அன்று நம்ப மறுத்த அதே தோமையார், கூரான ஈட்டிகளால் குத்தப்பட்டார்; பழுக்கக் காய்ச்சிய இரும்பால், உடலெங்கும் உயிரோடு எரித்து, சித்திரவதை செய்யப்பட்டே அவரைக் கொன்றார்கள்.



**ம**த்தேயு சுவிசேஷத்தை எழுதிய மத்தேயுவை மட்டும் விட்டு வைத்தார்களா என்ன?

அவரது தலையை துண்டித்து கொன்றார்கள்...

**பு**னித பர்த்தலேமியு என்ற சீடர் 'இறைவனின் கொடை' என்று புகழப்பட்டவர். இவரையும் சிலுவையில் அறைந்தே கொன்றார்கள்.

**ஜே**ம்ஸ் என்ற பெருடைய இன்னொரு சீடரை அவரது 94ஆவது வயதில் தேவாலயத்தின் உச்சிக்குக் கொண்டு சென்று இயேசுவை மறுதலிக்கச் சொன்னார்கள். அவர் மறுக்கவே, மேலிருந்து கீழே தள்ளிவிட்டார்கள். குற்றுயிராகக் கிடந்தவரை அடித்து நொறுக்கி சித்திரவதை செய்து கொன்றார்கள்.

**சை**மன் என்ற அப்போஸ்தலர், சிரியா, பெர்ஷியா, லிபியா,

*செலுத்துவதோடு சரி!*

*அதுவும், மிகுந்த புகழுடன் இருந்தபோது இறக்கின்ற இவர்களைக் கூட, இறந்தபின் சீண்ட ஆளில்லை!*

*ஆனால், துணைக்கு யாருமேயின்றி, அனாதையாக, கேவலமாக மரித்த இயேசுவுக்கோ அவர் இறந்தபின் இப்படியொரு திரள் கூட்டம் எப்படிச் சேர்ந்தது?*

*எப்படி... எப்படி... எப்படி..! புரிகிறதா..?*



ஆப்ரிக்கா, எகிப்து உட்பட பல நாடுகளில் சுவிசேஷத்தை அறிவித்தவர். இயேசுவை மறுதலிக்க மறுத்த ஒரே காரணத்தால் சிரியா நாட்டு அதிபரால், சிலுவையில் அறையப்பட்டு கொல்லப்பட்டார்.

யூதாஸ் தேடியஸ் என்ற அப்போஸ்தலர், மெசப்பட்டோமியாவில் கிறிஸ்துவைப்பற்றி பிரசங்கிக்கவே, துர்தேவதைகளை வணங்கிய அங்குள்ள மதகுருக்கள் அவரை அடித்தே கொன்றார்கள்!

இயேசுவைக் காட்டிக்கொடுத்த யூதாஸ் இஸ்காரியோத் என்ற சீடருக்குப் பதிலாக, பின்னர் சேர்த்துக்கொள்ளப்பட்டவரே மத்தியாஸ் ஆகும். இவரும் கல்லால் அடிக்கப்பட்டும், சிலுவையில் அறையப்பட்டும் கொல்லப்பட்டார்.



வித்தியாசமாக சிலுவையில் அறையப்பட்ட புனித சைமன்

அப்போஸ்தலராகிய பவுல், வேதாகமக் குறிப்புகள் பலவற்றை எழுதி பிரசித்தி பெற்றவர்! இறைவன் இயேசுவுக்காக பல்வேறு விதமான கஷ்டங்களை அனுபவித்தவர். கடைசியாக அவருங்கூட ரோமானிய சக்கரவர்த்தியால் தலை துண்டிக்கப்பட்டு இறந்தார்.

அப்போஸ்தலராகிய பிலிப், சிலுவையில் தலைகீழாக அறையப்பட்டு உயிர் நீத்தார்.

ஜான் என்ற அப்போஸ்தலர் தவிர கிறிஸ்துவின் 12 சீடர்களுள் மீதியுள்ள அனைவருமே, ஈவிரக்கமில்லாமல், சித்திரவதை செய்யப்பட்டே இறந்தார்கள். ஆக, கடைசிக்காலத்தில் இயற்கையாக மரணமடைந்த, சுவிசேஷகர்களுள் ஒருவராகிய இவரையுங்கூட, ஒருமுறை கொதிக்கிற எண்ணெய் கொப்பரையில் எறியப்பட்டு அப்போதைக்கு உயிர் தப்பியதாக கூறுபவர்களும் உண்டு! ■

*வேறொன்றுமேயில்லை..! அவர் இறைவன்..!!*


**ஆமாம், இதற்கு கருவியாக பயன் பட்டவர்கள் யார்?**

*வேறு யாருமல்ல...! மகா கோழைகளான இதே அப்போஸ்தலர்கள்தான்!*

*எவ்வாறு இது சாத்தியமாயிற்று? அவர்கள் இயேசுவுக்குப்பின், என்னதான் ஆனார்கள்?* *(பார்க்க: பெட்டிச் செய்தி)* ●

ஒரு பக்க கட்டுரை

# மனிதனின் இரத்தமும். இயேசுவின் இரத்தமும்...



ஒவ்வொரு மனிதனும் வாழ்வின் இலட்சியமாக நினைப்பது என்ன?

தானும் நன்றாக இருக்க வேண்டும் நமது பிள்ளைகளும் நன்றாக இருக்கவேண்டும் என்பதே!

பல தாய் தகப்பன்மார், தமது பிள்ளைகட்கு சேர்த்து வைத்துவிட்டுச் செல்வது, கடனும் பிரச்சினைகளையும் என்றால், சில பெற்றோர் செல்வத்தையும் வாய்ப்பையும் நல்ல பழக்க வழக்கங்களையும் சம்பாதித்து கொடுத்துவிட்டு செல்கிறார்கள்.

இதை நினைத்துப் பார்க்காதவன் மனிதனே இல்லை!

அதுபோலதான், நாம் வாழ்வதற்காக, நமக்கு இறைவன் இயேசுவே சம்பாதித்துக் கொடுத்துவிட்டு சென்றிருப்பது, இரட்சிப்பை! புதிய நம்பிக்கையை! புதிய வாழ்வை!

எப்படிச் சம்பாதித்தார்?

தனது விலையேறப்பெற்ற இரத்தத்தை சிந்தி, அதன்மூலம் கிடைத்த பலனை சம்பாதித்துத் தந்து விட்டிருக்கிறார்!

இரத்தம் எவ்வாறு வாழ்வை சம்பாதிக்கும்?

இரத்தம் இல்லாத மனிதன் இல்லை; இரத்தம் இல்லாமல் வாழ்வு இல்லை.!

கெட்ட இரத்தம் இருந்தால், என்ன பயன்? இரத்தத்தை சுத்திகரிக்க, மருத்துவர் கூறும் வழிகளைக் கடைபிடிக்க வேண்டியிருக்கிறதல்லவா?

ஆக, இரத்தம் இல்லாவிட்டால், மனிதன் பிணம்தான்: ஒவ்வொருவர் இரத்தத்திலும், வெள்ளை மற்றும் சிவப்பு அணுக்கள் ஒரு குறிப்பிட்ட அளவுகளில் உள்ளது.

மருத்துவரிடம் சென்றாலும் வியாதி தீரவில்லை என்றால், மருத்துவர் செய்வது என்ன?

இரத்தப் பரிசோனை செய்வதன் மூலம், என்ன வியாதி என்று கண்டுபிடிக்கிறார்: அதற்கான மருந்துகளை பரிந்துரைக்கிறார்.

இப்படிப்பட்ட மகத்துவமான இரத்தம்தான் உலகையே இயக்குகிறது எனலாம்!

மிருகங்களின் இரத்தமே சக்தி வாய்ந்ததென்றால் மனிதனின் இரத்தத்துக்கு எத்துணை வலிமை? மனிதனின் இரத்தத்துக்கே இவ்வளவு மகத்துவம் என்றால், தேவாதி தேவனின் இரத்தம் எவ்வளவு வலிமை உள்ளது.

பாவ நிவாரணத்திற்காக, பொதுவாகவே, இரத்தம் சிந்தப்படுதல் அவசியம் என்ற நியதி உலகில் உள்ளது.

அதற்காகத்தான் எல்லா மதங்களிலும் ஆடு, கோழி ஆகியவற்றின் இரத்தத்தை சிந்தி பலி கொடுத்து இறைவனை அல்லது ஏதாவது ஒரு ஆவியை சந்தோஷப்படுத்துகிறார்கள். (நல்லதும் கெட்டதும் தேர்ந்தெடுக்க வேண்டாமா - பார்க்க தனிக் கட்டுரை)

பழைய ஏற்பாட்டு காலத்திலுங்கூட இது மாதிரியான பலிகள் இருந்தன.

ஆனால், இனி அது தேவையில்லை!

ஏனென்றால், பாவ நிவாரணத்திற்காக காலங்காலமாக யார், யாருடைய ரத்தத்தை சிந்திக், கொண்டேயிருக்க முடியும் என்று இறைவன் நினைத்தார்.

இதுதான் அவரது அன்பு.... இரக்கம்!

ஒரு மனிதன் கூட செய்யாத காரியத்தை அவர் செய்தார்!

அதுதான் தனது ஒரே பேரான குமாரனை உலகுக்கு அனுப்பி அவரது விலையேறப்பட்ட இரத்தத்தை சிந்தச் செய்தார்!!

என்ன ஒரு அற்புதமான ஏற்பாடு பாருங்கள்?

இனி மனிதனின் பாவம் தீர உலகினருக்கு ஆடு, மாடு, கோழிகளின் இரத்தம் தேவையில்லை.

தேவாதி தேவன் எனக்காக இரத்தம் சிந்தினார் என்று நன்றியோடு அந்த இரத்தத்தை நினைத்தாலேயே போதும் பாவம் நீங்கி விடும்! நிம்மதி பெருகும்...!

இயேசுவின் இரத்தம் ஜெயம்!




# இப்போதுள்ள போப்பாண்டவர், உலகின் கடைசி போப்பாண்டவரா..?

செயின்ட் மலாக்கி! இவர் கத்தோலிக்க திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட புனிதர்! புனிதர் பட்டம் என்பது, இன்று வரையில் சுமார் 3000 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது, இது பற்றிய செய்தி தனிக்கட்டுரையாக வெளி வந்துள்ளது,இந்த மலாக்கி அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஒரு துறவி! 1139ஆம் வருடம், இவர் ரோமாபுரி சென்று சிறிது காலம் தங்கியிருந்தார். அப்போது அவர் கண்ட காட்சியும் அதுபற்றிய செய்தியும் தான் இப்போதுள்ள சூடான செய்தி!

அப்படி என்னதான் செய்தி....? அவரது காலத்திலிருந்து உலகம் முடியும் வரை உலகில் 111 போப்பாண்டவர்கள் பதவியேற்பார்கள் என்பதும், அவர்களது குணநலன்கள் என்ன என்பதையும் மிகவும் துல்லியமாக 'காட்சி'யில் கண்டபடி விவரித்திருந்தார், அவரது குறிப்பேட்டில்!

எழுதிய செய்திகள் ஆரம்பத்தில் பரபரப்பை ஏற்படுத்தாத காரணம், அப்போழுது அதன் அருமை பலருக்கு தெரியவில்லை. மட்டுமல்லாது, சுமார் 400 ஆண்டுகள் அந்தக் குறிப்பேடு காணாமல் போய்

விட்டிருந்தது!

கண்டுபிடிக்கப்பட்டபின், அவர் எழுதி வைத்திருந்த செய்திகளும், அவற்றின் துல்லியமான நிறைவேற்றமும் தான், ஒரேயடியாக அவரைப்பற்றியும் அவர் வழங்கிய தீர்க்கதரிசனங்களை பற்றியும், உலக முழுவதும் பேச வைத்து விட்டது.

அவர் கூறியது என்ன?

அவர் குறிப்பிட்ட 111 போப்பாண்டவர் யார் யார் என்பதை ஒரு அடைமொழி மூலம் குறிப்பிட்டிருந்தது அப்படியே, அச்சுப்பிறழாமல் நிறைவேறி விட்டன என்பதுதான், 'அடேங்கப்பா' ரகம்!

அடையும் அதே நாளில் அதாவது 33 நாளில் இறந்தார்!

ஆக, அவரது தீர்க்க தரிசனங்கள் எவ்வளவு துல்லியமாக நிறைவேறியது பாருங்கள்! செயின்ட் மலாக்கியா கூறிய 110 ஆவது போப்பாண்டவராகிய இரண்டாம் ஜான்பால் 1978-ல் பதவியேற்று 2005-ல் மரணமடைந்தார். இவரது அடைமொழி 'சூரியனை துவைப்பவர்"

ஆம்! போலந்து நாட்டில் பிறந்த இவர், போப்பாண்டவராக பதவியேற்றதுமே கம்யூனிசம் வீழ்ந்தது, கம்யூனிசத்தின் இருதயமான போலந்து, நாட்டின் சுரங்கத் தொழிலாளியான 'லேக் வலேசா' தலைமையில் போப்பாண்டவரின் கொடியுடன் திரண்ட தொழிலாளரின் வேலை

**அவர் குறிப்பிட்ட 111 போப்பாண்டவர் யார் யார் என்பதை ஒரு அடைமொழி மூலம் குறிப்பிட்டிருந்தது அப்படியே, அச்சுப்பிறழாமல் நிறைவேறி விட்டன என்பதுதான், 'அடேங்கப்பா' ரகம்!**

உதாரணமாக, பத்தாவது பயஸ் என்ற போப்பாண்டவர் பற்றி அவர் குறிப்பிட்டது 'எரிகிற தீ' என்பதாகும், அதே போன்று அவரது காலத்தில் கத்தோலிக்க திருச்சபையில் ஏற்பட்ட மாற்றம் பிரமிக்கத்தக்கது.

109வது போப்பாண்டவரான ஒன்றாவது ஜான் பால் என்பவரைப் பற்றி 'சந்திரனுக்கு நடுவில்' என்று குறிப்பிட்டிருந்தார் மலாக்கியா! அதே போன்று அவர் பதவியேற்ற நாள் 'பாதி நிலவு' தோன்றும் நேரமாகும். மட்டுமல்லாது அவர் சார்ந்திருந்த மறை மாவட்டம் பெலுானா. இதன் பொருள் 'அழகான சந்திரன்', அவர் ஞானஸ்நானம் எடுத்த இடம் அல்பினா லூசியானி! இதன் பொருள் 'வெள்ளை ஒளி'! 'பாதி நிலா' நேரத்தில் சந்திரனில் வெள்ளைக்கதிர்களை நாம் காணலாம். போப்பாண்டவராக பதவியேற்ற 33 நாளிலேயே இவர் இறந்து விட்டார். அதாவது 1978-ஆம் வருடம் ஆகஸ்டு 26-ம் தேதி 'பாதி நிலவு' தோன்றும் நேரத்தில் பதவியேற்ற அவர், அதே நிலவு முழுநிலவாகி, பின்னர் அமாவாசை

நிறுத்தம் போலந்தையே ஸ்தம்பிக்க வைத்தது! விளைவு? போலந்திலிருந்த கம்யூனிஸ அரசாங்கம் தூக்கி வீசப்பட்டது! முழுக்க முழுக்க கிறிஸ்துவ நாடாகியது, கம்யூனிஸ நாடுகளின் இருதயம் போன்ற நாடான போலந்து!

இருதயம் பாதிக்கப்பட்டால் அதன் தலையான ரஷ்யாவும், உறுப்பு நாடுகளான சுமார் 10 நாடுகளும் பாதிக்கப்படுமல்லவா?

ஆண்டாண்டு காலமாக உலகத்தையே தனது கம்யூனிஸ முரட்டுக்கண்களால் பயமுறுத்திய ரஷ்யாவில், கம்யூனிஸம் முற்றாக ஒழிந்தது, கடவுளைப் போன்று கொண்டாடப்பட்ட 'லெனின்' சிலையை, க்ரெம்ளின் சதுக்கத்தில் திரண்ட லட்சோப லட்சம் மக்கள் அடித்து உடைத்தார்கள்! கம்யூனிஸ ஆட்சிக்கு ரஷ்யா உட்பட அதன் அனைத்து உறுப்பு நாடுகளிலும் முடிவு கட்டப்பட்டது.

இப்போதுள்ள ரஷ்ய அதிபர் புட்டின் ஒரு கத்தோலிக்கர்! அவர் சமீபத்தில்தான்

*கத்தோலிக்கராக மாறினார் என்பது வேறு செய்தி!*

*ஆக, போப்பாண்டவர் பெயரால் ஆரம்பிக்கப்பட போலந்து புரட்சி, உலகில் கம்யூனிஸத்தையே வேரோடு சாய்த்தது என்றால், நிச்சயமாக அந்த போப்பாண்டவர் 'சூரியனை துவைப்பவர்' தானே!*

*மட்டுமல்லாது, திருச்சபையிலிருந்த பல்வேறு பழமைவாதங்களை அகற்றி இவரது பதவியில் மட்டுமே சுமார் 400 பேருக்கு புனிதர் பட்டம் வழங்கியவர்! 'பறக்கும் போப்' என்று சொல்லுமளவுக்கு உலக முழுவதும், தனது பாதுகாப்பையும் மீறி சுற்றித்திரிந்தவர், 20 ஆண்டு கட்கு முன்பு இந்தியா வந்த அவர், சென்னை மெரினாவில் 25 லட்சம் மக்கள் வெள்ளத்தில் தரிசனம் தந்தவர்; சூரியனையே துவைக்காத குறையாக, உலகையே துவைத்தவர் இவர். ஆக, புனித மலாக்கி இவரைப்பற்றி கூறிய 'சூரியனையே துவைப்பவர்' என்ற*

# வரப்போகும் துன்பம்..
# பைபிள்
# சொல்லுவதென்ன?

பைபிள் என்பது உலகம் தோன்றியது முதற்கொண்டு, இயேசு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் உலகில் மனிதனாகத் தோன்றிய காலம் வரையிலும், அதன் பின்னரும் பல்வேறு நபர்களால், பல்வேறு மொழியில் பல்வேறு இடங்களில் வைத்து எழுதப்பட்ட பல நூல்களின் தொகுப்பேயாகும்



**அந்தி கிறிஸ்துவின் அடையாளம்**

இந்த பைபிளில் கடைசி காலத்தில் நேரப்போகும் அந்த கொடிய நிகழ்வுகள் பற்றி புதிய ஏற்பாட்டு புத்தகங்களில் ஒன்றான மத்தேயு சுவிசேஷத்தில் இயேசு தமது சீடர்களிடம் கூறுவதாக எழுதப்பட்டுள்ளதை கீழே தருகிறோம் (மத்தேயு 24:1631)

யூதேயாவில் உள்ளவர்கள் மலைகளுக்குத் தப்பித்து ஓடட்டும். வீட்டின் மேல்தளத்தில் இருப்பவர் கீழே இறங்கி தம் வீட்டிலிருந்து எதையும் எடுக்காது ஓடட்டும்...

.... ஏனெனில் அப்போது பெரும் வேதனை உண்டாகும். உலகத் தோற்றமுதல் இந்நாள்வரை இத்தகைய துன்பம் உண்டானதில்லை. அந்நாட்கள் குறைக்கப்படாவிட்டால், எவரும் தப்பிப் பிழைக்க முடியாது. ஆனாலும், தாம் தேர்ந்து கொண்டவர்களினிமித்தம் கடவுள் அந்நாட்களைக் குறைப்பார்.

*அடைமொழி எவ்வாறு பொருந்தியிருக்கிறது பார்த்தீர்களா?*

*அடுத்து வருவது தான், நமது வயிற்றில் புளியைக் கரைக்கும் செய்தி!*

*ஆம்! இப்போதிருக்கும் போப்பாண்டவர்தாம் அவர் கூறிய 111வது போப்! 111வது போப்பாண்டவர் தான் உலகில் கடைசி போப் என்று மலாக்கியா கூறியிருந்ததை இங்கு மீண்டும் நினைவு கூறுவோம்.*

*இவருக்கு மலாக்கியா வழங்கிய அடைமொழி "ஒலிவத்தின் மகிமை" (ஆலிவ்) என்பதாகும்.*

*இப்போதுள்ள 'போப் பெனடிக்ட், குருவானவராக இருந்த போது சார்ந்திருந்த சபை 'ஆலிவ்ட்டான' என்ற பெயர் கொண்டது.*

*வேதாகமத்தில் இயேசு ஒலிவ மலையில் ஏறினபின் மனிதனாக இருந்த அவர், மகிமையில் மறுரூபமானார் என்ற சம்பவம் காணப்படுகிறது.*

அப்பொழுது, யாராவது மெசியா இங்கே இருக்கிறார், அதோ அங்கே இருக்கிறார் எனச் சொன்னால் நீங்கள் நம்ப வேண்டாம். ஏனெனில், போலி மெசியாக்களும், போலி இறைவாக்கினரும் தோன்றி, முடியுமானால், தேர்ந்து கொள்ளப்பட்டவர்களையே, நெறி தவறச் செய்ய பெரும் அடையாளங்களையும், அருஞ்செயல்களையும் செய்வார்கள். இதை முன்னதாகவே நான் உங்களுக்குச் சொல்லிவிட்டேன்.

ஆகையால் எவராவது உங்களிடம் வந்து, அதோ... பாலைவனத்தில் இருக்கிறார் என்றால் அங்கே போகாதீர்கள். இதோ உள்ளறையில் இருக்கிறார் என்றால் நம்பாதீர்கள்.

ஏனெனில் மின்னல் கிழக்கில் தோன்றி மேற்கு வரை ஒளிர்வது போல, மானிட மகனின் வருகையும் இருக்கும்.

பிணம் எங்கேயோ அங்கே கழுகுகளும் கூடும்.

துன்ப நாட்கள் முடிந்தவுடன் கதிரவன் இருண்டுவிடும், நிலா தன் ஒளி கொடாது. விண்மீன்கள் வானத்திலிருந்து விழும். வான்வெளிக் கோள்கள் அதிரும்.

அப்போது வானத்தில் மானிட மகள் வருகையின் அறிகுறி தோன்றும். அப்போது, மிகுந்த வல்லமையோடும். மாட்சிமையோடும் மானிட மகன் வானத்தின் மேகங்களின் மீது வருவார்.




**அந்தி கிறிஸ்து?**

இதைக்காணும் மண்ணுலகிலுள்ள எல்லா குலத்தவரும் மாரடித்துப் புலம்புவர். அவர், தம் தூதரை பெரிய எக்காளத்துடன் அனுப்புவார்.


அவர்கள் உலகின் ஒரு கோடியிலிருந்து மறுகோடி வரை, நான்கு திசைகளிலுமிருந்தும் தேர்ந்தெடுத்துக் கொள்ளப்பட்டவர்களைக் கூட்டிச் சேர்ப்பார்கள்.

என்று இவ்வாறாக விவரிக்கும் வேதாகமம், தொடர்ந்து, இறைவன் எவ்வாறு உலக மகா நீதிபதியாக, மக்களை நடுத்தீர்ப்பார் என்றும் விவரிக்கிறது. •

அப்போதுதான், உலகின் கடைசி நாட்கள் பற்றிய செய்திகளை முன்னறிவித்தார் இயேசு.

இன்னுமொரு சுவாரசியம் என்னவென்றால் ஆலிவ் இலை, சமாதானத்தைக் குறிக்கும் யூதர்களின் சின்னமும் ஆகும்! வேத வல்லுனர்கள் கூறுவன என்னவென்றால், இவரது காலத்திலேயே, யூதர்களும் முற்றாக மனம் மாறி திருச்சபையில் இணை வார்கள் என்பதே!

இன்னொரு அதிசயம் இந்த போப், 'புனித பெண்டிக்ட்' என்பவரது பெயரைத்தான், தாம் பட்டம் பெற்றபின் சூடிக்கொண்டிருக்கிறார். இவரது உண்மையான பெயர் ரட் சிங்கர்! இவரின் பாதுகாவலரான புனித பெனடிக்ட், தாம் வாழ்ந்த காலத்தில் கூறியிருந்த தீர்க்க சரிசனம் என்ன தெரியுமா? "எனது சபையான பெனடிக்ட் (பெனடிக்ட் ஆர்டர்) அதாவது (ஒலிவடைன்ஸ்) உலக முடியுமுன்பு கத்தோலிக்கத் திருச்சபையை வெற்றியின் பாதையில் நடத்தும் "என்பதாகும்



**2-ம் ஜான் பால் - புனித மலாக்கியாவின் காட்சிக்கு பின் வந்த, 110ஆவது போப்பாண்டவர்...**

ஆக, இந்த ரட்சிங்கர், பெனடிக்ட் பெயரை சூட்டுவதும், இவர்தான் 111வது 'ஒலிவட்டான்' ஆகிய போப் என்று செயின்ட் மலாக்கியா 800 வருடங்கட்கு முன்பு கூறியதும், பல்லாண்டுகட்டு முன்பு வாழ்ந்த புனித பெனடிக்ட் அப்பொழுதேயே மேற்கண்டவாறு அவரது சபையின் எழுச்சியைப்பற்றி கூறியதும் கனகச்சிதமாக பொருந்துவதைப் பார்த்தால்.... எப்படி..... எப்படி....?

சரி... விஷயத்துக்கு வருவோம். இந்த 111வது போப் இப்போதுள்ள போப் என்றால் உலகம் முடிந்து விடுமா? 2012–ல் உலகம் அழியும் என்று பல்வேறு திரைப்படங்கள், செய்திகள் மூலம் கலக்குகிறார்களே, அதற்கும் இதற்கும் சம்பந்தமுண்டா?

***பொறுங்கள்... பொறுங்கள்... செயின்ட் மலாக்கியா தீர்க்கதரிசனம் இன்னும் முடிவுறவில்லை...***

ஏற்கனவே கூறியது போன்று, 800 ஆண்டுகட்கு முன்னர் 111 போப்பாண்டவர் வரப் போவதாகக் கூறிய அதே புனித மலாக்கியா, முக்கியமான இன்னொரு விஷயத்தையும் கூறி தனது குறிப்பை முடித்துக் கொள்ளுகிறார்

111வது போப்பின் ஆளுகை முடிந்ததும், இன்னும் ஒரு போப் வருவார். மகா உபத்திரவ காலமான கடைசி காலத்தில் இவர் ஆளுவார்! இந்த போப் பாண்டவர் ரோமாபுரியின் 'பீட்டர்' ஆவார். பரிசுத்தமான ரோமாபுரியின் கத்தோலிக்க திருச்சபை சிதிலமாக்கப்பட்டு, கடின மான, கொடூரமான இந்த சோதனைகளுக்கிடையே, தனது மந்தையை இவர் வழி நடத்துவார். அதன்பின் ஏழு குன்றுகளின் நகரம் அழிக்கப்படும் அப்போது, மகா பராக்கிரமமான நீதிபதி உலகத்தை நடுத் தீர்ப்பார்! இதுவே முடிவு. என்று தனது தீர்க்கதரிசனத்தை முடிக்கிறார்.

இதை வைத்து ஒரு சிறு கணக்கு போட்டால், இந்த சம்பவங்கள் நடப்பதற்கு இன்னும் 25 வருடங்களுக்கு மேல் ஆகாது.

அதாவது, இப்போதுள்ள போப்பாண்டவர் இன்னும் 10 ஆண்டுகள் உயிர் வாழ்வார் என்று வைத்துக் கொண்டாலும், அதன் பின் வருகின்ற போப்பாண்டவர் மேலும் ஒரு 15 ஆண்டுகள் இருப்பாரென வைத்துக் கொள்ளுங்கள். அப்படியானால் மொத்தம் 25 ஆண்டுகளுக்குமேல் இந்த உலகம் தாங்காது.

என்ன? புல்லரிக்கிறதா....?

***(பார்க்க வரப்போகும் துன்பம் - பெட்டிச் செய்தி)***

■

# வாசகர் கடிதம் - விவாத மேடை...?

கடந்த 2011 வடவை மாதா குரலொலி - 2012யில் வெளிவந்த சில கருத்துக்களுக்கான ஆட்சேபத்தை நமது வாசகர்களுள் ஒருவரான சென்னை பல்லாவரத்தைச் சேர்ந்த திரு.கே.சேகர் (வடவை) தமது கடிதம் மூலம் நமக்குத் தெரிவித்தார். அதற்கான நமது பதில் கடிதத்தில் அவரது ஆட்சேபத்தை விவரமாக தெரிவிக்கக் கோரியிருந்தோம். அந்த நமது கடிதம் மற்றும் அவரது பதில் கடிதம், இப்போது நமது விளக்கம் ஆகியவற்றைக் கீழே காணலாம்.

*(திரு. சேகர் எழுதிய ஆட்சேபணைக் கடிதத்திற்காக நாம் எழுதியிருந்த பதில் கடிதத்தை இங்கே தருகிறோம்)*

திரு.சேகர் அவர்கள் அறிவது:

2011 வடவை மாதா குரலொலி - 2012 பற்றிய தங்களது கடிதம் கிடைக்கப்பெற்றது!

தங்களது உணர்வுகளை மதிக்கிறேன். ஆனால், மேற்படி இதழில் வெளிவந்ததாக நீங்கள் 'வருத்தப்படுகின்ற' சில விஷயங்கள் 'செய்தியாக' வந்ததா, விமர்சனங்களாக வெளிவந்ததா என்பதை தயைகூர்ந்து, பரிசீலிக்குமாறு வேண்டுகிறேன்.

வெளிவந்த கீழ்க்கண்ட விஷயங்கள்-

* நித்தியானந்தா சர்ச்சை
* 'காசி'யின் அவலநிலை
* 'அகோரி'களின் பிணந்தின்னும் பாங்கு
* வைத்தீஸ்வரன் கோவில் ஓலைச்சுவடிகளின் நம்பகத்தன்மை
* செய்வினை மற்றும் நரபலியில் சாமி படங்களின் பயன்பாடு
* புட்டபர்த்தி சாய்பாபா இறந்தபின், அங்குள்ள நிலைமை
* சபரி மலையின் மகர ஜோதியின் செயற்கைத்தன்மை
* ஜெயேந்திரருக்கு, வழங்கப்பட்ட கடவுளுக்கு நிகரான மரியாதை

ஆகியவை செய்தியாகவே வெளியிடப்பட்டன: விமர்சனங்கள் வைக்கப்படவேயில்லை!

செய்தியாக வெளியிடப்பட்டன. தவிர ஒவ்வொன்றைக் குறித்தும் சராசரி இரண்டு வரிகளே எழுதப்பட்டிருந்தன!

செய்தி என்பது நாட்டு நடப்பை தெரியப்படுத்துவது விமர்சனம் என்பது 'அக்கு வேறு ஆணி வேராக' அலசி உண்டு இல்லை என்று ஆக்குவது.

ஆக, 'விமர்சனம்' நமக்கு தேவையில்லாதது (வீண் வேலை) என்பதால், வெறும் செய்தியாகத்தான் அவை வெளியிடப்பட்டன;

25 வருடங்கட்கு மேலாக வடவை மாதா குரலொலி - 2012 வெளியிடப்பட்ட போதெல்லாம் இதுபோன்ற பிறமதசெய்திகள் வெளிவந்ததேயில்லை, ஆனால், கடந்த வருடத்தில்தான் மேற்கூறப்பட்ட எட்டு விதமான காரியங்களும், மீடியாக்களில் நாள்தோறும் அலசப்பட்டன....

குறிப்பாக, மேற்கூறிய எட்டு விதமான அனைத்தும் எல்லா டிவி சேனல்களிலும் குறிப்பாக சன் டிவியின் 'நிஜம்' நிகழ்ச்சி, விஜய் டிவியின் நடந்தது என்ன? நிகழ்ச்சி,

ஜூனியர் விகடன், குமுதம் ரிப்போர்ட்டர், நக்கீரன் உட்பட பல்வேறு ஊடகங்களில் வெளிவந்தவைதான்! காலத்தின் தேவையறிந்து, இந்த கம்ப்யூட்டர் யுகத்தில் மூடிமறைப்பது உகந்ததல்ல என்ற கருத்தோடும், பொதுவான மத விழிப்புணர்ச்சி அனைவரும் பெறுவதில் தவறில்லை என்ற நோக்கிலும் எடுத்துரைக்கப்பட்டது; அதுவும், செய்திக் கண்ணோட்டத்துடனேயே வெளியிடப்பட்டது என்பதை தங்களுக்கு தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன்.

தங்களைப் போன்ற நல் உள்ளங்களைப் புண்படுத்துவது எமது நோக்கமல்ல. தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள்!

மேற்கண்ட எட்டு காரியங்களையும் தாங்கள் ஞாயப்படுத்த நினைத்தால், தாராளமாக எனக்கு எழுதுங்கள்; தவறாது வருகின்ற 2012 ஆகஸ்டு இதழில், அதனை பிரிசுரிக்க தயாராக உள்ளோம்.

திரு சந்திரகுமார் அவர்களுக்கு

தங்கள் கடிதம் கிடைக்கப்பெற்றேன். தங்களின் முந்தைய இதழ் ஆகஸ்டு *2011*-ல் கிறிஸ்துவ மதக்கடவுளைத் தவிர பிற மதக்கடவுளெல்லாம் கெட்டவர்கள் என்று சித்தரிக்கப்பட்டுள்ளது. இதை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்ற நோக்கத்தில் தான், நான் எழுதியிருந்தேன். பிற மதங்களையோ அல்லது அவர்கள் வழிபடுகின்ற தெய்வங்களை கெட்டவர்கள் என்று கருத்து தெரிவிப்பது சரியல்ல.

மேலும், கடவுள் பெயரால் தில்லுமுல்லுகள் செய்து அப்பாவிமக்களைஏமாற்றும் போலி சாமியார்கள் நாளுக்கு நாள் பெருகிவருகின்றனர். தாங்கள்கடிதத்தில் குறிப்பிட்ட எட்டு பகல் வேஷகாரர்களும் இதில் அடங்குவர். ஆனால் இதை போன்ற வேஷதாரிகள் எல்லாமதத்திலும் இருக்கின்றனர். தனிப்பட்ட நபர்களான இவர்களின் செயலால் எந்த மதமோ, கடவுளோ கெட்டவர்களாகி விட முடியாது. இப்படிபட்ட போலி சாமியார்களின் செயல்பாடுகளை வெளிச்சம் போட்டு காட்டுவது தவறல்ல.

மூட நம்பிக்கை என்பது எல்லா மதங்களிலும் ஏதாவது ஒரு வழியில் நடந்து கொண்டிருக்கிறது. சிறுவயதில் எனக்கு கூட ஞானஸ்நானம் கொடுத்தும் அந்தோணியார் கோயிலில் மொட்டையடித்தும் அசனம் கொடுத்திருக்கிறார்கள். இதை எந்த நம்பிக்கையில் சேர்ப்பது? மொட்டையடிப்பது மொட்டையடிப்பவர்களுக்கு தெய்வ நம்பிக்கையாகவும் மற்றவர்களுக்கு மூடநம்பிக்கையாகவும் தோன்றும். இந்த விசயங்களில் தங்கள் கருத்தை வெளிப்படுத்துவதில் தவறல்ல. எனது சிறிய வேண்டுகோள் என்னவென்றால் இனிவரும் அடுத்த இதழ்களில் வடவை மாதாவின் சிறப்புகள், அற்புதங்கள் மற்றும் பெருமைகள் பற்றியும் வடவையின் வரலாறு மற்றும் புகழ் பற்றி அதிக செய்திகள் இடம் பெற்றிருந்தால் இது தங்கள் இதழ் ''வடவை மாதா குரலொலி - *2012*'' என்ற பெயர்க்கேற்ப சிறப்பாக அமையும்.

இப்படிக்கு

கே. சேகர், பழைய பல்லாவரம்

# நமது விளக்கம்:

திரு.சேகர் அவர்கள் எனக்கெழுதிய முதல் கடிதமும் அவரது இரண்டாவது கடிதத்தின் கருத்தைக் கொண்ட காரணத்தால் முதல் கடிதம் இங்கு பிரசுரிக்கப்படவில்லை. கடவுளைத் என்று திரு. சேகர் அவர்கள், தாம் அந்தோனியார் கோவிலில் மொட்டையடித்ததை மூடப்பழக்கம் இல்லையா என்று குறிப்பிட்டிருக்கிறார்.

வாசகராகிய சேகர், வடக்கன்குளத்தில் பல்லாண்டுகட்கு முன்னர், ஏற்பட்ட ஜாதியின் பெயரால் ஏற்பட்ட மனஸ்தாபத்துக்காக பல கிறிஸ்தவக் குடும்பங்கள் இரண்டு மூன்று மதங்களுக்கு மாறிய போது மதம் மாறியவரெனத் தெரிகிறது.

**நமது விளக்கம்:** மொட்டை அடிப்பது, நடைபயணம் மேற்கொள்வது, உபவாசம் இருப்பது, இவையெல்லாம் ஒரு மனிதன் இறைவனிடம் தனது தாழ்ச்சியைக் காட்டும் பொருட்டு செய்கின்ற ஒரு சில ஒறுத்தல் முயற்சிகள்! நிச்சயமாக இதனை ஒருபோதும் மூடநம்பிக்கை என்று கூறமுடியாது.

அதாவது, இயற்கைக்கு மாறான காரியங்களை நேர்ச்சை என்ற பெயரில் செய்வது அனைத்துமே மூடநம்பிக்கை! மனிதனது உடல் வாழுவதற்காக பயன்படுத்துவது, அந்த உடலில் மொட்டை (தலையில்) போடுவதனால் பாதிப்பு ஏற்படாது! அது ஒரு வகையில் உடலுக்கு நல்லதே! பேன்கள் ஒழியும், காற்றோட்டம் ஏற்படும். முடிந்த அளவுக்கு உபவாசம் இருப்பதுங்கூட நன்மையைத்தரும் என்றே மருத்துவம் கூறுகிறது; நடைப் பயணம் நல்ல உடற்பயிற்சி!

ஏற்கெனவே கூறியது போன்று மொட்டையடிப்பது மூடப்பழக்கமில்லை; ஆனால் அந்த தலையில் தேங்காய் உடைத்து, மருத்துவ ரீதியான பின்விளைவுகட்கு ஆளாக்குவது தான் மூடப்பழக்கம்.

தூக்க நேர்ச்சை என்று பச்சிளங்குழந்தைகளை கழுமரத்தில் ஏற்றாத குறையாக பாடுபடுத்துவதை, நல்லவரான இறைவன் எப்படி ஏற்றுக்கொள்வார்?

அலகு குத்துவதைக்கூட நாத்திகம் பேசும் திராவிட கழகத்தினர் செய்து காட்டு கின்றனர். மூடப்பழக்கங்களை எடுத்துக்கூறும் மதச் சுதந்திரம் இந்தியாவில் உள்ளது.

சிறுபிள்ளைகளை பூச்சாண்டி என்று எதையோ காட்டி பயமுறுத்துவது வழக்கம். ஆனால் அவ்வாறு பயங்காட்டப்பட் குழந்தை, பெரியவனான பின்னர், இந்த பூச்சாண்டி எல்லாம் என்னிடம் பலிக்காது என்கின்றான்!

அதுவும் இந்த யுகத்தில் கேட்கவா வேண்டும்?

ஆனால் நாம் மட்டும், ஏன் சாமி தண்டிப்பார் அதனால் நமது வீடுகளுக்கு வாசலில் கதவு வைக்கக்கூடாது என்றும், நமது காதுகளை நீளமாக வளர்க்காவிட்டால் சாமி தண்டிப்பார் என்றும், தரையில் தலை வரை புதைத்து வைத்து இறைவனை மகிழ்விப்போம் என்பதும், கோழி, ஆடு போன்றவற்றை உயிரோடு கடித்துக் குதறி, பார்ப்பவர்களை அச்சப்படுத்துவது, நாகரீகம் வளராத அந்தக் காலத்திற்கு சரி. இந்தக் காலத்தில் இது ஏன் என்று நாமல்ல தினமும் காலை முதல் இரவு வரை சுமார் 3 மணி நேரம் பக்தி நிகழ்ச்சிகளை ஒளிபரப்பும் விஜய் டி.வி.யில் நடந்தது என்ன நிகழ்ச்சியிலும், நக்கீரன் குமுதம் ரிப்போர்ட்டர் ஜுனியர் விகடன் ஆகிய கிறிஸ்தவரல்லாத பத்திரிகைகளும் தான் இவற்றையெல்லாம் வெளிப்படுத்தியதைத் தான் நாமும் குரலொலியில் பிரசுரித்தோம் என்பதை தயவு கூர்ந்து வாசகர் உணர வேண்டும் என்று வேண்டுகிறோம்.

தவிர, எட்டு விதமான கருத்துக்களுக்கு விளக்கமளிக்க வாசகருக்கு வாய்ப்பு கொடுக்கப் பட்டது.

ஆனால், அவர் சாமியார்களெல்லாம் சரியல்ல என்று முடித்துக்கொண்டுவிட்டார். நித்யானந்தா, பாபா, ஜெயேந்திரர் இவர்களைக் கூட நமது பத்திரிகை இழிவு படுத்தவேயில்லை - இவர்களை கடவுளாக உயர்த்துவதைத் தான் எடுத்துக்கூறியது.

***வாசகர் இந்த மூன்றையும் விட்டு விட்டு, மீதமுள்ள ஐந்து கருத்துக்கள் பற்றி விளக்கம் கூறியிருக்கலாமே என்பதே நமது கேள்வி.***

– **மு.சேவியர் சந்திரகுமார்**, ஆசிரியர்

# இயேசுவிக்குப்பின் மாதாவின் வாழ்க்கை

- வடவை அன்னக்கிளிராசையா (மலேசியா)

ஆண்டவராகிய இயேசு சிலுவையில் அறையுண்டு தொங்குகையில் தம் திருத் தாயாகிய மரியாளை புனித யோவானிடம் ஒப்படைத்து மனிதகுலத்தின் தாயாக ஏற்படுத்தினதை நாம் நற்செய்திகளின் வழி அறிவோம்.

அதிலிருந்து புனித யோவானின் வீட்டுக்குச் சென்று தங்கினாள், மரியாள்.!

மரியாளுக்கு தலை மகனாய் பிறந்த ஒரே மகன் இயேசுவைத் தவிர வேறு ஒருவரும் இல்லாத காரணத்தால் அவள் இயேசுவின் அன்பு சீடர் யோவானின் வீட்டிலேயே தங்கி வாழ்ந்து வந்திருந்தாள் என்பதற்கு பல வரலாற்று சான்றுகள் உள்ளன.

தேபஸ் நகரத்தினரான ஹிப்போலித்துஸ் என்பவர் எழுதி வைத்த பழங்கால வரலாற்றுரையில் கீழ்க்கண்ட குறிப்பு காணப்படுகின்றது.

புனித யோவான் தன் தந்தையாகிய செபதேயின் மரணத்திற்குப் பின்பு கலிலேயாவில் தனக்கிருந்த உடைமைகளை விற்று, எருசலேமில் புது உடைமை களை வாங்கினார். அவர் பெரிய குருவுக்கு அறிமுகமாயிருந்தாரென்று தன் சுவிசேஷகத்தில் கூறியிருக்கிறார். சீயோனில் தன் விடுதியில் அவர் கன்னி



மரியாளை வரவேற்று அவளுடைய மோட்ச ஆரோபணம் வரை. அவளைப் பாதுகாத்தார். அவள் மோட்சத்துக்கு எடுத்துக் கொள்ளபட்டட பின்பு அவர் ஆசியாவிலுள்ள எபேசில் போதித்தார். அங்கு அவரை கடவுள் இவ்வுலகிலிருந்து எடுத்துக்கொண்டார்.

இயேசு மரணமடைந்த காலத்தில் அவரது திருத் தாயாராகிய மரியாளுக்கு நாற்பத்தேழு வயது இருக்கும் என்றும் அதன்பின் மேலும் *16* ஆண்டுகள் வரையிலும் இவ்வுலகில் இருந்தாள் என்றும் பழங்கால வரலாற்றுரையில் காணப்படுவதாக கன்னி மரியாளின் வணக்க மாதம் என்ற நூலில் குறிக்கப் பட்டிருக்கிறது.

இயேசு விண்ணகம் செல்லு முன் தம் அப்போஸ்தலர்களையும் இதர சீடர்களையும் உறுதிப்படுத்தும் பொருட்டு பரிசுத்த ஆவியின் வருகையை வாக்களித்திருந்தார்.

பரிசுத்த ஆவியின் வருகையை பெறுவதற்கு ஆயத்தமாக சீடர்கள் ஒன்று சேர்ந்து செபம் செய்கையில், மரியாளும் அவர்களுடன் இருந்தாள். பெத்தகோஸ்த் நாட்கள, நிறைவேறினபோது அப்போஸ்தலர்களோடு மற்ற ஆண் பெண் சீடர்களோடும் மரியம்மாளும் மீண்டும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டாள்!

கபிரியேல் தூதர் வாழ்த்துச் செய்தி கூறிய அந்த நாளில் அவள் இயேசுவைக் கருவேந்தி மீட்பரின் தாயானாள் அல்லவா?. அதேபோன்று பெந்தகோஸ்த் அன்று அவள் இயேசுவின் ஞான உடலை கருவேந்தி திருச்சபையின் தாயானாள்.

பெந்தைகோஸ்த் நாள்வரை மந்த மனத்தினராகவே இருந்திருந்த அப்போஸ்தலர்களோ, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டதும் மனத் தெளிவும் திடமும் பெற்றெழுந்து எழுச்சியோடு கிறிஸ்துவாகிய ஆண்டவர் போதித்த உண்மைகளை உலகமெத்திசையிலும் பரப்பும் திருப்பணியில் ஈடுபடத் தொடங்கினார்கள்.

அவ்வப்போது, அப்போஸ்தலர்களும் சீடர்களும் புதிதாக ஞானஸ்நானம் பெற்றவர்களும் இயேசுநாதரையும் அவருடைய

*வாழ்க்கையையும் இயல்புகளையும் மேன்மேலும் அறிய விரும்பி மரியன்னையை நாடிச் சென்றார்கள்.*

*இயேசுவை அவரது தாயான கன்னிமரியாள் அறிந்திருந்த அளவுக்கு வேறு யாரும் அறிந்திருக்கமாட்டார்கள்.*

*ஆகவே, ஆதி கிறிஸ்துவர்களுக்கு, இயேசுவின் திரு இருதயத்தை அறிமுகப்படுத்தும் பொறுப்பும். திருச்சபையை உலகமெல்லாம் போதிக்கச் செல்லும் அப்போஸ்தலர்களுக்கு இயேசுவின் வாழ்க்கை வரலாற்றை துவக்கத்திலிருந்தே விவரமாகவும் முழுமையாகவும் தெரியப்படுத்தும் கடமையும் தேவமாதாவுக்கே உரித்தாயிற்று.*

*நான்கு நற்செய்திகளையும் அப்போஸ்தலர் நடப்புகளையும் எழுதின வரலாற்றாசிரியர்கள் நால்வரும் மரியாளின் துணை பெற்றே, தங்கள் நூல்களை எழுதினார்கள் என வரலாறுகள் சான்று பகர்கின்றன.*

*தேவதாய் துயிலும் நேரம் வந்ததும், அவளின் கண்ணிமைக்குத் தீங்குரா வண்ணம், அவளில் மனிதவுரு பூண்டு பிறந்த மாட்சியின் இரண்டாமாளான தேவன் அவளுடைய திரு உடலையும் பழுதுறா வண்ணம் காத்து, உயிர்ப்பு நாளுக்கு முன் அதை விண்ணுலகத்திற்கு எடுத்துக் கொள்ள திருவுளமானார்.*

*விண்ணரசியான மரியாளை இறைவன் ஆன்மாவோடும் உடலோடும் விண்ணக மகிமைக்கு எடுத்துக் கொண்டது நமக்கு உறுதியான நம்பிக்கையையும், ஆறுதலையும் தருகின்றது. ஆமென்.* ■

# இறைவன் இயேசுவே தேர்ந்தெடுத்தால்...? மனிதனால் என்ன செய்யமுடியும்..?

## - 'விசாலி' மனம் மாறியது எப்படி



விசாலி மனோகர்

அர்த்தமுள்ள இந்துமதம் என்ற புத்தகம் காலஞ்சென்ற கவியரசு கண்ணதாசனால் எழுதப்பட்டு இன்று இந்தியாவெங்கும் பேசப்படும் காவியம்!

இந்த படைப்பு, மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றதால், பத்து பாகங்களாக தொடர்ந்து கண்ணதாசனால் எழுதப்பட்டு, விற்பனையில் சக்கைப்போடு போட்டது!

இவரது மகள் விசாலி கண்ணதாசனும், தந்தைக்கு நிகராக, கவிதையிலும், பட்டிமன்றம் மற்றும் பொதுவாழ்விலும், தொலைக்காட்சியிலும் பிரகாசிப்பவர்!

சமீபத்தில், இவர் கிறிஸ்தவராக மனம் மாறினார் என்பது ஆச்சரியமான நிகழ்ச்சி! இப்போதைய இவரது பெயர் ஜெனிஃபர்!

இவரைப்பற்றிய செய்திகட்காக இணைய தளத்தில் தேடியபொழுது, அர்த்தமுள்ள இந்துமதத்தை எழுதியதற்கு அர்த்தமே இல்லாமல் பண்ணிவிட்டதாக புலம்புகிறார்கள் இவருடைய ரசிகர்கள்!



கண்ணதாசன்

***ஆனால், இறைவன் இயேசுவே தேர்ந்தெடுத்த பின்னர், பாவம், சாதாரண மனிதனால் என்ன செய்ய முடியும்..? என்றே கேட்கத் தோன்றுகிறது...!***

ஆய்வுக்கட்டுரை



# அரபு நாடுகளின் இப்போதைய கலவரங்கள்..

– மு.சேவியர் சந்திரகுமார்

வாசகர்களே!

கிறிஸ்தவர்கள் அனைவரும் உலகமுடிவைப் பற்றிய சரித்திர உண்மைகளைப் பற்றி தெரிந்து கொள்வது அவசியம்! தயவு செய்து, இதை ஒதுக்கிவிடாமல் சிரத்தையோடு வாசிக்கவும்

– ஆசிரியர்

## பைபிள், மாதா மற்றும் செயின்ட் மலாக்கியாவின் பின்னணியில் திடுக்கிட வைக்கும் உண்மைகள்!!

நெருப்பில்லாமல் புகையாது என்பர்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம், கத்தரிக்காய் முற்றினால் வீதிக்கு வரும் இவையெல்லாம் கூட நம் முன்னோர்கள் வகுத்த பழமொழிகள்.

அதுபோல, உலகநாடுகளில், எங்கேயுமே இல்லாதபடி இந்த



அரபு நாடுகளிலுள்ள நகரங்களிலெல்லாம், இது போன்ற ஆர்பாட்டங்கள் மிகச் சாதாரணம்...




மிகச் சிறிய நாடாகிய இஸ்ரேலைச் சுற்றிலுமுள்ள 22 அரபு நாடுகளும் எதிரி நாடுகள்...

# உலக முடிவையா காட்டுகிறது..?

அரபு நாடுகளில் மட்டும் ஏற்பட்டுள்ள கலவரம் ஓய்ந்த பாடில்லையே.

எங்கு பார்த்தாலும் போராட்டம். அடக்கு முறை, கலவரம், பேரணிகள் துப்பாக்கிச் சூடு. வீதிக்கு வந்து பேராடுகிறார்கள் மக்கள்

முதலில் ஆரம்பித்தது என்னவோ அரபு நாடுகளுள் ஒன்றான டுனீஷியாவில்தான்! ஆனால் அதே போன்ற எழுச்சி எகிப்து உட்பட ஜோர்டான், லெபனான், அல்ஜீரியா, சிரியா, ஏமன், பக்ரின், மொராக்கோ போன்ற பல நாடுகளிலும் பரவி எங்கு பார்த்தாலும் கொந்தளிப்பு.

பல்லுக்குப் பல்.. கண்ணுக்குக் கண் என்பது பழைய ஏற்பாட்டு காலத்தின் விதி! அதேபோன்று இங்கெல்லாம் ஆட்சியாளர் கையில் கிடைப்பார்களா? என்ன செய்கிறேன் பார் என்று கொதித்தெழுந்துள்ள இந்த மாபெரும் மக்களின் கோபம் எங்கே போய் முடியும்?

பைபிளில் கூறப்பட்டுள்ள கடைசி கால தீர்க்கதரிசனங்களுக்கும், இப்போது நடைபெறும் காரியங்களுக்கும் சம்மந்தமுண்டா?

இதுபற்றி பல்வேறுவிதமான வரலாற்று நிகழ்வுகளை ஆராய்ந்தபோது கிடைத்த விடைதான் மேற்கொண்டு வருவது;

**பொ**துவாக, அரபு நாடுகளான, மத்திய கிழக்கு நாடுகள் பற்றி அலசும்போது, பைபிளை அலசாமல் இருக்கவே முடியாது.

அதுமட்டுமல்ல மத்திய கிழக்கு நாடுகள் என்றாலே, அதில் பிரதானமானது எகிப்து ஆகும்.

ஆகவே இந்த எகிப்தைப்பற்றி அதிகமாக அலசும்போதெல்லாம், அதனைச் சுற்றிய பிற மத்திய கிழக்கு நாடுகளையும் ஆராய்வதாகத் தான் அமையும்.

உதாரணமாக, சுமார் 20 ஆண்டுகட்கு முன்பு

எகிப்தை பல்லாண்டுகளாக ஆட்சி செய்த அதிபர் நாசர், தன் வாழ்நாள் முழுவதும் சண்டை போட்ட நாடு எது தெரியுமா?

இஸ்ரேல் தான்...!

இந்த இஸ்ரேல் என்பது மேற்சொன்ன எல்லா நாடுகளுக்கும் 'சம்மந்தி' போன்று அருகிலேயே அமையப்பெற்ற 'சுண்டைக்காய்' நாடு.

கிட்டத்தட்ட நமது சென்னை நகரம் போன்றது!

**அத்தனை அடியையும் வாங்கிக்கொண்டு, ஒன்றுமே நடைபெறாதது போன்று, அத்துணை எழுச்சியுடன், அன்றிருந்தது போன்று இன்றுவரை நெஞ்சை நிமிர்த்தி நிற்பதற்கு எவ்வாறுதான் முடிகிறது., இந்தச் சுண்டைக்காய் நாட்டால்...? என்று விழி பிதுங்கின இந்த நாடுகள்!!**

ஆனால், அன்றிலிருந்து இன்று வரை, அதாவது என்றைக்கு இயேசு கிறிஸ்து எருசலேம் நகர வீதிகளில் சிலுவையை சுமந்துகொண்டு வந்தபோது, கூடவே நடந்துவந்த எருசலேம் பெண்களின் அழுகையைப் பார்த்து, "எனக்காக அழாதீர்கள்... உங்களுக்காகவும் உங்கள் சந்ததியினருக்காகவும் அழுங்கள்... ஏனெனில் பச்சை மரத்தையே இவ்வாறு செய்கிறார்கள் என்றால், பட்ட மரத்தின் கதி என்ன" என்றும், பல நாட்களுக்கு முன்னர் எருசலேம் நகரைப் பார்த்த மாத்திரத்தில் "உலகம் முடியுமட்டும் போர் மேகங்கள் உன்னைச் சூழ்ந்திருக்கும். ஆனால் நீயோ அழிவதில்லை" என்றுமாக கூறினாரோ, அன்றிலிருந்தே, இஸ்ரேல், மேற்கண்ட இரண்டு தீர்க்க தரிசனங்களின் நிகழ்விடமாக மாறியது என்றால் அதுவே இன்றுவரை எகிப்து இஸ்ரேல் வரலாற்றை ஆராய்வோருக்குப் புரியும்.

இந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக, இஸ்ரேல் நிம்மதியாக இருந்த சரித்திரமே இல்லை.

இந்தியா - பாகிஸ்தான், இந்தியா - சீனா ஆகியவற்றின் போர் இரண்டு மூன்று தடவைகள் வந்ததற்கே நமக்கு போதும் போதுமென்று ஆகிவிட்டது.

ஆனால், சிறிதும் பெரிதுமாக ஏறத்தாழ ஐம்பதுக்கும் மேற்பட்ட போர்களைச் சந்தித்து விட்டது இஸ்ரேல்!

நானும்... நீயும் சண்டை போட்டால் சரி ஒவ்வொருவருடனும் ஒரு தெருவே சேர்ந்தால்..? ஊர்க்கலவரமாக வல்லவா மாறும்..?

அதுபோன்றே, எல்லா சமயங்களிலும், சும்மா இருப்பதாகத் தெரியும் அ ண் ண ா ச் சி க ள ா ன ரஷ்யாவும், அமெரிக்காவும் ஆளுக்கொரு நாடுகளோடு கைகோர்த்துக் கொண்டு மறைமுகமாகவும். சில வேளைகளில் நேரடியாகவும் இவர்களது சண்டைகளில் சேர்ந்து கொள்வதை உலகமே கண்கொண்டு பார்த்திருக்கிறது.

ஆயுதம் முதற்கொண்டு, ஆட்கள், மருந்துகள் போன்றவற்றை இந்த நாடுகள் தாராளமான வழங்கும்போது பயன்படுத்தப்பட்ட போர் ஆயுதங்களின் எண்ணிக்கையையும் போரின் உக்கிரத்தையும் பற்றி சொல்லியா தெரியவேண்டும்...?

**நி**லைமை இவ்வாறிருக்க, தீவிர முஸ்லீமான எகிப்து அதிபர் நாசர், இஸ்ரேலை எதிர்த்து, எதிர்த்து கதிகலங்கிப் போனார்.

அவர் மட்டுமல்ல.... ஈரான், லெபனான் உட்பட பல நாடுகள் பலமுறை இஸ்ரேல் மீது போரிட்டுங்கூட, சவுங்கல் மாடு போன்று, அத்தனை அடியையும் வாங்கிக்கொண்டு, ஒன்றுமே நடைபெறாதது போன்று, அத்துணை எழுச்சியுடன், அன்றிருந்தது போன்று இன்றுவரை நெஞ்சை நிமிர்த்தி நிற்பதற்கு எவ்வாறுதான் முடிகிறது., இந்தச் சுண்டைக்காய் நாட்டால்...? என்று விழி பிதுங்கின இந்த நாடுகள்!!

*இப்படி விழி பிதுங்கியவர்தாம் இந்த எகிப்தின் நாசர்!*

*அப்பொழுதுதான், அவரிடம் 'விஷயம் அப்படி' என்றார்கள் அவரது ஆலோசகர்கள்!*

*அது என்ன? புதிதாக வரவழைக்கப்பட்ட 'தங்கபஸ்பத்தை' சாப்பிட்டு விட்டுத்தான் இந்த வீரியம் என்று சொன்னார்களா என்ன...?*

*அவர்கள் கூட்டிக் காட்டியதெல்லாம், பைபிள்.... பைபிள்.... பைபிள்...!*

*அதில் கூறப்பட்டுள்ள இஸ்ரேல் பற்றிய தீர்க்கதரிசனங்கள்...*

*தேவாதி தேவனாம் இயேசுவின் வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகளென்ன, அத்தனை சீக்கிரம் அழிந்து விடுமா என்ன?*

*வானமும் பூமியும் அழிந்துபோம்... என் வார்த்தைகளோ அழிவுறாது என்றவரல்லவா அவர்...?*

*எருசலேமை ஒருபுறம் இயேசு சபிக்காத குறையாக பலவற்றைக் கூறினாலும். இறைவனே மானிடனாக ஜெனித்த இடம் என்பதாலோ என்னவோ... "ஆனால்.. நீயோ அழிவதில்லை!" என்று சொன்ன ஒரேயொரு... ஒரேயொரு.. வார்த்தையின் மகத்துவம்தான் அது!*

*அப்படிப்போடு!*

*ஆக, முஸ்லிமான நாசரின் இறுதிக்காலம், அதன்பின் பைபிளை ஒருமுறை அல்ல பலமுறை படிப்பதிலேயே செலவானது என்கின்றது சரித்திரம்.*

*இந்த கட்டுரையின் நோக்கமே, உலக முடிவுபற்றி பைபிளின் முன்னறிவிப்புகளுக்கும், மத்திய கிழக்கு நாடுகளில் தற்சமயம் ஏற்பட்டுள்ள கிளர்ச்சிகளுக்குமுள்ள சம்பந்தத்தை எண்பிப்பதே என்பதை நினைவு படுத்திக்கொள்ளுவோம்,*

*ஆக. மத்திய கிழக்கு நாடுகள் ஒவ்வொன்றுமே, ஒன்றுக்கு ஒன்று சளைத்ததல்ல என்பதை சுருக்கமாகப் பார்த்தால்தான். மொத்த விஷயமும் நமக்குப்புரியும்.*

*ஏற்கனவே பார்த்தபடி எகிப்து ஒரு பக்கம் சண்டைகளின் கதாநாயகன் என்றால் மறுபுறம் இஸ்ரேல் கதாநாயகன்.*

*இந்த எகிப்துதான் பழைய ஏற்பாட்டின் நாயகனான ஆபிராமின் வழித்தோன்றலான, யாக்கோபின் 12 பிள்ளைகளின் இளையவனான ஜோசப், தன்னுடைய எளிமையின் மூலம் அதிபதியாக்கப்பட்ட நாடாகும். இதே எகிப்துதான் தாயார் மரியாள், பாரவோன் மன்னனிடமிருந்து தன் குழந்தையாகிய இயேசுவை காப்பாற்றும் பொருட்டு தஞ்சம் புகுந்த நாடாகும்! வெள்ளத்தின் மூலம் உலகை இறைவன் அழிப்பதற்கு முன்னர் நோவா தஞ்சம் புகுந்த நாடும் எகிப்தேயாகும். இஸ்ரேல் மக்களை பாரவோன் அரசன் விடுவிக்க மறுத்து, அவர்களின் பின்னர் தம் படையோடு விரட்டிப்பிடிக்க வந்தபோது, தன் பரிவாரங்களோடு கடலில் மூழ்கி இறந்தானே அதே நாடுதான் இந்த எகிப்து!*

*இந்த எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் காலங் காலமாக நடந்து வந்த சண்டைகளைப் பற்றி ஏற்கனவே பார்த்தோம்.*

**அ***தே நேரத்தில் பாலஸ்தீனியர்களுக்கும் இஸ்ரேலுக்கும் நடந்துவரும் பிரச்சினைகள் தனி* **(பார்க்க: இஸ்சேல் – பாலஸ்தீனியர் – அடிப்படைப் பிரச்சினை – பெட்டிச் செய்தி).**

**இ***ஸ்ரேலுக்கும் ஜோர்டான் நாட்டுக்கும் போர் ஏற்பட்டு அவர்களுக்குள்ளும் விரிசல் ஏற்பட்டது.*


*இஸ்ரேலுக்கு லெபனானுக்கும் வேறு விஷயத்தில் போர் மூளவே, சிரியா, ஈரான் ஆகிய நாடுகளிலும் இதன் தாக்கம் ஏற்பட்டது.*

*ஆக, ஏற்கனவே எல்லா அரபு நாடுகளும் சேர்ந்தோ, தனித் தனியாகவோ அழிக்க நினைப்பது இயேசு பிறந்த இந்த இஸ்ரேலைத்தான் என்பது தெரிகிறது.*

**இ***தற்கிடையில் ஈரான், தாம் அணுகுண்டு தயாரித்தது பற்றி அறிவிக்கவே, அமெரிக்க அதிபர் ஒபாமா, அணுகுண்டு திட்டத்தை ஈரான் கைவிடாவிட்டால் நடப்பதே வேறு என்று மிரட்டினார். இந்த விஷயத்திலும் ஏகக் குழப்பம்தான்.*

*இன்றைய சூழ்நிலையில், மிகவும் நவீனமான அணுகுண்டை தயாரிப்பதில் படுவேகத்தில்*

*முன்னேறிக் கொண்டிருக்கும் போக்கைப் பார்த்தால் 2014ம் வருடத்துக்குள், அந்த முயற்சியின் வெற்றியை அந்த நாடு பகிரங்கமாக அறிவிக்கப்போவதை, இஸ்ரேலுங்கூட ஒருவித கலக்கத்துடன் எதிர்நோக்கியிருக்கிறது.*




**இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனியர்களுக்கும் ஏற்ப்பட்ட ஒப்பந்தப்படியான பாகப்பிரிவினையை காட்டும் வரைபடம்**

# இஸ்ரேல் பாலஸ்தீனியர் அடிப்படை பிரச்சினை

இப்பொழுது பைபிளின் சம்பவங்கள் நடைபெற்றதாகக் கூறப்படும் ஏராளமான மத்திய கிழக்கு நாடுகளுக்கும், இப்பொழுதுள்ள உலக நாடுகளுக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்போருக்கு கீழே காணப்படும் சிறு விளக்கம் தேவையாகிறது.

யூதேயா என்பதுான் இன்றைய இஸ்ரேல்! ஆசிரியா என்றால் இன்றைய ஜெர்மனி - சிரியா அன்றும் இன்றும் ஒன்றுதான்! அம்மான் என்றால் ஜோர்டான்! மனாசே என்றால் அமெரிக்க ஐக்கிய நாடுகள் எபிரேம் என்றால் பிரிட்டன் கூட்டமைப்பு நாடுகள்! ஜேக்கப் என்றால் அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளைக் குறிக்கும்!

ஆக, பைபிள் நிகழ்வுகளின் இடங்கள் மற்றும் பைபிளின் நிகழ்வுகளில் ஏதாவதொரு வகையில் சம்பந்தப்பட்ட நாடுகளாகவே ஏறத்தாழ எல்லா உலக நாடுகளும் இருந்துள்ளன என்பது இதன்மூலம் தெரிய வருகிறதல்லவா?

இதற்கிடையில், இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனியர்களுக்கும் இன்றுவரை அப்படி என்ன சண்டை?

பொதுவாகச் சொன்னால் இன்றைய இஸ்ரேலிலிருக்கும் யூதர்கள் பெரும்பாலும் ஐரோப்பியாவிலிருந்து பிழைப்புக்காக வந்தவர்கள்.

காலம் செல்லச் செல்ல, அவர்கள் சக்தி மிக்கவர்களாக மாற, அங்கிருந்த அரபு பாலஸ்தீனியர்கள் சுற்றியிருந்த பிற அரபு நாடுகளுக்கு அகதிகளாக வரவே, அவர்கள் இவ்வாறு தொடர்ந்து வருவதை அந்த முஸ்லீம் அரபு நாடுகள் விரும்பவில்லை.

ஆக, இங்குமில்லாமல் அங்குமில்லாமல் பரிதவித்த அரபு பாலஸ்தீனியர்களுக்கு இருந்த ஒரே வழி இஸ்ரேலிலேயே அவர்களது உரிமையை நிலை நாட்டுவதுதான் என்றாகிவிட்டது. வேறு வழியில்லாமல் தீவிரவாத குழுக்களாக பாலஸ்தீனியர்கள் மாறவேண்டியதாகிவிட்டது. இந்த பிரச்சனைகளிலும் எகிப்து. பிரிட்டன். ஜோர்டான் போன்றவைகளின் சம்பந்தமுமுள்ளது என்பது தனிக்கதை.

ஆக மொத்தத்தில் காலகாலமாக இடியாப்பச் சிக்கலில் சிக்கித் தவித்தது அரபு நாடுகளும் இஸ்ரேலும். பாலஸ்தீனமும், இவர்களை வைத்து தனது பராக்கிரமத்தை சாதிக்க நினைக்கும் பிற நாடுகளும் என்று ஒரு கூட்டமே கூடி ஒன்றுக்கொன்று அடித்துக் கொண்டன என்றே கூறலாம்.

*இதற்கிடையில் பன்னிரெண்டுக்கு மேற்பட்ட அரபு நாடுகள் தாமும் அணுகுண்டு தயாரிப்பில் ஈடுபட்டிருக்கும் செய்தியை வெளியிட்டுவிட்டன.*

*போகிற போக்கைப் பார்த்தால், அரபு நாடுகள் அணுகுண்டுகளின் போர்க்களமோ என்ற அச்சம் உள்ளது.*

*இந்த இக்கட்டான நிலையில்தான், இன்றைய சூழ்நிலையான உள்நாட்டு கிளர்ச்சிகள் வலுவாக எழுந்து அதிகப்படியான பிரச்சினைகளைக் கொண்டு வந்துள்ளது.*

*எத்தனை இக்கட்டான சூழ்நிலை பார்த்தீர்களா...?*

*இடியாப்பச் சிக்கலின் உச்சகட்டம் தான்.*

*இப்பொழுது பழைய ஏற்பாட்டு நூலான தானியேல் புத்தகத்தில், உலக முடிவுபற்றி கூறியவற்றை இங்கு சொல்லியே ஆகவேண்டும்.*

*தானியேல் கண்ட காட்சியில், "பாபிலோனியப் பேரரசு தொடங்கி, உலக முடிவு வரை வரவிருக்கும் பல்வேறு பேரரசுகளின் எழுச்சியும் வீழ்ச்சியும் பற்றி விரிவாக எடுத்துரைப்பதோடு,*

*"பிறகு வலிமைமிக்க அரசன் ஒருவன் தோன்றி, மிகுதியான ஆற்றலோடு அரசாண்டு, தான் விரும்பியதெல்லாம் செய்வான். அவன் உயர்நிலை அடைந்தபின், அவனது அரசு சிதைக்கப்பெற்று, வானத்தின் நான்கு திசையிலும் பிரிக்கப்படும். ஆயினும், அது அவனுடைய வழிமரபினருக்குத் தரப்படாது."*

*"அவனது ஆட்சிக்காலத்திலிருந்த வலிமையும் அதற்கு இராது. ஏனெனில் அவர்களிடமிருந்து அவனது அரசு*

# உலக முடிவைப்பற்றி தானியேலின் புத்தகம் கூறுவது...!

**பை**பிளில் காணப்படும் இன்னொரு புத்தகம் தானியேல் எழுதிய புத்தகம். இதில் 7 முதல் 12ஆம் அதிகாரம் வரையிலுள்ள சம்பவங்கள் உலக முடிவைப்பற்றி எடுத்துக் கூறுகிறது.

எசக்கியேல் புத்தகமாகட்டும், திருவெளிப்பாடு புத்தகமாகட்டும், இப்போது தானியேல் புத்தகமாகட்டும் இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு இடங்களில் வைத்து, வெவ்வேறு நபர்களால் எழுதப்பட்டாலும், அது சொல்லும் செய்திகள், ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஒரே செய்தியை பல்வேறு கோணங்களில் சொல்லுவதாக அமைந்திருப்பதே ஆச்சரியத்திலும் ஆச்சரியம்!

இப்போது தானியேல் புத்தகத்திலிருந்து சிலவற்றை பார்க்கலாம்!

''இப்பொழுது, நான் உனக்கு உண்மையை வெளிப்படுத்துகிறேன். இதோ! இன்னும் மூன்று மன்னர்கள் பாரசீகத்தில் அரியணை ஏறுவார்கள். நான்காம் அரசன் மற்ற எல்லோரையும் விடப் பெருஞ் செல்வம் படைத்தவனாய் இருப்பான். அவன் தன் செல்வத்தால் வலிமை பெற்றபிறகு, கிரேக்க அரசுக்கு எதிராக, எல்லோரையும் தட்டியெழுப்புவான் (தானி. 12:2-4)

**''அவனுடைய படைவீரர்கள் வந்து, திருக்கோவிலையும், கோட்டையையும் தீட்டுப்படுத்தி, அன்றாடப் பலியை நிறுத்திவிட்டு 'நடக்க வைக்கும் தீட்டை' அங்கே அமைப்பார்கள்.'' (தானி. 11:31)**

**''அரசன் தன் மனம் போன போக்கில் நடந்து கொள்வான், அவன் தன்னையே உயர்த்திக் கொள்வான். எல்லாத் தெய்வத்திற்கும் மேலாக, தன்னையே பெருமைப்படுத்திக்கொண்டு, தெய்வங்களுக்கெல்லாம் இறைவனானவர்க்கே எதிராகப் பழிச்சொற்களைப் பேசுவான். இறைவனின் சினம் நிறைவேறும் நாள் வரை அவன் வாழ்க்கை வளம் பெறும். ஏனெனில் குறிக்கப்பட்டது நடந்தேற வேண்டும்'' (தானி.36)**

- இந்த மேற்கண்ட செய்தி, தானியேல் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கும் பல்வேறு தீர்க்க தரிசனங்களுக்கு ஒரு சாம்பிள்தான்!

பறிக்கப்பட்டு, வேறு சிலருக்குப் பிரித்துக் கொடுக்கப்படும்.”

இவ்வாறு ஆரம்பிக்கும் தீர்க்கதரிசனம் இதுபோன்றே, இன்னும் நான்கு பக்கம் எழுதுமளவுக்கு நீண்டு கொண்டே போகிறது.

**இ**றுதியாக -

**“கடைசியாக வருபவன், தன் மனம் போன போக்கில் நடந்து கொள்வான். அவன் தன்னையே உயர்த்திக் கொள்வான். எல்லாத் தெய்வத்திற்கும் மேலாக தன்னையே பெருமை படுத்திக் கொள்ளுவான். அன்றாட பலிகள் நிறுத்தப்பட்டு நடுங்கவைக்கும் தீட்டு தெய்வமாக நிறுத்தப்படும்.”**

என்று அந்த பயங்கரமான நிகழ்வுகளை தானியேல் 11 மற்றும் 12 ஆம் அதிகாரத்தில் தானியேல் தீர்க்கதரிசனமாகத் தெரிவிக்கிறார். **(பார்க்க: உலக முடிவு பற்றி தானியேலின் புத்தகம் கூறுவது – பெட்டிச் செய்தி)**

**இ**றுதியாக, இப்பொழுது இறுதிநிலவரம் தான் என்ன என்று பார்க்கலாம்!



**ஒபாமாவும், ஒரு ‘நாட்டாமையா’..?**

அரபு நாடுகள் ஒன்றுக் கொன்று சளைத்தவர்கள் அல்ல என்கின்ற போக்கில், சண்டையிட்டுக் கொள்வதைப் பார்த்தால், மூன்றாம் நபரின் தலையீட்டின் மூலம்தான் சமாதானம் பிறக்குமோ என்ற எண்ணம் உலக நாடுகளின் மத்தியில் உள்ளது!

இங்குதான் விவகாரமே உள்ளது! சும்மா கிடக்கும் இந்த ‘நாட்டாமை’ நாடுகள் தங்களது சத்தியையும், பராக்கிரமத்தையும் எப்படி, எங்கு போய் காட்டுவார்கள்! கலங்கிய குட்டையில் மீன் பிடித்தால்தானே இவர்களுக்கு லாபம்? ஆக, தடி எடுத்தவனெல்லாம் தண்டல்காரன் என்பது போல இவர்கள் அங்கு சென்று ‘நாட்டாமை’ செய்து, அதுவே ஒரு மாபெரும் சிக்கலுக்கு வழி வகுக்காது என்பதில் என்ன நிச்சயம்?

இஸ்ரேலிலுள்ள ஜெருசலம் நகரை இரண்டாகப் பிரித்து, இஸ்ரேலிலுள்ள, பாலஸ்தீனியரும் இவற்றை தத்தமது தலைநகராகக் கொள்ளலாம் என்பது ஒரு தரப்பாரின் வாதம்.!

சமீபத்தில், அதாவது 2010–ல் அமெரிக்க ‘நாட்டாமை’ ஒபாமா, தனது உள்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் சகிதம் சென்று பலவற்றைக் குறித்து பேசியிருக்கிறார்கள் வழக்கம் போல!!




**புட்டினும், ஒரு ‘நாட்டாமையா’..?**

ஆக, எப்போதும் போல் கூடுவார்கள், பேசுவார்கள், மீண்டும் பேசுவார்கள் ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்ளுவார்கள்.....இதற்கு என்னதான் முடிவு?

ஆ தி கா ல த் தி ல் சண்டை போட்டவன் கல்லாலும், இரும்பினாலும் செய்த ஆயுதங்கள் வைத்திருந்தான். இப்போது

# மத்திய கிழக்கு நாடுகளுக்கு... நெருங்குகிறது முடிவு..??

**எ**ன்னதான் முடிவு, மத்திய கிழக்கு நாடுகளின் பிரச்சினைக்கு என்று உலக அரசியல் வல்லுனர்கள், சிண்டைப் பிடித்துக் கொண்டிருந்த வேளையில்தான் இந்த சந்திப்பு ஏற்பட்டது!

2011 ஜனவரியில் ரஷ்ய ஜனாதிபதி மெத்ததேவ் மத்திய கிழக்கு நாடுகளில் பெரும்பாலானவற்றிக்கு சென்ற பயணம்தான் அது!

பாலஸ்தீனத்தின் தலைவர் அப்பாஸ் உட்பட பலரை சந்தித்த அவர், ஜோர்தானிய மன்னர் அப்துல்லாவையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

பாலஸ்தீனத்தின் எதிரியான இஸ்ரேல் நாட்டுக்கும் செல்வதாக இருந்த இவரது பயணம் ஏன் திடீரென்று கேன்சல் செய்யப்பட்டது என்பதில் தான் மர்மமே!

மட்டுமல்ல, ஈரான் நாட்டு அதிபரிடமும் அங்கிருந்தே தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அவர்களுடன் மிகவும் ஆழ்ந்த உறவை ஏற்படுத்த விரும்புவதாகக் கூறினார். யாருமே செய்யாத அளவுக்கு மிகுந்த நவின தொழில் நுட்ப அடிப்படையில், அணுகுண்டு ஒன்றை இரண்டாண்டுகளில் தயாரிக்க திட்டமிட்டிருக்கும் ஈரானுடன் அப்படி என்ன உறவு வேண்டிக்கிடக்கிறது? யோசிக்க வேண்டிய விஷயம்தான்!!

இதற்கிடையில் பாலஸ்தீனியர்களின் தனிநாடு கோரிக்கைக்கு, ரஷ்யா பகிரங்க ஆதரவு தெரிவித்ததைத் தொடர்ந்து, ஐக்கிய நாடுகளின் சபையிலும் இதுபற்றிய பலத்த விவாதமும் அங்கீகாரத்துக்கான முயற்சியும் நடந்திருக்கிறது.

**இதுபோன்று, ஏராளமான நாடுகளின் கூட்டு முயற்சி மூலம், தாம் மட்டும் தனிமைப்படுத்தப் படுவதாக எண்ணுகிறது இஸ்ரேல் என்பதுதான் இப்போதுள்ள நிலைமை!**

*இப்போது...*

*பைபிளில் கூறிப்பட்டவைகளை ஒப்பிட்டுப் பாருங்கள்!*

*பைபிளில், தானியேல் தீர்க்கதரிசி, தானியேல் புத்தகம் 10, 11 ஆகிய அதிகாரத்தில் விவரித்துள்ள படி உபத்திரவத்தின் காலத்தில் ஒருவன் எழும்பி அகில உலகையும் தன் கைவசப்படுத்தி தெய்வமாக உயர்த்துவானா?*

**அ***தே பைபிளில், வெளிப்படுத்துதல்* (Revelation) *ஆகமத்தில் குறிப்பிட்டுள்ளது. மிகவும், பயங்கரமாக, அச்சுறுத்தும் வகையில் உள்ளது.*

**(பார்க்க: உலக முடிவு பற்றி திடுக்கிடும் தீர்க்க தரிசனங்கள் – பெட்டிச் செய்தி)**

*அதே பைபிளில் மத்தேயு சுவிசேஷம் 24ம் அதிகாரத்திலல் இயேசு கூறுவதைப் பார்க்கலாம். "பெரும் வேதனை உண்டாகும். ஏனெனில் உலகத் தோற்ற முதல் இந்நாள் வரை இத்தகைய துன்பம் உண்டானதில்லை. அந்நாட்கள் குறைக்கப்பட்டாவிட்டால், எவரும் தப்பிப்பிழைக்க முடியாது..."*

**(பார்க்க பக்கம் 40: வரப்போகும் துன்பம்)**

**அ***தே பைபிளில் எசக்கியேல் புத்தகம் 36 முதல் 39 அதிகாரங்களில் குறிப்பிட்டபடி 'கடைசி காலத்தில் இஸ்ரேல் பலம் பெறும்! ஆனால், உலக நாடுகளனைத்தும் ஒன்று சேர்ந்து இஸ்ரேலைத் தாக்கும்' என்று கூறியவர், 'அப்போது எல்லாம் வல்ல இறைவன் தலையிட்டு இஸ்ரேலைக் காப்பார்'*

*போர் தளவாடங்கள் பீரங்கிகள், விமானங்கள் என்று வந்துவிட்டன. ஆனால், அறிவியல் கண்டுபிடிப்புகளின் உச்சத்திலிருக்கும் வருங்காலத்தில், இந்த உச்சகட்ட சண்டை, அணு ஆயுதம் போன்றவைகளை ஈடுபடுத்தி ஏன் போர் செய்ய மாட்டார்கள்?*

**(பார்க்க: மத்திய கிழக்கு நாடுகளுக்கு நெருங்குகிறது முடிவு? – பெட்டிச் செய்தி)**

**ஆ***க வரப்போகும் நிலைமை என்னவோ, பயங்கரமாகத் தானிருக்கும்?*

# உலக முடிவு பற்றிய திடுக்கிடும் தீர்க்க தரிசனங்கள்!

**- வெளிப்படுத்தல் ஆகமம் கூறுவது என்ன?**

**பை**பிளில் காணப்படும் கடைசி புத்தகம் தான் திருவெளிப்பாடு என்ற புத்தகம். இருபது அத்தியாயங்கள் கொண்ட இந்த புத்தகம் முழுக்க, முழுக்க நாவலைப் படிப்பதைவிட நூறு மடங்கு திகிலுடன் கூடிய சம்பவங்களின் தொகுப்பு ஆகும்.

உலக முடிவுக்கு முன்புள்ள மகா உபத்திரவ காலத்தில் உலகில் என்ன நடக்கும் என்பது தொடங்கி அந்திக் கிறிஸ்துவாகிய மிருகத்தின் செயல்பாடுகள், மற்றும் அது பிடிபடுதல், இறைவனின் அரசாட்சி என்பது போன்ற பிரமிக்கத்தக்க செய்திகளால் நிரம்பியதுதாம் இந்தப் புத்தகம்.

உதாரணத்திற்கு, சில வசனங்களை மட்டும் தருகிறோம்.

''அவ்விலங்கு பிடிப்பட்டது. அதன் முன்னிலையில் அரும் அடையாளங்கள் செய்திருந்த போலி இறைவாக்கினரும் அதனோடு சேர்ந்து பிடிபட்டான். தான் செய்த அரும் அடையாளங்களாய், அந்த விலங்குக்குரிய குறி இட்டுக் கொண்டவர்களையும், அதன் சிலையை வணங்கி வந்தவர்களையும் ஏமாற்றியவன் அவனே! அந்தப் போலி இறைவாக்கினரும் விலங்கும், கந்தகம் எரிந்து கொண்டிருந்த நெருப்பு ஏரியில் உயிரோடு எரிக்கப்பட்டார்கள்'' (வெளி-19:20)

''பின்னர் வானதூதர் ஒருவர், விண்ணகத்திலிருந்து இறங்கி வரக்கண்டேன். படுகுழியின் திறவுகோலும், முரட்டுச் சங்கிலியும் அவர் கையில் இருந்தன. அலகை என்றும் சாத்தான் என்றும் அழைக்கப்பட்ட அரக்கப் பாம்பை அவர் பிடித்தார். அதுவே தொடக்கத்திலிருந்த பாம்பு. வானதூதர் ஆயிரம் ஆண்டுகளுக்கு, அதைக் கட்டி வைத்தார். பின்னர் அதைப் படுகுழியில் தள்ளி, குழியை அடைந்து முத்திரையிட்டார். இவ்வாறு அந்த ஆயிரம் ஆண்டுகள் முடியும் வரை, நாடுகளை அது கட்டவிழ்த்து விடப்பட வேண்டும்'' (வெளி-20:1-3)

''பின்பு, பெரிய வெண்மையான ஒரு அரியணையைக் கண்டேன். அதில் ஒருவர் வீற்றிருந்தார். அவர் முன்னிலையில், மண்ணகமும், விண்ணகமும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டன. இறந்தோரும், சிறியோர், பெரியோர் ஆகிய அனைவரும் அந்த அரியணையின் முன் நிற்கக் கண்டேன். அப்போது நூல்கள் திறந்து வைக்கப்பட்டன. வேறொரு நூலும் திறந்து வைக்கப்பட்டது. அது வாழ்வின் நூல், இறந்தோரின் செயல்கள் அந்நூல்களில் எழுதப்பட்டிருந்தன. அவற்றுக்கு ஏற்ப, அவர்களுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டது'' (வெளி. 20:11-13)

வெளிப்படுத்துதல் ஆகமத்தில், கூறப்பட்ட பலவற்றுள் இது ஒரு சாம்பிள்தான்...!

*என்று கூறப்பட்டுள்ளது.* **(பார்க்க: உலக முடிவில் இஸ்ரேலுக்கு நடப்பவை. எசக்கியேல் தீர்க்கதரிசி சொன்னது நடந்ததா? நடக்குமா? பெட்டி செய்தி)**

**மா***தா ப்ரான்ஸ் நாட்டில் சலேத் என்ற இடத்தில் சுமார் 150 ஆண்டுகளுக்கு முன் மேக்சிமின், மெலானி என்ற இரண்டு குழந்தைகட்கு தோன்றி உலக முடிவைக் குறித்து இவ்வாறாக முன்னறிவித்தாள் :- “அந்த கெட்ட மனிதன் 19-ம் நூற்றாண்டின் முடிவிலேயோ அல்லது 20-ம் நூற்றாண்டின் துவக்கத்திலேயோ வரலாம். ‘போலி கன்னிகையின் வழியாக, அந்தி கிறிஸ்து ஒருவன் பிறப்பான். அவன் போலி அதிசயங்களைச் செய்வான். நரகத்தின் படைகளின் ஆதரவு அவனுக்கு இருக்கும். ஒளியின் மக்கள் தீமையின் கைகளில் சிக்குவர்...”*

**(பார்க்க: உலக முடிவுபற்றி, பிரான்சு நாட்டில் சலேத் மாதா கூறியது என்ன? – பெட்டி செய்தி)**

**சு***மார் 800 வருடங்கட்கு முன்பு போப்பாண்டவரைக் காணச் சென்ற செயின்ட் மலாக்கியா எழுதி*

# உலக முடிவு பற்றி பிரான்ஸ் நாட்டில் சலேத் மாதா கூறியது என்ன..?

**பி**ரான்ஸ் நாட்டிலுள்ள சலேத் என்னும் ஊரில் புனித கன்னிமரியாள், முகமுகமாய் காட்சி கொடுத்தாள். சிறுமிளான மேக்சிமின், மெலானி ஆகியோருக்கு தோன்றி பல விஷயங்களை பேசினாள். அவற்றில் கீழே காண்பவை உலகம் முடிவுறும் தறுவாயில் நடக்கப்போவது:-

பிரான்சில் நான்கில் முன்று பங்கு மக்கள் தங்களுடைய கிறிஸ்தவ நம்பிக்கையை இழந்து போய் விடுவார்கள். மீதமான ஒரு பங்கு மக்கள் கிறிஸ்தவ நம்பிக்கையை பாதுகாப்பார்கள். ஆனால் அதிக ஆர்வமில்லாமல் கிறிஸ்தவ நம்பிக்கையில் வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

மனிதர்கள் மனம் மாறாத வரையில் உலகில் அமைதி இருக்காது.

வடக்கில் உள்ள பிரிந்த சபையினரை உடைய ஒரு நாடு கத்தோலிக்க நம்பிக்கைக்குத் திரும்பி வரும்.

மனிதர்கள் மனம் மாறுகின்ற பொழுது, கடவுள் உலகிற்கு அமைதியை அருள்வார்.

அதன் பிறகு கெட்ட மனிதன் ஒருவனால் இந்த உலகத்தின் அமைதி கெட்டுப் போகும்.

அந்த கெட்ட மனிதன் 19-ம் நுற்றாண்டின் முடிவிலேயோ அல்லது 20-ம் நுற்றாண்டின் தொடக்கத்திலேயோ வரலாம்.



**போலி கன்னியின் வழியாக எதிர்கிறிஸ்து ஒருவன் பிறப்பான். அவன் போலி அதிசயங்களைச் செய்வான். நரகத்தின் படைகளின் ஆதரவு அவனுக்கு இருக்கும்.**

ஒளியின் மக்கள் தீமையின் கைகளில் சிக்குவர். திருச்சபை இருளில் மூழ்கிப் போகும். உலகம் குழப்பத்திலும், சண்டையிலும், கவலையிலும் சீர்குலைந்துப் போகும்.

திருச்சபை இருளிலும், உலகம், கொடும் வேதனையிலும் இருக்கையில், ஏனோக்கும் எலியாவும் கடவுளின் துணையோடு திடீரென பூமிக்கு வருவார்கள். அவர்கள் நல் எண்ணம் கொண்டவர்களை மனம் மாற்றுவார்கள். ஒடுக்கப்பட்ட கிறிஸ்தவர்களைத் தேற்றுவார்கள். படைகளின் ஆண்டவரின் துணையோடு எதிர்கிறிஸ்துவின் தப்பறைகளுக்கு எதிராகப் போரிட்டு வெற்றி கொள்வார்கள். ●

*வைத்ததைப் பாருங்கள் - "111 ஆவது போப் பாண்டவரான 16-ம் பெனடிக்டுக்குப் பின்னர் வரப்போகும் ஒரு போப்பாண்டவர் காலத்தோடு போப்பாண்டவர் சாம்ராஜ்யம் முடிவுக்கு வரும். அப்போது மகா கலவரமும், இருளும் உலகமெங்கும் ஏற்படும்... அப்போது, மகா பராக்கிரமமான நீதிபதி உலகத்தை நடுத்தீர்ப்பார் அதுவே முடிவு"* (பார்க்க பக்கம் 38: இப்போதுள்ள போப்பாண்டவர் உலகின் கடைசி போப்பாண்டவரா கட்டுரை)

*ஆக, மேற்குறிப்பிட்ட அத்தனை தீர்க்க தரிசனங்களுக்கும், மத்திய கிழக்கு நாடுகளின் வரலாற்றுக்கும், பெரிய சம்பந்தம் இருப்பதை உணர முடிகிறதுல்லவா?* ■

# நல்லதும், கெட்டதும் தேர்ந்தெடுக்க வேண்டாமா?

ஆம், இல்லை, நல்லது, கெட்டது, இவை உலகிற்கு தேவையா?

தேவையோ தேவையில்லையோ இவை இரண்டும் ஒட்டிப்பிறந்த இரட்டைப்பிள்ளைகள் மாதிரி!

இவற்றை தனியாகப் பிரிக்க முடியாது!

நாற்காலி செய்ய காட்டுமரமல்ல, நல்லமரம் தேவைப்படுகிறது,

லட்சம் லட்சமாக செலவு செய்து, உறுதியாக வீடு கட்டுகிறவன் கூட, மண்ணின் தன்மையை அறியாமல் அஸ்திவாரம் போட்டால், சீக்கிரத்தில் ஒரு நாள் கட்டடத்தில் விரிசல் ஏற்படுகிறது.

நல்ல மிளகில் கூட பப்பாளி விதையை கலக்கிறார்கள்.

ரேஷன் அரிசியைத்தீட்டி, நல்ல அரிசியோடு கலந்தால், தெரியாது!

சிரித்துப் பேசுபவன் நல்லவன், சிறிப்பாய்பவன் கெட்டவனா? காலம்தான் பதில் சொல்கிறது.

ஆக, இதிலும் நல்லவன், கெட்டவன்... எதில் இல்லை நல்லது கெட்டது? சொல்லுங்களேன்.....!

நிலைமை இவ்வாறிருக்க, நாம் வணங்கும் தெய்வத்திலும், நல்லது கெட்டது இருப்பது இயல்புதானே!

நாம் உண்ணும் உணவிலிருந்து நாம் பழகும் மனிதர்கள் வரை நல்லவையாக இருக்க வேண்டுமே என்ற ஆதங்கமில்லாதவரா நீங்கள்?

"ஏன் டி உனக்கு சமாச்சாரம் தெரியுமா? நம்ம ஃப்ளாட்ல குடியிருக்காளே மரகதம், அவளத்தேடி யார் யாரெல்லாம் வர்ராங்கடி.... கலிகாலம்.... கலிகாலம்... நான் வீட்டை வித்துட்டே போகலாம்னு தீர்மானமே பண்ணிட்டேன் டி"

"யாரும் அங்கே போகாதீங்க... குடிகாரன்"

"எனது மகளுக்கு வரன் பார்க்க, இதுவரை 50 பேரை பாத்தாச்சு.... ஒண்ணும் சரியில்ல...."

இவையெல்லாம் அன்றாடம், சராசரி மனிதர்கள் புலம்பும் புலம்பல்தான்!

ஆக, நல்லதைத் தேர்ந்தெடுக்க, எந்த அளவுக்கு மெனக்கெடுகிறோம்.? அதே அளவு அக்கறை, நம்மைப் படைத்தவரை தேர்ந்தெடுப்பதில் ஏன் நம்மிடம் இல்லை?

சாத்தானுக்குக் கூட கேரளாவில் கோவில் கட்டி வணங்குகிறார்கள். புத்திரபாக்கியம் கிடைக்கிறதாம்... தடங்கல்கள் நீங்குகிறதாம்...! அதற்காக, சாத்தான் என்று தெரிந்தே வணங்குகிறோம்.

"ஹி... ஹி... நல்லது நடக்கிறது... அதனால்தான்"

"சர்க்கரையைச் சாப்பிட்டால் கூட நன்றாகத்தான் இருக்கிறது, இறுதியில் சர்க்கரை வியாதி வரும் போது என்ன செய்கிறீர்கள்....!

"அதிக வட்டி தருவதாக, ஆசை காட்டி, எத்தனை பேர் காலங்காலமாக பணம் வசூலித்து, ஒரு சம்பவமாவது, இறுதிவரை ஒழுங்காக நடத்திருக்கிறதா,,?"

ஆம்...! இறைவன் இயேசு அதனால்தான் உலகத்தை முன் கூட்டியே எச்சரிக்கிறார்,

துர் ஆவிகள், மந்திரவாதிகள், கள்ளத்தீர்க்கதரிசிகள் இவர்களின் அற்புத அடையாளங்கள் அப்போதிலிருந்தே இன்றுவரை இருந்து கொண்டுதான் வந்து கொண்டிருக்கிறது..."

அதனால்தான் "கேட்கச் செவியுள்ளவன் கேட்கக்கடவன்..." என்கின்றார் இயேசு

"சத்தியத்தை அறிவீர்கள்... சத்தியம் உங்களை விடுவிப்பதாக..."

வேதாகமத்தில், ஒளியின் வேடமிட்டு சாத்தான் சுற்றித்திரிவதாக இயேசு பல நேரங்களில் மக்களை எச்சரிக்கிறார்!

ஆக, இவ்வுலகத்தின் அதிபதி யார்? இயேசுவா...?

இல்லை! சாத்தான்!

அப்படித்தான் வேதாகமம் கூறுகிறது!

தெய்வங்களாக வெளிவேடம் போடும் அவைதாம் தீய ஆவிகள் என்று இனங்கண்டு கொண்டு வெளியேறி, தூயவரை கையகப்படுத்துவது எவ்வளவு அவசியம் பார்த்தீர்களா?

செய்வீர்களா....?

ஒரு பக்க கட்டுரை

# சாத்தானின் தயவு தேவை..?

ஃபஸி கோயிங்... என்பது என்ன?

வாழ்க்கையில் எல்லாம் சுமுகமாகவே போகிறது என்று சொல்லும் பலரைப்பார்த்தால், நமக்கே பொறாமை ஏற்படுவதில்லையா?

மாடமாளிகை... கார்... தோட்டம்... துறவு... விதவிதமான சாப்பாடு (ஆனால் யாராவது ஒருவரால் கஞ்சிதான் குடிக்க முடியும் - சர்க்கரை வியாதி)

வியாதியைக் கேலி செய்யவில்லை... அது எல்லோருக்கும் வருவதுதான்.

நாம் கூறுவதெல்லாம், உலகத்தை அனுபவிக்கப் பிறந்த இந்த கூட்டம் கடைசி வரை, அதிக நாட்கள் கூட உலகில் இருந்து, பேர் சொல்லும்படி வாழ்ந்து காட்டுறது..

ஆனால் -

நல்லதைப் பேசிப்பாருங்கள்! வாய்ப்பூட்டு போடாத குறையாக எத்தனை எதிர்ப்புகள்!

சிறந்தவை இதுதான்... என்று எழுதிப் பாருங்கள்... எத்தனை விமர்சனங்கள்!

புதிதாக வீடு கட்டிப்பாருங்கள்... எத்தனைபேர் முகத்தைத் திருப்பிக் கொள்ளுகிறார்கள்?

'பக்கத்திலிருக்கும் சந்து உங்களுடையதுதான் தற்சமயம் எனது சுவரோடு சேர்ந்து வேலியடைத்து விடுகிறேன் ஆடு மாடுகள் வராமல் தடுக்க.' என்கின்றான் பக்கத்து வீட்டுக்காரன்.

சரி... கொஞ்ச காலந்தானே என்று இடம் கொடுத்து விட்டு, நமக்கு நேரம் வரும்பொழுது அந்த இடத்தைக் கேட்டால், கடைசியில் போலீஸ், கோர்ட் என்று அலைவதுதான் மிச்சம்!

நாம் ஆரம்பத்தில் அவரை நம்பி கெட்டதை இந்த உலகம் பேசவே பேசாது!

நமது உரிமையைக் கேட்டால் சண்டைக்காரன் அல்லது மோசடிக்காரன்! (கேட்காவிட்டால் ஏமாளி)

சுவிசேஷத்தைப் பிரசங்கித்தால் பொய் வழக்கில் கைது..!

மனநல மருத்துவர் வீட்டில்தான், அவரது குழந்தையே மனநலமில்லாமிலிருக்கும்!

குடும்பங்களின் பிரச்சினைக்காக, ஜெபம் செய்யும் பிரசங்கியாரின் வீட்டில், மனைவி எப்போதோ ஓடிவிட்டிருப்பாள்.

இவ்வாறு நல்லது எதையுமே செய்யவிடாமல் தடுக்கும் சக்திதான் என்ன?

'சாத்தான்' என்று சொன்னால் கண்டிப்பாக விஞ்ஞானம் சிரிக்கும்!

மூடப்பழக்கத்தை அழித்தொழிப்பதில் விஞ்ஞானத்தின் பங்கு நிச்சயம் பிரமிக்கத்தக்கதுதான்!

அதுவும் மீடியாக்களில் நீயா... நானா என்று அலசுவதானால், நம்மவர்கள் போட்டிப் போட்டுக் கொண்டு பார்ப்பார்கள்.

இவன்தான் புத்திசாலி... மற்றவர்களெல்லாம் மடையர்கள்.. என்ற நோக்கில் வாய்த்துடுக்குள்ளவர்களை மட்டும் தேர்ந்தெடுத்து தொலைக்காட்சிகளில் அலசுகிறார்கள். இவர்களை மட்டுமே நம்புவார்கள், ஞாயமான ஆன்மிகவாதிகள் சொல்லுவதை நம்பக்கூடாது என்பார்கள்!

நிலைமையைப் பார்த்தால்.

சாத்தானின் தயவு தேவை! அப்படித்தானே?

'நான் சாத்தானை வென்றேன்'

- இது யாரடா?

பார்த்தால் சாட்சாத் .. இயேசுதான்...!

இயேசுவே சொல்லும்போது, சாத்தானின் தயவு தேவையேயில்லையே...!

வரும் சங்கடங்களை துணிந்து எதிர்கொண்டால், இறுதி வெற்றி நிச்சயம்!

''நீதி ஒருபோதும் அழியாது'' என்பது முதுமொழி

நீதிமான்களின் கொம்புகளோ... உயர்த்தப்படும் *(சங் 75:10)*

"பொல்லாப்பு உனக்கு நேரிடாது. வாதை உன் கூடாரத்தை அணுகாது." *(சங் 91:10)*

ஒரேயொரு கடைசி ஆலோசனை!

வேதாகம வசனங்களைப் பிடித்துக்கொள்ளுங்கள்... விடுதலை நிச்சயம்... இறைவனிடம் நெருங்க நெருங்க. இனந்தெரியாத சந்தோசம் உள்ளத்தில் பொங்கும்! சாத்தானிடம் இருந்தபோது அனுபவித்த நமது மனநிலைக்கும், இறைவனிடம் திரும்பியபோது நமக்கு கிடைக்கும் மனநிலைக்குமுள்ள வித்தியாசம் நன்றாகவே புரியும்.

இருள் என்ற ஒன்று இருந்தால் தானே பகலின் அருமை தெரியும்? ஆகவே -

அந்தவகையில், சாத்தானின் தயவு தேவைதான்...?



நாம் இங்கு அலசப் போகும் ஒரு மாமனிதர் எப்படிப்பட்டவர் என்று அலசுவதற்கு முன்பு கீழேகுறிக்கப்பட்டுள்ள குண நலன்களை சிறிது வாசியுங்களேன்!.

"எதிர்க்கட்சியினரின் கருத்துக்களை காது கொடுத்து கேட்கவே மாட்டார்"

"எதிர்க்கட்சியினருக்கு பேசுவதற்கு சந்தர்ப்பமே கொடுக்காமல் தான்மட்டும் பேசிக்கொண்டேயிருப்பார்"

# பிடிக்காதவர்களை பழிதீர்ப்பவரா காமராஜர்



"பத்திரிகைக்காரர்களை மதிக்க மாட்டார் கோபித்துக் கொள்ளுவார்"

"தன்னைப்பற்றி புகழவும், பக்கம் பக்கமாக பத்திரிக்கைகளில் விளம்பரம் வரவும் விரும்புவார்"

"பிடிக்காதவை நடந்தால் வாயிலிருந்து வரும் வார்த்தைகள் கொடூரமாயிருக்கும்"

"திட்டங்களை எடுத்துச் செய்வதில் வீண் காலதாமதம் ஏற்படும் வகையிலும், பிரச்சினைகளை சீக்கிரம் முடிவுக்கு கொண்டு

# சாமி... மதம்... பற்றிய காமராஜரின் அக்கினி அர்ச்சனை - சிறு தொகுப்பு

காமராஜரைப் பற்றி ஏராளமான புத்தகங்கள் திரைப்படங்கள் வெளிவந்துள்ளன ஆனாலும், எங்குமே காணப்படாத, கேள்விப்படாத கருத்துக்கள் இதோ.... (ஆசிரியர்)

சாமி.. மதம் பற்றிய காமராஜரின் கருத்துக்கள் இதோ...

"இறைவன் இருக்கின்றானா இல்லையா என்பதைப் பற்றி எனக்கு எந்தக் கவலையும் கிடையாதுன்னேன். நாம செய்றது நல்ல காரியமா இருந்தா போதும் பக்தனா இருக்கறதை விட யோக்யனா இருக்கனும். அயோக்கியத்தனம் ஆயிரம் பண்ணிகிட்டு கோயிலுக்குக் கும்பாபி ஷேகம் பண்ணிட்டா சரியாப் போச்சா?"

"மேல் ஜாதி, கீழ் ஜாதியெல்லாம் இடையிலே வந்த திருட்டுப் பயலுக பண்ணினதுன்னேன். சுரண்டித் திங்கிறதுக்காகச் சோம்பேறிப் பசங்க பண்ணின ஏற்பாடுன்னேன் எல்லாரும் ஆயா வவுத்துல பத்து மாசம் இருந்து தானே பொறக்கிறான். அதுல என்ன பிராமணன், சூத்திரன்? ரொம்ப அயோக்கியத்தனம்"

"அடுத்தவேளை சோத்துக்கில்லாதவன், கடன் வாங்கி ஊர், ஊரா ஷேத்ராடனம் போறான்.... எந்தக் கடவுள் வந்து 'நீ ஏண்டா என்னப் பாக்க வரலை'ன்னு இவன்கிட்டே கோவிச்சுகிட்டான்? அபிஷேகம் பண்றதுக்காக கொடம், கொடமாப் பாலை வாங்கி வீணாக்குறானேமடையன், அந்தப் பாலை நாலு பிள்ளைங்க கிட்டே கொடுத்தா, அதுங்க புஷ்டியாவாவது வளருமால்லியா?

"பதினெட்டு வருஷமா மலைக்குப் போறேன்னு பெருமையா சொல்றான். அதுக்காக அவனுக்குப் பி, ஹெச்டியா கொடுக்கிறாங்க? 18 வருஷமா கடன்காரனா இருக்கான்னு அர்த்தம்"

"பணம் படைச்சவன் போடுற பக்திவேஷம், சோஷியல் ஸ்டேடஸ்க்காக! நாலு பேர் தன்னைப் பக்திமான், பெரிய மனுஷன்னு பாராட்டனும்ங்கிறதுக்காக ஒரு அனாதை இல்லத்துக்கோ, முதியோர் இல்லத்துக்கோ கொடுக்கலாமில்லியா?

நாட்டுல வேலையில்லாத் திண்டாட்டம்-வறுமை-சுகாதாரக் கேடு-ஏற்றத் தாழ்வு இத்தனையையும் வச்சிகிட்டு பூஜை என்ன வேண்டிக்கிடக்கு பூஜைன்னேன்? ஆயிரக்கணக்கான இந்த சாமிகள் இதப்பாத்து கிட்டு ஏன் பேசாம இருக்குன்னேன்?"

"லட்சுமி, ..........ங்கிறதெல்லாம் யாரோ ஓவியர்கள் வரைஞ்சி வச்ச சித்திரங்கள் அதையெல்லாம் ஆண்டவன்னு நம்மாளு

வராமலிருப்பதுவும் இவரது "தனித்தன்மை"

"அவரைப்பார்க்க வருபவர்களின் தன்மையை மின்னல் வேகத்தில் கணிக்கும் திறமை இவருக்கு கிடையாது....."

"பெரிய பிரச்சனையையும் சில விடிநாடிகளில் தீர்க்கும் மதிநுட்பம் இவருக்கு அறவே கிடையாது.."

"பெரும்பாலும் அவரது சொல்லும் செயலும், அடுத்தவர்களது மனதை புண்படுத்தும் விதமாகவே அமையும்"

"அடுத்தவர்களை அரசியல் எதிரியாகவே

**வாசகர் கவனிக்க: இக்கட்டுரையில் காணப்படும் அனைத்து விஷயங்களையும் எதிர்மறைகயாக வாசித்துப் பாருங்கள்!**

எப்போழுதும் பார்க்கும் குணம் இவருடையது!"

"இவர் எடுக்கும் முடிவுகள் இவருக்குப் பிடிக்காதவர்களை வதைக்கிறதாகவே இருக்கும்...."

"இவரது முடிவுக்காக வைக்கப்பட்டிருக்கும்

கும்பிட ஆரம்பிச்சிட்டான்.

சுடலைமாடன், காத்தவராயன்ங்கிற பேர்ல, அந்த வட்டாரத்துல யாராவது பிரபலமான ஆசாமி இருந்திருப்பான், அவன் செத்ததும் கடவுளாக்கிட்டான் நம்மாளு! கடவுள்ங்கிறவரு கண்ண உருட்டிகிட்டு, நாக்கை நீட்டிகிட்டுதான் இருப்பாரா?


"மத்திய ஆசியாவிலிருந்து வந்தவன் அக்கினி பகவான், ருத்ரன், வாயு பகவான்னு நூறு சாமியச் சொன்னான், நம்மநாட்டு பூர்வீகக் குடி மக்களான திராவிடர்கள், காத்தவராயன், கழுவடையான், முனியன், வீரன்னு கும்பிட்டான். எந்தக் கடவுள் வந்து இவன்கிட்டே 'என் பேரு இதுதான்'னு சொன்னது? அவனவனும் அவனவன் இஷ்டத்துக்கு ஒரு சாமிய உருவாக்கினான். ஒவ்வொரு வட்டாரத்துல உருவான ஒவ்வொரு மகானும் ஒரு கடவுள உண்டாக்கி, எல்லாரும் தன் கட்சியில (மதத்தில்) சேரும்படியா செஞ்சான் காங்கிரஸ் - கம்யூனிஸ்ட் - திமுக மாதிரி, ஒவ்வொரு மதமும் ஒரு கட்சி; யார் யாருக்கு எதிலே லாபமிருக்கோ அதுல சேந்துக்குறான். உலகத்துல இருக்கிற ஒவ்வொரு மதமும், நீ பெரிசா, நான் பெரிசான்னு மோதிகிட்டு ரத்தம் சிந்துதே? நாட்டுக்கு நாடு யுத்தமே வருதே? - இப்படியெல்லாம் அடிச்சிகிட்டு சாகச் சொல்லி எந்த ஆண்டவன் சொன்னான்?"

"ராமன், கிருஷ்ணன்கிறது கற்பனைக் கதாப்பாத்திரம்னேன். அதையெல்லாம் நம்மாளு கடவுளாக் கிட்டான்னேன்! இன்னிக்கு நம்ம சினிமாவுல வர்ற கதாநாயகனுக்குக் கட்-அவுட் வைக்கிற மாதிரி அந்தக் காலத்துல கதாநாயகன் மாதிரி வருணிக்கப்பட்ட ராமனுக்கும். கிருஷ்ணனுக்கும் கோயில் கட்டிபுட்டான். அந்தப் புத்தகங்கள்ல சொல்லப்பட்டிருக்கிற விஷயங்கள எடுத்துக்கணும். ஆசாமிய விட்டுடணும்.. காலப்போக்குல என்னாச்சுன்னா.... லட்சக்கணக்கான மக்கள், இவங்களை கும்பிட ஆரம்பிச்சிட்டான்னு தெரிஞ் சதும், அவுங்களை வச்சி கட்சி கட்ட ஆரம்பிச்சிட்டான் அரசியல்வாதி. அவனுக்குத் தெரியும் ராமன் ஆண்டவன் இல்லேன்னு. ஆனா, அதை வச்சிப் பொழப்பு நடத்தப் பாக்குறானுங்க களவாணிப்பசங்க. புராணங்கள்லே சொல்லப்பட்டிருக்கிற கதாபாத்திரங்கள வச்சித்தான் நம்ம ஜனங்கள அடிமையா ஆக்கிவச்சிருக்கான். நரகாசுரன் கதையை வச்சி தீபாவளி

*அலுவலக் கோப்பை படிக்கவோ, முடிவெடுக்கவோ அவர் எடுத்துக் கொள்ளும் கால அளவு மிக அதிகம்''*

*''பிடிக்காத பிரச்சினையுள்ள ஒருவரை இன்னொரு வேளை பார்க்கும் போது பழையவற்றை அதை மறக்க மாட்டார்.''*

*-இவையெல்லாம் யாருடைய குணநலன்கள்?*



*காமராஜருடையதா....?*

*அல்லது, இந்தக்காலத்தில் நம்மிடையே காணப்படும் அரசியல்வாதிகளுடையதா?*

*மேலே காணப்படும் அனைத்து விஷயங்களையும் எதிர்மறையாக வாசித்துப் பாருங்கள்! அதுதான் காமராஜருடைய குணம்!*

*அதுதான் பெருந்தலைவர்!*

■

கொண்டாடுறான். நவராத்திரி கதையைச் சொல்லி சரஸ்வதி பூஜை பண்றான். விக்னேஸ்வரனைச் சொல்லி விநாயகருக்குக் கொழுக்கட்டை பண்றான். இது மாதிரி ஏற்பாடுகளை செஞ்சி ஏழை ஜனங்களையும், பாமர ஜனங்களையும் தன்னோட மதத்தின் பிடிக்குள்ளேயே வச்சிப் பொழப்பு நடத்தறான்.''

''தீமிதி, பால் காவடி, அப்படீன்னு மனிதனைச் சிந்திக்க வைக்காத எந்த விஷயமும் சமுதாயத்துக்குத் தேவையில்ல.''

''பெத்த தாய்க்குச் சோறு போடாதவன் மதுரை மீனாட்சிக்குத் தங்கத் தாலி வச்சிப் படைக்கலாமா?''

''ஏழை வீட்டுப் பெண்ணுக்கு ஒரு தோடு, மூக்குத்திக்குக் கூட வழியில்ல. இவன் லட்சக்கணக்கான ரூபாயில வைர ஒட்டியாணம் செஞ்சி காளியாத்தா இடுப்புக்குக் கட்டி விடறான். கறுப்புப் பணம் வச்சிருக்கிறவன் திருப்பதி உண்டியல்ல கொண்டு போய்க் கொட்றான். அந்தக் காசில ரோடு போட்டுக் கொடுக்கலாம், ரெண்டு பள்ளிக்கூடம் கட்டிக் கொடுக்கலாமில்லையா? அதையெல்லாம் செய்யமாட்டான். சாமிக்குத்தம் வந்திடும்னு பயந்துகிட்டு செய்வான்.''

''மதம், மனிதனை பயமுறுத்தி வைக்குதே தவிர, தன்னம்பிக்கையை வளர்த்திருக்கா? படிச்சவனே அப்படித்தான் இருக்கான்னேன்''

''அடுத்த மனுஷன் நல்லாருக்கணும் கிறதுதான் வழிபாடு! ஏழைகளுக்கு நம்மாலான உதவிகளைச் செய்யணும் கிறதுதான் பிரார்த்தனை. இதுல நாம சரியா இருந்தா, தெய்வம்னு ஒண்ணு இருந்தா, அது நம்ம வாழ்த்தும்னேன்''

இவ்வளவும் சொன்ன காமராஜ் இஸ்லாமிய, கிறிஸ்துவ மதங்களையும் விட்டு வைக்கவில்லை, இதோ அவை பற்றிய கருத்துகள்:

''அரேபியாவிலே இருக்கிறவன் அல்லான்னான், ஜெருசலத்தல இருக்கிறவன் கர்த்தர்ன்னான்..... அதிலேயும் சிலபேரு மேரிய கும்பிடாதேன்னான். கிறிஸ்துவ மதத்திலேயே ஏழு, எட்டு டெனாமினேஷன் உண்டாக்கிட்டான்.''

அப்பாடா! என்ன மாதிரியான கருத்துக்கள்!

சிந்தித்து சீர்தூக்கிப் பார்க்கக்கூடிய கருத்துக்கள்தான்!!

**நன்றி: நக்கீரன்**

**R.DIS.NO.56273/97-E**

*With Best Compliments from :*

TÜV CERT
ISO 9001 : 2000
Certificate Regn. No
04100 2004 7057 IND
RWTÜV

eagle diaries

# eagle press

'DIARY HOUSE'
No. 35, M.S. Koil St., Chennai - 600 013. INDIA.
Fax : 044-2595 6463
E-mail : contact@eaglediaries.com
Website : www.eaglediaries.com

Telephone : 2595 2694 / 2595 2695 / 25952696

Published and Owned by M. Xavier Chandrakumar at 1/448, Pillaiyar Koil Street, Kelambakkam, Kanchipuram Dist., - 603 103 and Printed by Syed Azamadullah, at Sharp Printers, 324, Triplicane High Road, Triplicane, Chennai - 5. Editor : M. Xavier Chandrakumar




AVE MARIA